
# முன்னோடி

நன்கொடை : ரூ. 4.00
12 — 1,2,3
செப். — பிப். '98 — '99



## கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் :

## காவி பயங்கரவாதத்திடம் மண்டியிட வேண்டுமா மதச்சிறுபான்மையினர்?

www.padippakam.com

# கொசாவா மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்போம்!

ஜனவரி 17 அன்று யூகோஸ்லாவியாவின் கொசாவா பகுதியின் தலைநகரான பிரிஸ்டினியாவிலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவிலுள்ள, மலை அடிவார கிராமமான ரகாக்கில், 50க்கும் மேற்பட்ட அல்பேனியச் சிறுபான்மையினரை செர்பிய இனவெறி ராணுவம் படுகொலை செய்தது. இந்தச் செய்தி உலகம் முழுவதுமுள்ள சனநாயக சக்திகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. கடந்த ஓராண்டாக செய்தித்தாள்களில் எழுதப்பட்டு வரும் கொசாவா தேசிய இன விடுதலைப் போராட்டத்தை, இந்நிகழ்ச்சி மேலும் தீவிரப் படுத்தியுள்ளது.

1998 ஜனவரியில் கொசாவா விடுதலைப்படை(KLA) ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியது. கொசாவா ஜனநாயக முன்னணி (DLK) பல ஆண்டுகளாக கடைப் பிடித்த பயனற்ற அமைதிவழிப் பாதையை வெறுத் தொதுக்கியபின், 1996ல் கே.எல்.ஏ. உருவாக்கப் பட்டது. அதிலிருந்து அது ஏனைய அமைப்புகளை ஓரங்கட்டி விட்டு, மக்களின் இதயத்தில் இடம் பெற்றுள்ளது. ஜூன் 98 வாக்கில் அது, கொசாவாவின் மூன்றில் ஒரு பங்கு பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது.

'98 அக்டோபர் 7லிருந்து மாணவர்களின் போர்க்குண மிகுந்த ஊர்வலங்கள் தொடங்கின. அவை பெரும்பாலும் செர்பிய படையுடனான மோதல்களில் முடிந்தன. ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்ட பின், ஒரு பிரிவு மக்கள் இயக்கத்துக்குள் ஈர்க்கப்பட்டனர். சென்ற ஆண்டு கே.எல்.ஏ. செர்பியப் படைகள் மீதான கெரில்லா தாக்குதல்களை அதிகரித்து. கே.எல்.ஏ. யின் தலைவர் (குடும்பம் முழுவதும்) உட்பட 50 மக்கள் செர்பிய கூலிப்படையினரால் படுகொலை செய்யப்பட்டதானது போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. கே.எல்.ஏ. முக்கியச் சாலைகளைக் கைப்பற்றியது. சென்ற ஜூன் இறுதியில் கொசாவாவின் தலைநகரின் அருகிலுள்ள யூகோஸ்லாவியாவின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கத்தைக் கைப்பற்றியது. அது மட்டுமின்றி, தனது பலமான பகுதியான மாலிசெலோவில் பதுங்கு குழிகளையும், காப்பரண்களையும் அமைத்தது (இப்பகுதி 98 ஜூலையில் கொடூரமாக ஒடுக்கப்பட்டது) கே.எல்.ஏ. கொசாவாவின் 2வது பெரிய நகரான ட்ரென்சியாவிலும் செர்பிய படைகளை எதிர்த்து தீவிரமாகப் போராடியது.

தமது கொடூரச் செயல்பாடுகளுக்குப் பெயர் பெற்ற, செர்பியப் படைகள் கொசாவாவின் மீதான தாக்குதல்களை அதிகரித்தன. கே.எல்.ஏ. விற்கான பொருட்கள் போக்குவரத்து வழிகளை முடமாக்க அல்பேனியாவின் எல்லையிலுள்ள கிராமங்களையும் கூட செர்பியர்கள் குண்டு வீசித் தகர்த்து வருகின்றனர். 1998 ஜூன் வாக்கிலேயே மக்கள் தொகையில் பாதிப்பேர் கிராமங்களை விட்டு அல்பேனியாவிற்கு அகதிகளாகச் சென்று விட்டனர்.




### கொசாவா தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு

கொசாவா என்ற சிறிய பிரதேசத்தின் மக்கள் தொகை 20 லட்சமாகும். இதில் 90% சதவீதத்தினர் பெரும்பாலும் முஸ்லீம்களாக உள்ள அல்பேனியர்களாவர். மீதமுள்ள 10% சதவீதத்தினர், குரோஷியாவிலிருந்து அகதிகளாக வெளியேறிய செர்பியர்கள். அருகாமையிலுள்ள மாசிடோனியாவிலும் 25% மக்கள் அல்பேனியர்கள் அவர்களும் தமது அரசாங்கத்தை எதிர்த்து சுயாட்சிக்காகப் போராடி வருகின்றனர்.

சோவியத் சமூக ஏகாதிபத்தியம் சிதறிய பிறகு, யூகோஸ்லாவியாவில் செர்பிய ஒடுக்குமுறைக்கெதிரான தேசிய இன போராட்டங்கள் வெடித்தெழுந்தன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் பல்வேறு தேசிய இன உருவாக்கங்களையும், ரசியா ஸ்லாவிக் செர்பிய பெரும்பான்மையையும் ஆதரித்து வருவதால், இந்த ஏகாதிபத்திய உள் முரண்பாடுகளால் நிலைமை மேலும் சிக்கலாகியது. இன்று, அதிபர் ஸ்லோபோடோன் மிலோசெவிக்கின் சோசிலிஸ்ட் கட்சி, தீவிர தேசியவாத செர்பிய ராடிகல் கட்சியின் துணையோடு யூகோஸ்லாவியாவின் எஞ்சிய பகுதியை ஆட்சி புரிந்து வருகின்றது. ஏற்கனவே குரோஷியா, மாசிடோனியா போஸ்னியா ஆகிய தேசிய இனங்கள் பிரிந்து சென்று விட்டது நாம் அறிந்ததே. மீதமுள்ள யூகோஸ்லாவியாவிலும் கூட செர்பிய பகுதி மட்டுமே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. மற்ற இரு பகுதிகளில் கொசாவாவில் அரசுக் கட்டுப்பாடு இல்லை என்றே கூறலாம். மாண்டேநெக்ரோவில் பிரிவினை கோரும் கட்சி, மிலோசெவிக்கின் கட்சியைத் தோற்கடித்து விட்டது.

கொசாவா மக்கள் அல்பேனியர்களாக இருப்பினும்,

(21-ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

போராட்டமே
வாழ்வின் விதி!



மாணவர் – இளைஞர்
**முன்னோடி**
முற்போக்கு மாணவர்
இளைஞர் இதழ்

12 – 1,2,3
செப். – பிப். '98 – '99

தனி இதழ் : ரூ. 4.00
ஆண்டு சந்தா : ரூ. 36.00

ஆசிரியர்
மற்றும்
வெளியீட்டாளர்

**பாஸ்கர்**
33/16, இராணி அண்ணாநகர்,
கே. கே. நகர்,
சென்னை – 78.

## கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் : காவி பயங்கரவாதத்திடம் மண்டியிட வேண்டுமா மதச்சிறுபான்மையினர்?

கடந்த பல ஆண்டுகளாக முஸ்லீம்கள் மீது கொடூர தாக்குதல்கள் நடத்தி வந்த ஆர்.எஸ்.எஸ். காவிப்படையின் பார்வை இப்பொழுது கிருஸ்தவர்கள் மீது திரும்பியுள்ளது. தாக்குதலுக்கான தனது புது இலக்காக கிருஸ்தவர்களைத் தீர்மானித்துள்ளது. 'சிறுபான்மை எதிர்ப்பு' என்ற தனது அடிப்படைக் கோட்பாட்டிற்கேற்ப கடந்த காலத்தில் அவ்வப்போது கிருஸ்தவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தியிருப்பினும், இந்து ராஜ்யத்தைக் கட்டி அமைக்கும் தனது திட்டத்தை நடைமுறைப்படுத்திட, கிருஸ்தவர்களை முக்கிய இலக்காகக் கொண்டு, அவர்களை மையப்படுத்தி தாக்குவதை இந்துமத வெறிக்கும்பல் தனது புதிய வழிமுறையாக கடந்த ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறது. உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம், ஒரிஸா, ராஜஸ்தான், கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் சங்பரிவார் வானரங்கள் கிருஸ்தவர்கள் மீது தொடர்ச்சியாக திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தி வருகின்றன. கடந்த 1998இல் மட்டும் நாடு முழுவதும் கிருஸ்தவர்கள் மீது 90க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடந்திருப்பதாகவும், குறிப்பாக தெற்கு குஜராத்தில் மட்டும் கடந்த ஆறுமாதங்களில் 40க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடந்திருப்பதாகவும் பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன. கிருஸ்தவர்களை அச்சுறுத்துதல், தேவாலயங்களை எரித்தல், கல்வி நிறுவனங்களைத் தாக்குதல், கன்னியாஸ்திரிகளை பாலியல் பலாத்காரம் செய்தல் என இந்துமத வெறித் தாக்குதலின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. ஆட்சி பீடத்திலிருக்கும் பா.ஜ.க.வின் துணையோடு சங்பரிவார் இக்கொடிய தாக்குதல்களை வெளிப்படையாக நடத்திவருகிறது. இக்கும்பலின் தலைவர்களோ, கிருஸ்தவர்களின் மீதான தாக்குதலை 'தேசபக்த' செயலாக பாராட்டி வெளிப்படையான அறிக்கைகள் விடுகின்றனர்.

சென்ற ஆண்டு மத்திய பிரதேசத்தில் ஜபுவா எனும் இடத்தில் நான்கு கன்னியாஸ்திரிகள் பஜ்ரங்தள் வானரங்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டபோது, விசுவ இந்து பரிஷத் துணைத் தலைவரான சர்மா, "தேச விரோத கிருஸ்தவர்களுக்கு எதிரான தேசபக்த இளைஞர்களின் எழுச்சி" என பாலியல் பலாத்காரம் செய்த பொறுக்கிகளுக்கு புகழாரம் சூட்டினார். முதலில் இச்சம்பவத்தைக் கண்டிப்பதாக அறிக்கை விட்ட மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி அதன் பின்னர் காவல்துறை மூலம் சில கிருஸ்தவ இளைஞர்களையும் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்து விட்டு, 'இச்சம்பவத்திற்கும் சங்பரிவாருக்கும் சம்பந்தமே இல்லை' என அறிக்கைவிட்டு பாலியல் பலாத்காரம் செய்த காவிக்கூட்டத்தைக் காத்து நின்றார். (சங்பரிவாரின் இந்து மதவெறியை எதிர்ப்பதாக முழங்கி வரும் காங்கிரசு கட்சி ஆட்சி நடத்தும் மத்திய பிரதேசத்தில், அரசின் முழு ஒத்துழைப்போடு தான் இந்த நாடகம் அரங்கேறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்). கர்நாடக மாநிலத்தில் கிருஸ்தவர்கள் நடத்தி வரும் கல்வி நிறுவனங்களை தங்களது முக்கிய இலக்காகத் தீர்மானித்தது இந்துமதவெறிக்கும்பல். 1998 ஜூலை மாதம் பஜ்ரங்தள் 'கிருஸ்தவ கான்வென்ட் பள்ளிகளின் இந்திய விரோத பண்பாட்டுக்கு எதிரான இயக்கம்' என்ற பெயரில் கர்நாடகாவில் பெல்லாரி, ஹூப்லி, மந்தியா, தும்கூர், மைசூர், மங்களூர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கிருஸ்தவர்களுக்கு எதிராக இந்து மத வெறியைத் தூண்டிவிடும் இயக்கத்தை மேற்கொண்டது. அதன் பின்னர் கிருஸ்தவர்கள் நடத்திவரும் பள்ளிகளுக்குள் நுழைந்த காவிப் பட்டாளம் 'மாணவர்கள் இந்துத்வா பண்பாட்டின் படியான உடைகளை அணிவது, இந்து முறைப்படி வழிபாடு நடத்துவது, மதமாற்றம் செய்வதை நிறுத்துவது' உள்ளிட்ட பல்வேறு கட்டளைகள் அடங்கிய மனுவை பள்ளி முதல்வரிடம் கொடுத்தது. இக்கட்டளைகளை உடனடியாக பின்பற்றவில்லை எனில் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என பள்ளி முதல்வரையும், ஆசிரியர்களையும் மிரட்டியது. பல பள்ளிகளில் தாக்குதல் நடவடிக்கைகளிலும் இறங்கியது. 1998 ஜூலை 17ஆம் நாளன்று ஹூப்லி மாவட்டம், கேசவ்பூரில் உள்ள புனித இருதயம் கான்வென்ட் பள்ளி மீது தாக்குதல் கொடுக்க பஜ்ரங்தள் திட்டமிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

பஜ்ரங்தள்ளின் திட்டம் பற்றி முன்னதாகவே தகவல் அறிந்த பள்ளி முதல்வர் காவல்துறையை அணுகினார். பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்த காவல்துறை அதிகாரிகள், பள்ளிக்கூட வாசலில் சில போலீசாரை பாதுகாப்பிற்கு நிறுத்தினர். வகுப்புகள் துவங்கிய சிறிது நேரத்தில் 100 பஜ்ரங்தள் உறுப்பினர்கள் பள்ளிக்கு வந்தனர். அவர்களில் 20 பேரை பள்ளிக்குள் நுழைய விட்டனர் காவல்துறையினர். உள்ளே நுழைந்த காவிப் பட்டாளம் காவல்துறையினருக்கு முன்பாகவே பள்ளியில் இருந்த சிலுவை, பள்ளி நிறுவனர் படம் ஆகியவற்றை தூக்கி எறிந்துவிட்டு 'பாரத மாதா(?) படத்தை மாட்ட முயற்சித்தது. இறுதியில் 10 நாட்களில் திரும்பவும் வருவதாக மிரட்டிச் சென்றது. **'மதசார்பின்மை' பற்றி வாய் கிழிய பேசும் ஜனதாதளம் ஆட்சிபுரியும் கர்நாடகாவில் காவல்துறையினர் முன்னிலை வகிக்க இந்த இந்துமதவெறி நாடகம் அரங்கேறியது.** மைசூர்சாமுண்டி புரத்தில் உள்ள மேரி கான்வென்ட் பள்ளியில் நுழைந்த சுமார் 250 பஜ்ரங்தள் குண்டர்கள் ஆசிரியைகளை சூழ்ந்து கொண்டு, மத மாற்றம் செய்வதாகக் குற்றம் சாட்டி மோசமான வார்த்தைகளால் திட்டினர். இதனை எதிர்த்த ஆசிரியை ஒருவரை கன்னத்தில் அறைந்தனர். இவை தவிர பெங்களூரிலும், பிற நகரங்களிலும் கான்வென்ட் பள்ளிகளில் மிரட்டல்களும், தாக்குதல்களும் நடந்திருக்கின்றன.

சங்பரிவாரின் கிருஸ்தவர்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல் பா.ஜ.க.ஆளும் குஜராத் மாநிலத்தில் உச்சகட்டத்தை அடைந்தது. இம்முறை 'இந்து ஜாக்ரன் மஞ்ச்' என்ற அமைப்பின் பெயரில் தாக்குதல்களை காவிப்பட்டாளம் நிகழ்த்தியுள்ளது. இத்தாக்குதல்களுக்கு குஜராத் அரசு முழு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. தெற்கு குஜராத்தில் உள்ள டேங்ஸ் மாவட்டத் தலைநகரான அகுவா எனும் நகரில் கிருஸ்தவர்களின் மதமாற்றத்தைக் கண்டித்து இந்து ஜாக்ரன் மஞ்ச் என்ற பெயரில் விசுவஇந்து பரிஷத், பஜ்ரங்தள், பாரதிய ஜனதா ஆகிய அமைப்புகள் இணைந்து கிருஸ்துமஸ் நாளன்று பேரணி நடத்தின.

**"தெருவோரங்களில் கேட்பாரற்றுக் கிடக்கும் பிள்ளையார் சிலையின் மீது தெரு நாய் மூத்திரம் பெய்துவிட்டாலே, 'சிறுபான்மையினர் சதி' என வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கும் இந்துமத வெறியர்கள், கிருஸ்தவர்கள் வழிபாடு நடத்தும் இடங்களை கொளுத்தி விட்டு, அவை வெறும் குடிசைகள்தான் என வியாக்யானம் செய்கின்றனர்.**

இந்த அமைப்புகள் தொடர்ச்சியாக நடத்திவரும் மதவெறி பிரச்சாரத்தை தடுக்கக்கோரியும், கிருஸ்துமஸ் நாளன்று பேரணி நடத்த அனுமதிக்க வேண்டாம் என்றும் கிருஸ்தவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் பரத்ஜோஷியிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரோ, பேரணிக்கு அனுமதி அளித்தது மட்டுமின்றி, இந்துமத வெறியர்கள் நடத்திய பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தில் கலந்தும் கொண்டார். மேடையில் அவருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. சுமார் 4000 பேர் கலந்து கொண்ட இப்பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தில் கிருஸ்தவர்களுக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பொதுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையிலேயே கிருஸ்தவர்களை மோசமான வார்த்தைகளால் திட்டியும், கேவலமாக பேசியும் உரைகள் நிகழ்த்தப்பட்டன. பொதுக்கூட்டம் முடிவுற்றவுடன், இந்துமதவெறியர்கள் கிருஸ்தவர்கள் மீது தாக்குதலைத் துவங்கினர். கிருஸ்தவர்கள் வழிபடும் இடங்கள், பள்ளிகள், கிருஸ்தவர்களின் கடைகள் தாக்கப்பட்டன. அகுவா நகரம் தவிர சுபிர், ஜம்லாபடா, காத்வி, திவன் டெம்ரூன், மதக்காடி, பதல்காடி ஆகிய பகுதிகளில் கிருஸ்தவ தேவாலயங்கள், வீடுகள் தாக்கப்பட்டன. சில பகுதிகளில் கொளுத்தப்பட்டன. டிசம்பர் 26 அன்று மாநில உள்துறை அமைச்சர் ஹிரன் பாந்த்யா அகுவா நகரை பார்வையிட்டார். ஆனால் அதே நாளன்று அகுவா நகருக்கு ரிகவுர் அருகிலுள்ள வாகி என்ற கிராமத்திற்கு காட்டிலாகாவிற்கு சொந்தமான ஜீப்பில் சென்ற இந்துமதவெறிக்கும்பல் ஒன்று அங்கிருந்த தேவாலயத்தை தீயிட்டுக் கொளுத்தியது. அதே போல காரடியம்பா, பெகதூன் கிராமங்களில் உள்ள தேவாலயங்கள் தாக்கப்பட்டன. இத்தகைய தாக்குதல்கள் பல நாட்களாகத் தொடர்ந்தன. டிசம்பர் 27, 28, 29 ஆகிய நாட்களில் முல்சாந்த், லகன்கட்மால், பார்தா, பரிப்பாடா, ராவோசாந்த், கரஞ்பாடா, பிபல்தகாத், கவுஜன் ஆகிய பகுதிகளில் வன்முறைத் தாக்குதல்கள் நடந்தேறின. கிருஸ்தவர்கள் கட்டி வைத்து தாக்கப்பட்டனர். மதல்பாரி என்ற இடத்தில் தேவாலயம் தாக்கப்பட்டது. வன்முறைத்தாக்குதல்கள் சூரத் மற்றும் பரூச் மாவட்டங்களுக்கும் பரவின. சூரத் மாவட்டத்தில் இரு தேவாலயங்கள் கொளுத்தப்பட்டதுடன், மற்றொரு தேவாலயத்தில் விசுவ இந்து பரிஷத் கொடி ஏற்றப்பட்டது. இப்படியாக வன்முறைத் தாக்குதல்கள் பெருகிக் கொண்டிருக்க கேசுபாய் பட்டேலின் பா.ஜ.க.அரசோ கைகட்டி வேடிக்கை பார்த்தது. பல இடங்களில் இந்து மத வெறியர்களுக்கு தாக்குதல்களின் போது முழு ஒத்துழைப்பும் வழங்கியது. அனைத்து தாக்குதல்களையும் விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள், பா.ஜ.க. இந்து ஜாக்ரன் மஞ்ச் உறுப்பினர்கள் இணைந்து நடத்தினர்.

கிருஸ்தவர்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராகவும், பா.ஜ.க.அரசுக்கு எதிராகவும் நாடு முழுவதும் மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. மக்களின் எதிர்ப்பைக் கண்டதும் காங்கிரசு, ஜனதாதளம் உள்ளிட்ட அனைத்து எதிர்கட்சிகளும் வழக்கமான தங்களது தேர்தல் அரசியலைத் துவங்கின. குஜராத் அரசைக் கலைக்கும்படி ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்தனர். பா.ஜ.க.வின் கூட்டாளிகளான சமதாகட்சி, அ.தி.மு.க., திரிணாமுல் காங்கிரசு, லோக்சக்தி ஆகிய கட்சிகள் குஜராத் அரசைக்


படிப்பகம்

www.padippakam.com

கண்டித்தன. தாங்கள் ஆட்சி புரியும் மாநிலங்களில் இந்துமதவெறியர்களை ஒடுக்க வக்கற்ற காங்கிரசு, ஜனதாதளம் உள்ளிட்ட எதிர்கட்சிகள், சிறுபான்மையினர் உரிமைகளின் காவலர்கள் போல நாடகமாடினர். பெருகி வரும் எதிர்ப்பை மட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பிரதமமந்திரி வாஜ்பாய் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி ஆகியோர் கிருஸ்தவர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து அறிக்கை விட்டனர். 'வன்முறையை இந்துமதம் ஏற்றுக்கொள்ளாது' எனவும், 'இந்துமதம் சகிப்புத் தன்மை கொண்டது' எனவும் முழங்கினர். **(பிற மதங்களை ஒடுக்குவதையே தனது முக்கிய உள்ளடக்கமாகக் கொண்டுள்ள இந்துமதம் எந்தக் காலத்தில் வன்முறையை எதிர்க்கவும், சகிப்புத் தன்மையை போதிக்கவும் செய்தது என்பதை இவர்கள் தான் கூறவேண்டும்.)**

உள்துறை சிறப்புச் செயலர் எம்.பி.கவுசல், இணைசெயலர் சந்திப்பக்ஷி ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை உள்துறை அமைச்சகம், கண்துடைப்பாக குஜராத்துக்கு அனுப்பி வைத்தது. இக்குழுவானது குஜராத்தில் தாக்கப்பட்ட மக்களை சந்திக்காமல், அதிகாரிகளை மட்டும் சந்தித்து விட்டு தனது அறிக்கையை அளித்தது.

'தனது அறிக்கையில்' கிருஸ்துமஸ் அன்று இந்து ஜாக்ரன் மஞ்ச் பேரணி நடத்த அரசு அனுமதித்திருக்க வேண்டியதில்லை' என்று மட்டும் கூறியது. அதே வேளை குஜராத் முதல்வர் கேசுபாய் பட்டேலும், உள்துறை அமைச்சர் பாந்த்யாவும் தாக்குதல்களில் ஈடுபட்ட இந்துமதவெறியர்கள் மீதும், அவர்களுக்கு ஒத்துழைப்பு தந்த அதிகாரிகள் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களுக்கு வக்காலத்து வாங்கினர். 'தாக்குதல் சம்பவங்கள் சிறிய அளவில் நடந்தவை; ஆங்கில பத்திரிக்கைகள் தான் இப்பிரச்சனையை பெரிது படுத்திக் காட்டுகின்றன' என அறிக்கை விட்டனர். டிசம்பர் 25 முதல் நடந்த தாக்குதல்களில் சேதமடைந்தது வெறும் 4 இலட்சம் ரூபாய் மதிப்புடையவைதான் என அறிவித்தனர். கேசுபாய் பட்டேல் ஃப்ரன்ட்லைன் இதழுக்கு அளித்த பேட்டியில் வெளிப்படையாக இந்துமத வெறியர்களை ஆதரித்தும், கிருஸ்தவர்களை தாக்கியும் பேசினார். 'கிருஸ்துமஸ் நாளன்று இந்து ஜாக்ரன் மஞ்ச் நடத்திய பேரணி அமைதியாக நடந்தது. இப்பேரணியின் மீது கிருஸ்தவர்கள் கல்வீசி தாக்கியதால் பிரச்சனை துவங்கியது. அதன் பின்னர் கிருஸ்தவர்கள் அருகிலிருந்த அனுமான் கோயிலை உடைத்தவுடன் ஆதிவாசிகள்(?) திருப்பித் தாக்கியதுடன், கிருஸ்துவர்கள் வழிபாடு நடத்தும்(?) 'ஒரிரு' இடங்களை தீயிட்டுக் கொளுத்தினர்' எனக்கூறி பொய் பேசுவதில் கின்னஸ் சாதனை படைத்தார். 'இக்கலவரத்துக்கு கிருஸ்தவர்களின் கட்டாய மதமாற்றமே காரணம்' என குற்றம் சாட்டினார். அத்துடன் ஆரம்பத்தில் டேங்ஸ் மாவட்டத்தில் 500 முதல் 700 கிருஸ்தவர்கள் மட்டுமே இருந்ததாகவும், கடந்த 20 ஆண்டுகளில் மதமாற்ற நடவடிக்கைகளின் காரணமாக கிருஸ்தவர்களின் எண்ணிக்கை 60,000 ஆக உயர்ந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் 1991ஆம் ஆண்டின் அரசு கணக்கெடுப்பின் படி டேங்ஸ் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 1,44,091; அதில் கிருஸ்தவர்களின் எண்ணிக்கை 7,824 ஆகும். மேலும் கட்டாய மதமாற்றம் குறித்து ஆதாரம் எதுவும் உள்ளதா என்ற கேள்விக்கு, இல்லை என பதிலளித்துள்ளார். உண்மையில் இந்து மதத்தின் ஆதிக்க சாதி ஒடுக்குமுறையின் காரணமாகவே சமூகத்தின் பெரும்பான்மை மதமாற்றம் நிகழ்கிறது. மேலும் வன்முறை சம்பவங்கள் பற்றி கேசுபாய் பட்டேல் கூறுகையில், 'வன்முறை சம்பவங்கள் மிகச்சிறிய அளவில் நடந்தன; ஒருவர் கூட சாகவில்லை (சாகவில்லை என்பதில் மிகவும் வருத்தப்படுகிறார் போலும்); அப்படி இருக்கையில் 'ஆங்கில பத்திரிக்கைகள் தான் மிகைப்படுத்தி விட்டன' என்றார். அத்துடன் கொளுத்தப் பட்டவை எதுவும் கிருஸ்தவ தேவாலயங்கள் இல்லை, கிருஸ்தவர் கூடி வழிபாடு நடத்தும் குடிசைகள் தான்' என தேவாலயத்திற்கும், வழிபாடு நடத்தும் குடிசைக்கும் மாபெரும் வேறுபாட்டை அதிபுத்திசாலித்தனமாக(?) கண்டு பிடித்துள்ளார் குஜராத் முதல்வர். தெருவோரங்களில் கேட்பாரற்றுக் கிடக்கும் பிள்ளையார் சிலையின் மீது தெரு நாய் மூத்திரம் பெய்துவிட்டாலே, 'சிறுபான்மையினர் சதி' என வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கும் இந்துமத வெறியர்கள், கிருஸ்தவர்கள் வழிபாடு நடத்தும் இடங்களை கொளுத்திவிட்டு, அவை வெறும் குடிசைகள்தான் என வியாக்யானம் செய்கின்றனர். மறுபுறத்தில் பல தளங்களில் பா.ஜ.க.வுக்கு எதிர்ப்பு வலுப்பதைக் கண்ட மத்திய அரசு வேறு வழியின்றி நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேசுபாய் பட்டேலைக் கேட்டுக் கொண்டது.

குஜராத் அரசும் ஒப்புக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் பரத்ஜோஷியை பதவி மாற்றம் செய்தது. இந்து ஜாக்ரன் மஞ்ச் மாவட்டத் தலைவர் ஜானுபாய் பௌரி, பஜ்ரங்தள் மாவட்டத்தலைவர் சுனில் சௌத்ரி, பகுதி செயலர் பிரதீப் பட்டீல், மாவட்ட பா.ஜ.க. பொதுச்செயலர் ஆகியோரை கைது செய்தது. ஜனவரி 10ஆம் நாளன்று வாஜ்பாய் குஜராத் சென்று கலவரப் பகுதிகளை பார்வையிட்டார். சங்பரிவார் தலைவர்களையும், கிருஸ்தவ பிரதிநிதிகளையும் சந்தித்தார். அப்பொழுது காந்தியவாதிகளான சர்வோதய தலைவர்கள் கெலுபாய் நாயக் மற்றும் வைத்யா ஆகியோர் வாஜ்பாயை சந்தித்து, 'கிருஸ்தவர்கள் மீது புகார் பட்டியலைக் கொடுத்தனர். சங்பரிவாரைக் காட்டிலும் ஒரு படி மேலே போய் கிருஸ்தவர்களைத் தாக்கினர். கிருஸ்தவர்கள் மலைவாழ் மக்களை வன்முறைக்குத் தூண்டி விடுவதாகவும், கடந்த 5 ஆண்டுகளில் சுமார் இரண்டு டஜன் சிவன், அனுமான் சிலைகள் அவமதிக்கப்பட்டதாகவும் நாயக் குற்றம் சாட்டினார்.

'கிருஸ்தவர்கள் மலைவாழ் மக்களை மதமாற்றம் செய்வதைத் தடுக்கும் வகையில் 'சமூக சேவை' செய்யும்படி தன்னையும் தனது சகோதரர் சோட்டுபாயையும் 1948ஆம் ஆண்டு வல்லபாய் பட்டேல் அப்பகுதிக்கு அனுப்பி வைத்ததாகக் கூறிய நாயக், வல்லபாய் பட்டேலின் இந்துமத வெறித்தனத்தை உலகிற்கு அறிவித்தார். வைத்யாவோ, 'மதமாற்றத்திற்கு சட்டபூர்வ தடை கொண்டுவர காந்தியும், வினோபா



படிப்பகம்

www.padippakam.com

பாவேயும் பரிந்துரைத்தனர்' என சுட்டிக் காட்டியதன் மூலம் தன்னையும் அறியாமல் காந்தியையும், வினோபா பாவேயையும் அம்பலப்படுத்தினார். வாஜ்பாய் குஜராத்திலிருந்து திரும்பியவுடன் 'சிறப்பாக நடவடிக்கைகள்' மேற்கொண்டதற்காக குஜராத் அரசை பாராட்டிவிட்டு, சர்வோதய தலைவர்களின் கருத்துக்களை சுட்டிக்காட்டி, 'மதமாற்றம் தான் இக்கலவரத்திற்கு முக்கிய காரணம்; எனவே மதமாற்றம் குறித்து நாடு தழுவிய விவாதம் நடத்தப்பட வேண்டும்' என அறிக்கை வெளியிட்டு சங்பரிவார் வானரங்களை குஷிப்படுத்தினார்.

சங்பரிவார் தலைவர்களோ வெளிப்படையாக கிருஸ்தவர்களுக்கு எதிராக இந்துமதவெறியைத் தூண்டிவிட்டு வருகின்றனர். விசுவஇந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால், 'இந்துத்வாவை அழிக்க கிருஸ்தவர்களின் சர்வதேச சதி' என அலறுகிறார். 'கிருஸ்தவர்கள் தேச விரோதிகள், தேச விரோத பண்பாட்டையும், கருத்துக்களையும் பரப்பி வருகிறார்கள். கிருஸ்தவ எதிர்ப்பு பிரச்சாரத்தை பல சங்பரிவார் தலைவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

குஜராத்தில் காவிப்படை வானரங்கள் கிருஸ்தவர்கள் மீது தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருந்த அதே வேளையில், மகாராஷ்டிராவில் அவர்களது சகவானரங்கள் தங்களது மதவெறி இயக்கத்தை துவங்கிவிட்டன. கடந்த ஜனவரி 5ஆம் நாளன்று மகாராஷ்டிராவில் ஆர்.எஸ்.எஸ் புதிதாக உருவாக்கியுள்ள 'தர்மரக்ஷன் சமிதி' என்ற அமைப்பு நாசிக் அருகில் உள்ள பீத் என்ற இடத்தில் 'விஷால் இந்து சம்மேளன்' என்ற பெயரில் மாநாடு ஒன்றை நடத்தியது. இம்மாநாட்டில் கர்வீர்பீத்–இன் சங்கராச்சாரியான வித்யசங்கர பாரதி 37 கிருஸ்தவ ஆதிவாசிகளை இந்துக்களாக 'மறுமதமாற்றம்' செய்து வைத்தார். இம்மறுமத மாற்றத்திற்கும், மாநாட்டிற்கும் ஒரு சிறுமுன்கதை உண்டு. கடந்த ஆண்டு அக்டோபர் 18 அன்று இம்மாநாடு நடைபெற்ற இடத்திற்கு அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த கிருஸ்தவர்களை இந்துமதவெறியர்கள் தாக்கியதுடன், அங்கிருந்த தேவாலயத்தையும் சேதப்படுத்தினர். அதன் பின்னர் கிருஸ்தவ ஆதிவாசிகளை இந்துக்களாக மறுமதமாற்றம் ஆகுமாறு மிரட்டினர். இதன் தொடர்ச்சியாகவே, அஞ்சி பணிந்துவிட்ட கிருஸ்தவர்களை மறுமதமாற்றம் செய்திடவும், பிற கிருஸ்தவர்களுக்கு கெடுவிதித்திடவுமே இம்மாநாடு நடத்தப்பட்டது.

இம்மாநாட்டில் 'அனைத்து கிருஸ்தவ பள்ளிகளிலும் 'பாரதமாதா பூஜை' நடத்தப்பட வேண்டும். 'மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்கான திட்டங்களின் மூலம் கிருஸ்தவ ஆதிவாசிகள் எவ்வித சலுகையும் பெறக் கூடாது' அங்கீகாரம் பெறாத தேவாலயங்களை அரசு அனுமதிக்கக் கூடாது' உள்ளிட்ட ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் 'மார்ச் 3க்குள் கிருஸ்தவ மிஷனரிகள் பகுதிகளை விட்டு வெளியேற வேண்டும். தவறினால் மோசமான பின் விளைவுகளை சந்திக்க நேரிடும்' என கெடுவிதிக்கப்பட்டது. இம்மாநாட்டில் சங்கராச்சாரி வித்யசங்கர் பாரதி, ''கிருஸ்தவர்களுக்கு ஒரு முறை கூறுவோம், இருமுறை கூறுவோம், மூன்று முறை கூறுவோம், அவர்கள் கேட்கவில்லை என்றால் 'அடுத்த நடவடிக்கையில்' ''இறங்குவோம்'' என பேட்டை ரௌடி போல பேசினார். இம்மாநாடு குறித்து பத்திரிக்கைகளுக்கு பேட்டி அளித்த மகாராஷ்டிரா முதல்வர் முரளிமனோகர் ஜோஷி, இம்மாநாடு பற்றி தனக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், காவல்துறைக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி இருப்பதாகவும் கூறினார். ஆனால் கிருஸ்தவர்களுக்கு கெடுவிதித்த மாநாட்டு தலைவர்கள் மீதோ, ரௌடித்தனமாக பேசிய சங்கராச்சாரி மீதோ இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மொத்தத்தில் அனுமார் வாலில் நெருப்புடன் இலங்கையை சுற்றி வந்து தீயிட்டது போல, இன்று சங்பரிவார் வானரங்கள் அரசின்முழு ஒத்துழைப்புடன் நாடு முழுவதும் இந்துமதவெறி நெருப்பை பரவ விட்டு வருகின்றன.

> **மொத்தத்தில் அனுமார் வாலில் நெருப்புடன் இலங்கையை சுற்றி வந்து தீயிட்டது போல, இன்று சங்பரிவார் வானரங்கள் அரசின்முழு ஒத்துழைப்புடன் நாடு முழுவதும் இந்துமதவெறி நெருப்பை பரவ விட்டு வருகின்றன.**

1992 டிசம்பர் 6 அன்று பாபர் மசூதியை இடித்து, ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லீம் மக்களை நரவேட்டையாடிய ஆர்.எஸ்.எஸ். கூட்டம், இன்று கிருஸ்தவ மக்களின் உதிரம் குடிக்க ஆயத்தமாகி விட்டது. நாடு முழுவதும் இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு சமூகத்தை பாசிச மயமாக்கிட துடிக்கிறது. இந்திய ஆளும் வர்க்கங்களும், மத்திய, மாநில அரசுகளும் இக்கும்பலுக்கு அனைத்து உதவிகளையும் செய்து தருகின்றன. பிற ஓட்டுக்கட்சிகளோ, வாயளவில் சங்பரிவாரை எதிர்த்துவிட்டு, நடைமுறையில் ஆதரித்து நிற்கின்றன. இத்தகைய சூழ்நிலையில், ஹிட்லரின் வாரிசுகளான சங்பரிவார் என்னும் நவீன நாஜிக்களை துடைத்தெறிய வேண்டியது நமது முதன்மைக் கடமையாகும். எனவே, சிறுபான்மை உரிமை காத்திட, இந்துமத வெறியர்களை முறியடித்திட அனைத்து புரட்சிகர, ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரள்வோம்!

**ஜூன் 23ம் தேதி அதிகாலை கொய்ஜகார் மாவட்டத்தில் உள்ள அனந்தபூர் காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட மனோகர்பூர் கிராமத்தில் கிறிஸ்தவ பாதிரியார் ஸ்டுவர்ட் ஸ்டெயின்சும் (58) அவருடைய பிலிப்ஸ் (9) மற்றும் டிமோத்தி (7) என்ற இரு மகன்களும் தூங்கிக் கொண்டிருந்த ஜீப்போடு சேர்த்து உயிரோடு எரித்து கொல்லப்பட்டிருக்கிறார்கள். சங்பரிவார் குறிப்பாக பஜ்ரங்தள்ளினால் நடத்தப்பட்ட இக் கொடூரச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

–ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

மக்கள்
களத்தில் . . .

# முற்போக்கு மாணவர் சங்கம்
# முற்போக்கு இளைஞர் அணி

## மதுரை

☆ மே தினத்தையொட்டி–புதிய ஜனநாயகப் புரட்சிக்கு தொழிலாளர்களை அணிதிரளுமாறு அறைகூவல் விட்டு கையெழுத்து சுவரொட்டி ஒட்டப்பட்டது.

☆ ஜூலை 28 தியாகிகள் தினத்திற்கு நக்சல்பாரி தியாகிகளின் கனவுகளை நனவாக்க சபதமேற்க கையெழுத்துச் சுவரொட்டி ஒட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

☆ ஆக.15 போலிச் சுதந்திர தினத்தை அம்பலப்படுத்தி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

☆ கருணாநிதி அரசு தடாவிற்கு மாற்றாக கொண்டு வந்த பயங்கரவாதச் சட்டமான 'பொடாவை' வாபஸ் வாங்கக் கோரியும், அதன் மக்கள் விரோத தன்மையை அம்பலப்படுத்தியும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

☆ டிசம்பர். 6 அம்பேத்கர் நினைவுநாளை பந்தல்குடியில் விடுதலை சிறுத்தைகள் சார்பாக நடத்திக் கொண்டிருந்த பொழுது, காவல்துறை ஒலிபெருக்கி அனுமதி இல்லை என்ற காரணம் காட்டி கூட்டத்தை தடுத்து, 48 பேரை கைது செய்தது. இதனைக் கண்டித்து மு.இ.அ. சார்பாக கையெழுத்துச் சுவரொட்டி ஒட்டப்பட்டது.

☆ ஈராக் மீதான அமெரிக்க–இங்கிலாந்து தாக்குதலை கண்டித்து சுவரொட்டி ஒட்டப்பட்டது.

## சென்னை

☆ அனைத்து இந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் செயலாளரும் ஆந்திர மு.மா.ச.மாநில செயலாளருமான தோழர். ஜனார்தன் போலீசால் படுகொலை செய்யப் பட்டதை கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

☆ கல்வி முறையில் இந்து மதவெறி பாசிச கருத்துக்கள் புகுத்தப்படுவதை எதிர்த்து மு.மா.ச. வெளியிட்ட துண்டு பிரசுரம் விடுதிகள், கல்லூரிகள், பல்கலைகழகத்தில் விநியோகிக்கப்பட்டது.

☆ விலைவாசி உயர்வை எதிர்த்து மு.இ.அ.,மு.மா.ச. சார்பாக துண்டு பிரசுரம் வினியோகிக்கப்பட்டது. தெருமுனை பிரச்சாரமும் செய்யப்பட்டது.

☆ சென்னை பல்கலை கழகத்தின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து பல்கலை கழக ஆசிரியர்கள் நடத்திய ஆர்பாட்டத்தில் மு.மா.ச.கலந்து கொண்டது.

☆ கல்வி வியாபார மயமாக்கலையும், மாணவர்களின் மீதான ஏகாதிபத்திய பண்பாட்டு தாக்குதலை எதிர்த்தும் சனவரி 20, 21ல் அனைத்து இந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் சார்பாக மும்பையில் நடத்தபட்ட கருத்தரங்கத்திற்கு மாணவர்களை அணி திரளும்படியும் கருத்தரங்க தலைப்புகளை விளக்கியும் துண்டு பிரசுரங்கள் கல்லூரி, விடுதிகளில் வினியோகித்து பிரச்சாரம் செய்யப்பட்டது.

# கைத்தறித் தொழில் நசுக்கப்படுவதற்கு எதிராக...

சுற்றுப்புறச் சூழலுக்கு கேடு விளைவிக்கும் தொழில்கள் பட்டியலில் சாயப்பட்டறைகள் சேர்க்கப்பட்டு, அத்தொழிலையே ஒட்டுமொத்தமாக அழித்துவிடும் அபாய நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக இதனோடு தொடர்பு கொண்ட கைத்தறி நெசவு உட்பட பல உப தொழில்களும் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக மதுரை–செல்லூர், அவனியாபுரம் பகுதிகளில் பல சாயப்பட்டறைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

மக்கள் நலன் காக்கும் நோக்கிலிருந்து அல்லாமல் ஏகாதிபத்திய எசமானர்களுக்கு சேவை செய்யும் நோக்கிலிருந்து மத்திய–மாநில அரசுகள் எடுக்கும் இத்தகைய நடவடிக்கைகளை கண்டித்தும் இந்த தொழில்களை அழிக்காமல் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரியும், கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து 'கைத்தறி தொழில் பாதுகாப்பு குழு' அமைக்கப்பட்டது.

✦ அரசு மான்ய உதவியுடன் சாயப்பட்டறை நீரை சுத்தம் செய்ய கருவிகள் அமைத்திட வேண்டும்.

✦ அரசு–உற்பத்தியாளர்கள் கூட்டுச் சாயப்பட்டறை அமைத்திட வேண்டும்.

✦ நூல், சாய கச்சா பொருட்களை அரசே குறைந்த விலையில் வழங்கிட வேண்டும்.

✦ கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட 22 ரகத்தை கறாராக அமுலாக்கி, கைத்தறி தொழிலை பாதுகாத்திட வேண்டும்.

என்பன உட்பட பல கோரிக்கைகள் வைக்கப்பட்டது. இக்குழு சார்பாக 30.9.98 அன்று கைத்தறி தொழில் பாதுகாப்பு மாநாடு நடத்துவது என்றும், 5.10.98 அன்று செல்லூர் 50அடி ரோட்டிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வரை ஊர்வலம் சென்று ஆர்பாட்டம் செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இப்பகுதியில் தொழிலாளர்கள் மற்றும் மக்கள் மத்தியில் வீச்சாக வேலை செய்து கொண்டிருக்கும் மு.இ.அ. மற்றும் தமிழ் தமிழர் இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளை இக்குழுவில் இணைத்துக் கொள்ள இக்குழுவிற்கு தலைமை தாங்கும் சி.ஐ.டி.யு. மறுத்தது. மேலும் மாநாடு, ஊர்வலம் ஆகியவற்றில் தங்கள் கொடிகளுடன் பங்கேற்க கூடாது என்று தடையும் போட்டது.

தலைமையின் இப்போக்கிற்கு எதிராக மூன்று அமைப்புகளும் ஒன்றாகச் சேர்ந்து 'ஸ்டெர்லைட், டூபாண்ட் போன்ற சுற்றுப்புறச் சூழலுக்கு படுபாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு பல கோடி வரிச்சலுகையும், உள்கட்டமைப்பு வசதியும் செய்து கொடுக்கும் அரசுகள் மறுபுறம் தேசிய, சிறுதொழில்களை அழிக்கும் சதிச் செயல்களை அம்பலப்படுத்தி'' மக்கள் மத்தியில் பிரச்சார இயக்கம் மேற்கொண்டன. மேலும் பாதுகாப்பு குழுவின் அனைத்து நடவடிக்கைகளிலும் தொழிலாளர்களை திரட்டி பங்கெடுத்துக் கொண்டது.

முற்போக்கு இளைஞர் அணி
மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

# இரையாகும் கல்வி

## மதவெறிக்கு


கல்வித்துறையானது, கடந்த கால வரலாற்றையும், அறிவியல் வளர்ச்சியையும் தொகுத்துக் கொண்டு, சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்ப்பதற்கான அடிப்படை அறிவை வழங்கக் கூடிய தாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்வியில் இந்துமதவெறியை திரைமறைவாக புகுத்தி வந்த ஆர்.எஸ்.எஸ்.கும்பல், கடந்த பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு தனது குழந்தையான பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்தவுடன், வெளிப்படையாக அத்திட்டத்தை நிறைவேற்றத் துவங்கியிருக்கிறது. 1991 முதல் 1993 வரை பா.ஜ.க.வின் தலைவராக இருந்த முரளிமனோகர் ஜோஷி மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சராக 1998 மார்ச் மாதம் பதவி ஏற்றதும், கல்வித் துறையில் தனது கைங்கர்யத்தை காட்டத் துவங்கினார். நாட்டின் உயர் ஆய்வு நிறுவனங்களான இந்திய வரலாற்று ஆய்வு கவுன்சில் (ICHR), இந்திய சமூக அறிவியல் ஆய்வு கவுன்சில், இந்திய தத்துவ ஆய்வு கவுன்சில் மற்றும் Indian Institute of advanced studies என்கிற அமைப்பு ஆகிய வற்றில் இந்துமத பாசிசத்தை உயர்த்திப் பிடிக்கும் வரலாற்றாசிரியர்களையும், தத்துவ அறிஞர்களையும் நியமித்தார். இதன் மூலம் இந்திய வரலாற்றை திரித்து எழுதுவதும், கல்வியில் இந்து மதவெறியை புகுத்துவதுமே பா.ஜ.க.வின் நோக்கமாகும். பா.ஜ.க.வின் கல்வியை காவிமயமாக்கும் முயற்சியானது, 1998 அக்டோபர் 22 முதல் 24 வரை நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் உச்சக் கட்டத்தை எட்டியது. இம்மாநாட்டில் முரளிமனோகர் ஜோஷி, பெயர் குறிப்பிடப்படாத 'நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகள்' என்ற அறிக்கையை சமர்ப்பித்தார். இப் பரிந்துரைகள், கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். சின் கல்வி நிறுவனமான வித்யபாரதியின் அனைத்திந்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டவையே.

அத்துடன் பி.டி.சிட்லாங்கியா என்ற ஆர்.எஸ்.எஸ். நபர் 'குறைந்த செலவில் கல்வி' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார் எனவும் அறிவிக்கப்பட்டது. மேலும், மாநாட்டில் 'சரஸ்வதி வந்தனம்' பாடப்பட்டது. இவை அனைத்தையும் எதிர்த்து பா.ஜ.க. அமைச்சர்கள் தவிர மற்ற கல்வி அமைச்சர்கள் அனைவரும் மாநாட்டில் முழக்கமிட்டதுடன் வெளிநடப்பும் செய்தனர். இறுதியில் வேறுவழியின்றி, வித்யபாரதியின் பரிந்துரைகளை வாபஸ் பெறுவதாகவும், பி.டி.சிட்லாங்கியாவின் உரையை ரத்து செய்வதாகவும் முரளிமனோகர் ஜோஷி அறிவித்த பின்னரே மாநாடு தொடர்ந்து நடைபெற்றது.

***நிபுணர்கள் குழுவின் முக்கிய பரிந்துரைகள்:***

- ✦ கல்வியானது முழுமையாக இந்திய மயமாக்கப்பட வேண்டும். ஆன்மீகமயமாக்கப்பட வேண்டும், தேசியமயமாக்கப் பட வேண்டும்.
- ✦ 3ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை சமஸ்கிருதம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். நாட்டின் நான்கு முனைகளிலும் சமஸ்கிருத பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும். முக்கிய சமஸ்கிருத படைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ✦ சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவவும், நிர்வகிக்கவும் உரிமை வழங்கும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 30வது பிரிவு திருத்தப்படவேண்டும். அதன்படி கல்வி நிறுவனங்கள் நிறுவவும், நிர்வகிக்கவும், உரிமையானது சிறுபான்மையினருக்கு மட்டுமின்றி அனைவருக்குமானதாக ஆக்கப்பட வேண்டும்.
- ✦ பெண்களுக்கான பாடதிட்டத்தில் கூடுதலாக, 'வீட்டு பராமரிப்பு பயிற்சி' இணைக்கப்பட வேண்டும்.

முதலாவதாக, 'நமது தற்போதைய




கல்வி முறையானது, ஆங்கிலேயன் விட்டுச் சென்ற மெக்காலேயின் குமாஸ்தா கல்வி முறையே' என்பதை ஒப்புக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். கும்பல், அதற்கு மாற்றாக கல்வியானது இந்திய மயமாக்கப்பட வேண்டும் என்கிறது. இந்தியமயமாக்கப்பட வேண்டும் என்பதன் பொருள் 'கல்வியில் இந்துத்வா' (இந்துமத வாதம்) புகுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

இப்படியாக, 'இந்துமயமாக்கம்' என்பதையே 'இந்தியமயமாக்கம்' என்கிறது ஆர்.எஸ்.எஸ்.

"கல்வியானது இந்துத்வாவில் வேரூன்றி இருந்தால் மட்டுமே தேசத்துக்கு பயன்படும். எனவே இந்துதத்துவமே கல்வி மறுமலர்ச்சியின் அடிப்படை என்பது தெளிவானதாகும்" என வித்யபாரதி வெளியிட்டுள்ள புத்தகம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஜே.எஸ்.வர்மா, "இந்துத்வா என்பது மதமல்ல; அது ஒரு வாழ்க்கை முறை" என தனது தீர்ப்பொன்றில் கூறியுள்ளதை சுட்டிக்காட்டி, அதனால் இந்துத்வாவைக் கல்வியில் புகுத்துவது மதவாதம் ஆகாது என கூறுகின்றது ஆர்.எஸ்.எஸ் கும்பல். இதனடிப்படையில் 'இந்துத்வாவின் உள்ளடக்கமான வேத, உபநிஷத்துக்களையும் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை போதிக்க வேண்டும்' என நிபுணர்கள் குழு பரிந்துரைகள் கூறுகின்றன. வேத உபநிஷத்துக்களே இந்தியாவின் தொன்மையான மரபுகள் எனவும், அவை போதிப்பவையே அறநெறி மற்றும் பண்பாடு எனவும் கூறுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த வேத, உபநிஷத்துக்களை


படிப்பகம்

www.padippakam.com

மாணவர்களுக்கு போதிப்பதன் மூலம் மட்டுமே நன்னெறி கொண்ட, தேசிய உணர்வு கொண்ட தலைமுறையை உருவாக்க முடியும் எனவும் பிரகடனம் செய்கின்றன. உண்மையில் வேத உபநிஷத்துக்கள் போதிக்கும் அறநெறி, பண்பாடு, யாவை? அவை கோரும் சமூக அமைப்பு எது?

ஒரு வகையில் இந்துமத வெறியன், முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஜே.எஸ்.வர்மா கூறியது போல இந்துத்வாவின் உள்ளடக்கமான வேத உபநிஷத்துக்கள் போதிப்பது 'ஒரு வாழ்க்கை முறை' மற்றும் 'சமூக அமைப்பைத்தான்'. அதாவது வேத உபநிஷத்துக்கள் கோருவது, பெரும்பான்மை உழைக்கும் மக்களை தாழ்த்தப்பட்ட சாதியினராகவும், அவர்களை சுரண்டிக் கொழுக்கும் சிறுபான்மையினரை ஆதிக்க சாதியினராகவும் கொண்ட 'சாதிய சமூக அமைப்பாகும்'. ஆதிக்க சாதி சுரண்டும் வர்க்கங்கள் சுக போகமாக வாழ, தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்துச் சாவதே, வேத உபநிஷத்துக்கள் கூறும் வாழ்க்கை முறையாகும். தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள், தங்களுக்கு இடப்பட்ட பணிகளை மறுபேச்சின்றி செய்து முடிப்பது, ஆதிக்கசாதி ஒடுக்குமுறையை சகித்துக் கொள்வது, கல்வி அறிவின்றி வாழ்வது, அதே வேளை ஆதிக்க சாதியின் சுரண்டும் வர்க்கமோ, உழைக்கும் மக்களை ஒடுக்குவது, தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் மறுப்பது, கல்வியை தங்களது சொத்தாக்கிக் கொள்வது-இவையே வேத உபநிஷத்துக்கள் போதிக்கும் அறநெறிகள் ஆகும். ஆதிக்க சாதி சுரண்டும் வர்க்கத்தின் களியாட்டங்களே அவை கூறும் பண்பாடு ஆகும். இத்தகைய கேடு கெட்ட வேத உபநிஷத்துகளைத்தான் தொன்மையான மரபாகவும், உயர் அறநெறியாகவும், மேன்மையான பண்பாடாகவும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் கூறுகின்றது. அத்தகைய மரபையும், அறநெறியையும், பண்பாட்டையும் கொண்ட தலைமுறையை உருவாக்குவதே தனது இலட்சியம் என கூறுகின்றது வித்ய பாரதி.



கல்வியை இந்தியமயமாக்கல் பற்றி முரளிமனோகர் ஜோஷி கூறும் பொழுது, ''இந்தியாவிலுள்ள மாணவனுக்கு இந்தியாவின் பிரச்சனைகள் பற்றிய புரிதல் இல்லை. எதற்கெடுத்தாலும் வெளிநாட்டு தீர்வுகளை எதிர் நோக்கி இருக்கிறான். எனவே இந்திய சூழ்நிலைக்கேற்ப கல்வி உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய கல்வி இந்திய பாரம்பரியம், பண்பாடு மற்றும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்'' என்றார். சுயமான(?) இந்தியக்கல்வி முறை பற்றி முழங்கும் முரளிமனோகர் ஜோஷி, கல்வித்துறையின் மீதான ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் குறித்து வாய் திறப்பதில்லை. நாட்டில் பல அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் பல்வேறு அறிவியல் துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை பன்னாட்டு நிறுவனங்களின் நிதியில் செயல்படுவதுடன், அவற்றின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. ஆராய்ச்சி அறிக்கைகள் உடனுக்குடன் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இது தவிர பல்வேறு பல்கலைக்கழகங்களில் சில துறைகள் பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

சுதேசி பேசி ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. காங்கிரசு விட்டுச் சென்ற ஏகாதிபத்திய சார்பு கல்விக் கொள்கையை எவ்வித மாற்றமுமின்றி முழுவீச்சில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. மூச்சுக்கு முன்னூறு தரம் 'இந்திய மயமாக்கல்' பற்றி முழக்கமிடும் ஆர்.எஸ்.எஸ். 'தேசபக்தர்கள்' இவை பற்றி மூச்சு விடுவதில்லை. ''டார்வின் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட மேற்கத்திய பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தால் வாழ்க்கைக்கான முழுமையை வழங்க முடியாது'' என வித்ய பாரதி புத்தகம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான் குரங்கிலிருந்து மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றிய டார்வினின் பொருள் முதல் வாத கண்ணோட்டத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, மனிதனிலிருந்து குரங்கிற்கு அழைத்துச் செல்லும் கண்ணோட்டத்தைக் கொண்ட 'இந்துத்வா' கல்வியை திணிக்க முயலு கிறது போலும் ஆர்.எஸ்.எஸ். பாசிச கும்பல்.

இரண்டாவதாக, பல்வேறு இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியதுடன், தேசிய பண்பாட்டு ஒற்றுமையை கட்டிக்காத்த சமஸ்கிருதத்தை கட்டாய பாடமாக்க வேண்டும் என நிபுணர் குழு பரிந்துரை கோருகின்றது. இந்தியாவிலுள்ள



படிப்பகம்

பல்வேறு தேசிய இனங்களும், மலைவாழ் மக்களும், அவரவர் சொந்த மொழிகளைக் கொண்டுள்ளனர். கடந்த கால வரலாற்றில் இந்தியாவிலுள்ள அனைத்து மக்களாலும் பேசப்பட்ட மொழியாக ஒரு பொது மொழி இருந்ததில்லை. அதிலும் குறிப்பாக, சமஸ்கிருதமானது, பார்ப்பனர்களின் மொழியாக மட்டுமே இருந்து வந்துள்ளது. இன்றோ, செத்துப்போன சமஸ்கிருதமானது, கோயில்களில் வழிபாட்டின் போது பார்ப்பனர்களின் புரியாத உளறலாக மட்டுமே நீடித்து வருகின்றது. அத்தகைய செத்துப் போன சமஸ்கிருதத்திற்கு உயிர் கொடுக்கவும், அதனை அனைத்து தேசிய இன மக்களின் மீது திணிக்கவும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் துடிக்கிறது. ஆங்கிலத்தை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் இக்கும்பல் அதற்கு பதிலாக சமஸ்கிருதத்தை திணிக்க முயலுகிறது.

மூன்றாவதாக, இந்திய அரசியலமைப்பு சட்டம் அங்கீகரித்துள்ள, சிறுபான்மையோர் கல்வி நிறுவனங்களை நிறுவிடவும், நிர்வகிப்பதற்குமான உரிமையானது, அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என பரிந்துரை கூறுகின்றது.

இது சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நடத்திக் கொள்ள கொடுக்கப்பட்ட சட்ட உரிமையின் அடிப்படை காரணங்களை மறைத்தழிக்கும் மோசமான நோக்கமாகும்.

இன்றைய கல்விமுறை–போதிக்கும் முறை, கல்வித்திட்டம் ஆகியவை இந்துமத கலாச்சாரம், வாழ்க்கைமுறை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை மூடி மறைக்கவே பா.ஜ.க.வின் இப்பொழுதைய கல்வித் திட்டம் முயற்சிக்கிறது.

நான்காவதாக, பெண்களுக்கான பாடத்திட்டத்தில் கூடுதலாக, 'வீட்டு பராமரிப்பு பயிற்சி' இணைக்கப்பட வேண்டும். என 'நிபுணர்குழு' கூறுகின்றது. இப்பரிந்துரையின் மூலம் பெண்கள் குறித்த இந்துமத வெறிகும்பலின் கண்ணோட்டம் வெட்ட வெளிச்சமாகிறது. பல நூறு ஆண்டுகளாக இந்திய நிலவுடமை சமூக அமைப்பில் பெண்கள் கொடூரமாக ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். வேத, உபநிஷத்துக்கள் பெண்கள் மீதான ஒடுக்க முறையை பரிந்துரைத்தும், நியாயப்படுத்தவும் செய்தன. பெண்கள் கல்வி கற்கும் உரிமையை மறுத்தன. இந்துமதக் குப்பைகளான இராமாயணம், மகாபாரதம் போன்றவை பெண்களை ஆண்களின் சொத்தாகவும், வெறும் படுக்கை அறைக்கான போகப் பொருளாகவும் சித்தரித்தன. நிலவுடமை சமூக அமைப்பு பெண்களை சமூக உற்பத்தியிலிருந்து விலக்கி வைத்தது.

பெண்களின் கடமைகளாக வீட்டு பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு, கணவனுக்கு சேவை செய்தல் ஆகியவற்றை நிர்ணயித்தது. பெண்களை வீட்டுக்குள் அடைத்துப் போடுவதை வேத, உபநிஷத்துக்கள் போதித்தன. இத்தகைய ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்துவதற்காகவே, குஷ்டரோகி கணவனின் காமப்பசிக்காக, அவனை கூடையில் சுமந்து விபச்சாரி வீட்டுக்கு

> **இந்தியக்கல்வி முறை பற்றி முழங்கும் முரளி மனோகர்ஜோஷி, கல்வித்துறையின் மீதான ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் குறித்து வாய் திறப்பதில்லை.**

கொண்டு செல்லும் பெண்ணைப் பற்றியும், கணவனின் சந்தேகத்தைப் போக்கவும், தனது கற்பின் தூய்மையை நிரூபிக்கவும் தீக்குளிக்கும் பெண்ணைப் பற்றியும் இந்துமதக் கழிசடைகள் கதைகள் புனைந்தனர். இந்திய சமூக அமைப்பில் இன்றளவும் வேரூன்றி நீடித்து வரும் நிலவுடமை மதிப்பீடுகள் பெண்களின் மீது தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றன. பெண்களுக்கு வீட்டு பராமரிப்பு பயிற்சி வழங்கப்படவேண்டும் என்ற வித்ய பாரதியின் பரிந்துரை இத்தாக்குதல்களின் ஒரு அங்கமேயாகும். இது குறித்து முரளிமனோகர் ஜோஷியிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது, ''இது நிபுணர் குழுவின் பரிந்துரை, எங்களுடையது அல்ல'' என நழுவப் பார்க்கிறார். பெண்களை இழிவுபடுத்தும் குப்பைக் காவியங்களான இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை தலை தூக்கி வைத்துக் கொண்டாடும் பா.ஜ.க. நிபுணர்குழு பரிந்துரையில் முழு உடன்பாடு கொண்டுள்ளது என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

நிபுணர் குழு பரிந்துரைகளுக்கு அடுத்தபடியாக கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியது 'சரஸ்வதி வந்தனம்' பாடப்பட்டதாகும். உத்திரபிரதேசத்தில் பா.ஜ.க. அரசானது, 'அனைத்துப்பள்ளி, கல்லூரிகளில் கட்டாயம் சரஸ்வதி வந்தனம் பாடப்பட வேண்டும்' எனக்கட்டளை பிறப்பித்து விட்டு, அதற்கெதிராக கடும் எதிர்ப்புக் கிளம்பியவுடன் தற்காலிகமாக அக்கட்டளையை திரும்பப் பெற்றுக்கொண்டது. ஆனால் ''சரஸ்வதி வந்தனம் பாடுவது இந்துமதவாதமல்ல; சரஸ்வதி கல்வியின் தாய், எனவே சரஸ்வதியை வழிபடுவது இந்து மதவாதம் ஆகாது'' என ஜோஷியும் அவரது சகாக்களும் சப்பைக் கட்டுகின்றனர். 'இந்தியா டுடே'ஏட்டில் தவ்லீன் சிங் என்ற அம்மையார், ''சரஸ்வதி வந்தனம் ஞானத்தை துதிக்கும் கவிதை. இந்திய கலாச்சாரத்தின்படி (மதத்தின்படி அல்ல) ஞானத்தின் உருவகமே சரஸ்வதி. அதை மதவாதம் என்று நினைக்கும் எந்த இந்தியனும் வெட்கப்பட வேண்டும்'' என்று சரஸ்வதி வந்தனத்திற்கு 'ஞான' பூர்வமான வியாக்யானம் அளிக்கிறார். என்னவோ, இந்தியாவிலுள்ள அனைத்து மதத்தவரும் ஓட்டுப் போட்டு ஒருமனதாக சரஸ்வதியை கல்வியின் தாயாக தேர்ந்தெடுத்தது போல இக்கும்பல் கூறுகின்றது. ஊருக்கு ஆயிரம் கடவுள்களை படைத்தும், அந்த பகுதிகளுக்கு ஏற்ப அக்கடவுள்களின் கதையை புனைந்து வரும் இந்து மதத்தின் கோடானு கோடி கடவுள்களில் சரஸ்வதியும் ஒரு கடவுள். அவருக்கு ஒதுக்கப்பட்ட இலாகா கல்வித்துறை.

இதற்கு இந்தமதவாதிகள் உயர்த்தி பிடிக்கும் இந்து மதக்காப்பியங்களே சான்று. இதனை மறைத்து விட்டு சரஸ்வதி 'ஞானத்தின் கடவுள், இந்து மதக் கடவுள் அல்ல' என புதுக்கதை விடுகிறது ஆர்.எஸ்.எஸ்.கும்பல். தவ்லீன்சிங் தனது கட்டுரையின் இறுதியில், 'பிரம்மா, விஷ்ணு, சிவன் கூட வணங்கும் கல்வியை அதாவது சரஸ்வதியைப் பற்றிய பாடலை துதிக்காத இந்த நாடு, படிப்பறிவில்லாமல் இருக்கத்தான் லாயக்கு'' என சாபம் விடுகிறார். மூடத்தனத்தை மூலதனமாகவும், சாதி வெறி, பெண்ணடிமைத்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

தனத்தை போதிக்கும் இந்துமதத்தின் கடவுள்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் கூட வணங்கும் சரஸ்வதி பற்றிய பாடலை துதித்து 'படிப்பாளி'களாக விளங்குவதை விட பிற்போக்கு பார்ப்பனிய இந்துமதத்தை தூக்கி எறிந்து விட்டு படிப்பறிவற்றோராகவே நாம் வாழலாம்.

### *கல்வித்துறையில் வேரூன்றியுள்ள ஆர்.எஸ்.எஸ்.*

கல்வித்துறையில் இந்துமத வெறியர்களின் ஊடுருவல் என்பது சமீபத்திய நிகழ்வுப் போக்கு அன்று. கடந்த 50ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்டு, படிப்படியாக நிகழ்ந்தேறிய தாகும். ஆர்.எஸ்.எஸ். தோன்றிய காலத்திலிருந்தே கல்வித்துறையில் ஊடுருவுவதை தனது முக்கிய பணிகளில் ஒன்றாகக் கொண்டிருந்தது. ''இந்துத்வா தத்துவத்தை தத்துவார்த்த, பண்பாட்டு தளங்களில் பரப்புவதற்கு கல்வித்துறை ஒரு முக்கிய ஊடகம்'' என ஆர்.எஸ்.எஸ். தலைவர்களான ஹெட்கேவார், கோல்வாக்கர் ஆகியோர் கூறியுள்ளனர். இத்திட்டத்தின் ஒரு முயற்சியாகவே 1946இல் தற்போது அரியானா மாநிலத்தில் உள்ள குருசேத்திரத்தில் கீதா மேல்நிலைப் பள்ளியை கோல்வாக்கர் நிறுவினார். அதே போல் நாடு முழுவதும் பல பள்ளிகளை நிறுவிடவும் ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டிருந்தது. ஆனால் 1948இல் காந்தி கொல்லப்பட்ட பின் ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டதால் அத்திட்டம் நிறைவேறவில்லை. அதன் பின்னர் 1952இல், உத்திரபிரதேசத்தில் உள்ள கோரக்பூரில் சரஸ்வதி சிசு மந்திர் என்ற பள்ளியை நிறுவியதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். தனது திட்டத்தை மீண்டும் துவங்கியது.

அன்று முதல் நாடு முழுவதும் எண்ணற்ற பள்ளிகளை நிறுவி வந்துள்ளது. ஆனால் பள்ளிகளை ஒரே பெயரில் நிறுவாமல், பல்வேறு பெயர்களில் நிறுவியது. இப்பள்ளிகளை ஒருங்கிணைப்பதற்கும், மேலும் பல பள்ளிகளை நிறுவுவதற்காகவும் 1978இல் வித்யபாரதி என்ற தலைமை அமைப்பு நிறுவப்பட்டது. சரஸ்வதி சிசு மந்திர், பாரதிய வித்யாநிகேதன், கீத வித்யாலயா, சரஸ்வதி பாலவித்யாலயா உள்ளிட்ட பல்வேறு பெயர்களில் நாடு முழுவதும் இயங்கி வரும் பள்ளிகளின் தலைமைபீடமாக வித்யாபாரதி உள்ளது. வித்யபாரதியின் மாநில மற்றும் பகுதி அளவிலான நிர்வாக அமைப்புகள் வித்யபாரதி பெயரில் அல்லாமல், இடத்துக்கும், சூழலுக்கும் ஏற்ப வேறு வேறு பெயர்களில் செயல் படுகின்றன. உதாரணமாக ஆர்.எஸ்.எஸ். பலமான அடித்தளம் கொண்ட டில்லியில் நிர்வாக அமைப்பானது, இந்து சிக்ஷா சமிதி (இந்து கல்வி குழு) என்ற பெயரிலும், சிறிது பலம் குன்றிய ஒரிசா மற்றும் பஞ்சாபில் சிக்ஷா விகாஸ் சமிதி (கல்வி வளர்ச்சி குழு) என்ற பெயரிலும், பிகாரில் உள்ள ஜார்க்கண்ட் பிரதேசத்தில் வனாச்சல் சிக்ஷா சமிதி (வனாச்சல் கல்வி குழு) என்ற பெயரிலும் செயல்படுகின்றன.

மொத்தத்தில் வித்யபாரதியின் கட்டுப்பாட்டில் இன்று நாடு முழுவதும் 17 இலட்சம் மாணவர்களையும், 79,000 ஆசிரியர்களையும் கொண்ட 13,000 கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதில் 8145 துவக்கப் பள்ளிகளும், 2800 உயர் மற்றும் மேல் நிலை பள்ளிகளும், 2000 ஒரு ஆசிரியர் பள்ளிகளும், 40 கல்லூரிகளும், 15 ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளும் அடங்கும். இவை தவிர இராமகிருஷ்ணா மிஷன், விவேகானந்தா வித்யாலயா, சின்மயா மிஷன் போன்ற பல வித்ய பாரதியின் தோழமை நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. வித்யபாரதி நிறுவனங்களில் ஓராசிரியர் பள்ளிகள் தவிர பிற அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்றவை. இவை தவிர பின் தங்கிய மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளிலும் ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டு பள்ளிகளை நிறுவிவருகிறது. மலைவாழ் மக்கள் நண்பர்கள் கழகம் (FTS) என்ற பெயரில் பி.டி.சிட்லாங்கியா தலைமையில் 1300 பள்ளிகளை மலையக பகுதிகளில் நிர்வகித்து வரும் நிறுவனமும் இதில் அடங்கும்.

வித்யபாரதி நிறுவனங்கள் அனைத்திலும், ஒரே பாடதிட்டமாகும். இது தவிர வித்யபாரதியின் தோழமை கல்வி நிறுவனங்களில் கூட அடிப்படையில் ஒரே மாதிரியான பாடதிட்டமே உள்ளது. இந்நிறுவனங்கள் கல்வியில் திட்டமிட்டு 'இந்துத்வா'வை புகுத்தி வருகின்றன. சிறுபான்மை எதிர்ப்பு, ஆதிக்க சாதி வெறி, பெண்ணடிமைத்தனம் போன்ற நச்சுக்கருத்துக்களை மாணவர்களின் மீது திணித்து வருகின்றன. இந்நிறுவனங்களில் வழக்கமான பாடதிட்டங்கள் தவிர 'மூலாதார பாடதிட்டம்' என்ற திட்டம் மேற்கொள்ளப் படுகின்றது. இப்பாடதிட்டத்தில் உடற்பயிற்சி கல்வி, யோகா, இசை, சமஸ்கிருதம், ஒழுக்கம், ஆன்மீக கல்வி, மற்றும் பண்பாட்டு அறிவு ஆகிய ஆறு பாடப்பிரிவுகள் போதிக்கப்படுகின்றன. இப்பாட திட்டங்களின் மூலம் தான் இந்துத்வா கல்வி புகுத்தப்படுகிறது. வரலாறு திரிக்கப்படுகிறது. சிறுபான்மை எதிர்ப்பு போதிக்கப்படுகிறது. **''இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள் அனைவரும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள். இந்தியாவின் மீது படையெடுத்து ஆக்கிரமித்தவர்கள். இராமர் பிறந்த இடமான அயோத்தியை ஆக்கிரமித்த முஸ்லீம்கள் அந்த இடத்தில் பாபர் மசூதியை கட்டினர்; ஆரியர்கள் இந்தியாவின் பூர்வகுடிகள் போன்ற வரலாற்றுக்கு புறம்பான கருத்துக்கள் பாடபுத்தகங்களில் புகுத்தப்பட்டுள்ளன. வித்யபாரதி பள்ளி மாணவர்களுக்கு வழங்கியுள்ள 'பண்பாட்டு அறிவு தேர்வு', 'பண்பாட்டு அறிவு தேர்வு-கேள்வி பதில்கள்' ஆகிய புத்தகங்களில் ''கி.பி.1528 முதல் கி.பி.1914 வரை முஸ்லீம்கள் ராம ஜென்மபூமி மீது 77முறை படையெடுத்தனர். ராமர் பிறந்த புனித தலத்தை பாதுகாக்கும் போரில் 3.5 இலட்சம் பக்தர்கள் உயிரிழந்தனர்'' போன்ற பொய்யான வரலாற்று கருத்துக்கள் புகுத்தப்பட்டுள்ளன.** மேலும், பாபர் மசூதியின் மீது தாக்குதல் தொடுத்த இந்துமத வெறியர்களை காவல்துறை விரட்டியடித்த நவம்பர் 2, 1990ஆம் நாளை இந்திய வரலாற்றின் கருப்பு நாளாக இப்புத்தகங்கள் கூறுகின்றன. மகாராஷ்டிராவில் கடந்த 25 ஆண்டுகளாக போதிக்கப்படும் பாட புத்தகங்களில் உள்ள இந்துமதவெறி கருத்துக்களில் சில:

☆ அனைத்து முஸ்லீம்களும் வெளிநாட்டவர்கள். அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து இந்தியாவின் மீது படையெடுத்தனர். சில மாபெரும் மனிதர்கள் தேசத்தை பாதுகாக்க போராடினர். ஆனால் பிற மன்னர்கள் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணராததாலும், அவர்களது சுயநலத்தாலும் போராடவில்லை. இறுதியில் வெளிநாட்டிலிருந்து வந்த முஸ்லீம்கள் தங்கள் ஆட்சியை நிறுவினர்.

☆ இந்த அயல் ஆட்சியாளர்கள்



படிப்பகம்

### அனைத்திந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் கருத்தரங்கம்

**'கல்வி கடைச்சரக்காவதும், ஏகாதிபத்திய கலாச் சாரத்தின் தாக்கதலும்'** என்ற தலைப்பில் கடந்த ஜனவரி 20 மற்றும் 21ம் தேதிகள் மும்பையில் தியாகி தோழர் ககோலியின் பெயரிடப்பட்ட நகரில் தியாகி தோழர். ஜனார்தன் பெயரிடப்பட்ட அரங்கில் இரண்டு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் 'ஏகாதிபத்திய கலாச்சாரத்தின் தாக்குதல்' என்ற தலைப்பில் பேரா.சலசானி பிரசாத் (புரட்சிகர எழுத்தாளர் சங்கம்), 'இந்திய மாணவர்களின் போராட்ட இயக்கங்கள்' என்ற தலைப்பில் தோழர் சிவசுந்தர் (அனைத்திந்திய அடக்குமுறை எதிர்ப்பு மக்கள் மாமன்றம்), 'காவி மயமாக்கப்படும் கல்வி' என்ற தலைப்பில் பேரா.கங்காதர் (APTF), ''கல்வி விற்பனைக்கு: பயிற்சி வகுப்புகள் (Coaching Classes) பற்றிய ஒரு விமர்சனம்'' என்ற தலைப்பில் பேரா. சோமா சென் ஆகியோர் உரையாற்றினர். பேரா.சி.எஸ்.ஆர். பிரசாத்தின் 'தனியார் கல்வி நிறுவனங்கள்–வழிப்பறி கொள்ளையர்கள்' என்ற கட்டுரை வாசிக்கப்பட்டது. ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள், இளைஞர்கள், முற்போக்காளர்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கு முடிந்து, அதே அரங்கிலேயே பொதுக்கூட்டமும் நடைபெற்றது. முன்னாள் உயர்நீதிமன்ற நிதிபதி சுரேஷ் உட்பட பலர் 'இந்துமத வெறியை எதிர்த்து, பேசினார்கள். கருத்தரங்கின் முடிவில் சிவசேனை, பால்தாக்ரேவிற்கு எதிராக கோஷங்கள் எழுப்பியபடி ஊர்வலம் நடைபெற்றது.

**முற்போக்கு மாணவர் சங்கம்**
தமிழ்நாடு.

மக்களை கொள்ளையடித்தனர்; கட்டாய மதமாற்றம் செய்தனர்; கோயில்களை அழித்தனர்; கடுமையான வரிகளை விதித்து மக்களை ஒடுக்கினர்.

☆ அவர்களை எதிர்த்த இந்து மன்னர்கள் இந்து மதத்தையும், தேசத்தையும் காத்திடும் இலட்சியத்துடன் போராடினர். எனவே அவர்கள் தேச பக்தர்கள் ஆவார்கள்.

☆ அனைத்து இந்து மன்னர்களும் தாராள மதக்கொள்கையை மேற்கொண்டனர். அவர்கள் மக்களின் நல்வாழ்வு குறித்து அக்கறை கொண்டிருந்தனர்.

இவையனைத்தும் அப்பட்ட கோயபல்சு பொய்கள் தவிர வேறெதுவுமில்லை. முதலாவதாக, இந்தியாவில் உள்ள அனைத்து முஸ்லீம்களும் வெளிநாட்டவர் அல்ல. வெளியிலிருந்து படையெடுத்து வந்த சிறுபான்மை முஸ்லீம்கள் தவிர, பெரும்பான்மை முஸ்லீம் மதத்தவர்கள், இந்து மதத்தின் கொடுமை தாளாமல் முஸ்லீம் மதத்திற்கு மதமாற்றம் ஆனவர்கள். அத்துடன் வெளியிலிருந்து வந்த முஸ்லீம்களின் வழித்தோன்றல்கள் கூட பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலேயே வாழ்ந்து, மக்களுடன் இரண்டறக் கலந்து, இந்நாட்டவர்களாக மாறி விட்டவர்கள். ஆனால் ஆர்.எஸ்.எஸ். கும்பலோ, முஸ்லீம் மக்கள் அனைவரையும் வெளிநாட்டவர்களாகவும், தேச விரோதிகளாவும் சித்தரிக்கிறது. அத்துடன் மக்களை சுரண்டுவதிலும், கொள்ளையடிப்பதிலும், ஒடுக்குவதிலும் இந்து மன்னர்களுக்கும், முஸ்லீம் மன்னர்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. எந்த மன்னனும் **மக்கள் நலனில் அக்கறை கொண்டதில்லை. உழைக்கும் மக்களை காத்திட எந்த ஆட்சியாளனும் போரிட்டதில்லை. நடந்தேறிய போர்கள் அனைத்தும் பகுதிகளை ஆக்கிரமிக்கவும், செல்வத்தை சூறையாடவுமே நடந்தவை ஆகும். இந்திய வரலாற்றின் எந்த காலகட்டமும் உழைக்கும் மக்களின் பொற்காலமாகவோ, எந்த ஆட்சியாளனும் தேச பக்தனாகவோ இருந்ததில்லை.** வரலாறு முழுவதுமே ஆட்சியாளர்களின், இந்து மத வெறியர்களின், பார்ப்பனிய சக்திகளின் பொற்காலமாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் இன்று இந்துமதவெறிக் கூட்டமோ, வரலாற்றை திரித்தும், மறைத்தும் போதிக்கின்றது.

சாதிய சமூக அமைப்பை கட்டிக் காத்த, குப்தர்கள், யாதவர்கள் மற்றும் பீஷ்வாக்களின் ஆட்சிகாலத்தை 'பொற்காலம்' என தலையில் தூக்கிக் கொண்டாடுகிறது. இவை தவிர, இந்து மத வெறியூட்டக்கூடிய ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் கட்டுரைகளை பாட புத்தகங்களில் இணைத்துள்ளது. இராஜஸ்தானில் 9ஆம் வகுப்புக்கான ''பாடல்கள் மற்றும் இலக்கிய படைப்புகளின் புதிய தொகுப்பு'' என்ற புத்தகத்தில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் இராஜேந்திரசிங், துணைத்தலைவர் கே.சி. சுதர்சன், சுதேசி ஜாக்ரன் மஞ்ச் தலைவர் ஜாலம்சிங், ஆர்.எஸ்.எஸ். பத்திரிக்கையான 'பஞ்சசான்யா'வின் ஆசிரியர் தருண்விஜய் ஆகியோரின் கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மேற்கண்டவை பாடதிட்டத்தை காவிமயமாக்கி வரும் ஆர்.எஸ்.எஸ்.சின் நடவடிக்கைகள் பற்றிய ஒரு சில உதாரணங்களே. மொத்தத்தில் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து சுயேச்சை பெற்றதாக கல்வித் துறையை மாற்றுவது, கல்வியை தனியார்மயமாக்குவது, தனியார் மயமாக்கலின் விளைவை இந்து மத வெறியர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளச் செய்வது, ஆசிரியர்–மாணவர்களை இந்துமதவெறி கல்வித் திட்டத்திற்கும் போதனா முறைக்கும் கட்டுப்பட்டவர்களாக்கி, தங்களின் அடிமைகளாக மாற்றுவது. தங்களின் இந்து ராஷ்டிரத்தில் வாழத்தக்க மனிதர்களாய் மாணவர்களை உருவாக்குவது ஆகியவைதான் இவர்களின் நோக்கம்.

உலகம் முழுவதையும் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரத் துடிக்கும் ஏகாதிபத்தியங்கள், மூன்றாம் உலக நாடுகளை எந்தத் துறையிலும் சுயமாக வளர்ச்சி அடைய லாயக்கற்றவைகளாக மாற்றுவதற்கே திட்டங்கள் தீட்டி நடைமுறை படுத்த கட்டாயப் படுத்துகின்றன. அவற்றிற்கு உதவும் நோக்கிலேயே இந்தியாவை இந்த பழம் பெருச்சாளிகள் பிற்போக்கான, மத்திய கால வாழ்க்கை முறைக்குள் சிறை வைக்க திட்டமிடுகின்றன.

இந்திய மக்களை எதிர்கொள்ளும் இந்த பேரபாயங்களுக்கு எதிராக, மக்களை அணிதிரட்ட லாயக்கற்ற பிற எதிர் அணி ஓட்டுக்கட்சிகள் சட்டவாதங்களுக்குள்ளும், தேர்தல் முறைக்குள்ளும் மக்களை கட்டிப் போட்டு, நிராயுதபாணிகளாய் நிறுத்தி வைத்திருக்கின்றன. முற்போக்கான இளைஞர்களும், மாணவர்களும்தான் விழித்தெழுந்து இத்தீய சக்திகளுக்கு எதிராக மக்களைத் திரட்ட களமிறங்க வேண்டும்.

– கண்ணாமணி

www.padippakam.com

# மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளின் அவலநிலை

அண்மைக்காலமாக, தமிழ்நாட்டின் மரவள்ளிக்கிழங்கு விவசாயிகள் தாங்கள் விளைவித்ததைக்கூட அறுவடை செய்ய பணமின்றி திவாலாகி வருகின்றனர். சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு மற்றும் கடலூர் மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி பெருமளவில் நடைபெறுகிறது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் இதில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, சேலம் மாவட்டம் இதில் முன்னணியில் உள்ளது.

மரவள்ளிக்கிழங்கிலிருந்து ஜவுளி உற்பத்திக்குத் தேவையான 'மாவு' (ஸ்டார்ச் – ஜவுளி துறையில் துணிகளை பதப்படுத்துவதிலும், மெருகூட்டுவதிலும் அதிகளவில் பயன்பாட்டில் உள்ளது) மற்றும் 'சேகோ' (ஜவ்வரிசி, மைதா, சேமியா ஆகியன இதிலிருந்து உற்பத்தி செய்யப்படுபவை) ஆகியன உற்பத்தி செய்யப்படுகிறது. தவிர, 'குளுகோஸ்' தயாரிப்பிலும் 'சேகோ' பங்கு வகிக்கிறது. சேகோ ஆலைகள் எட்டு நூறுக்கும் மேல் உள்ளன. இங்ஙனம், மரவள்ளிக் கிழங்கின் உற்பத்தியானது, தொழில்துறை உற்பத்தியிலும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களின் உற்பத்தியிலும் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது.

ஆனால், மரவள்ளிக்கிழங்கின் உற்பத்தியைச் சார்ந்துள்ள ஜவுளி ஆலை முதலாளிகள், சேகோ ஆலை முதலாளிகள், இடைத் தரகர்கள் போன்றோர்களின் நிலைமைக்கு மாறாக, அவ்வுற்பத்தியில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான சிறு விவசாயிகள் இன்று நடுவீதியில் நிற்கின்றனர்.

இந்தியாவிற்கான 'சேகோ'வின் சந்தைத் தேவையில் 80 சதவீதத்தை தமிழ்நாடே நிறைவேற்றுகிறது. அதிலும், சேலம் மாவட்டமே முதலிடம் வகிக்கிறது. இப்பின்னணியில், தமிழ்நாட்டின் மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளின் கஷ்டங்களை பார்த்தால் அவற்றின் பரிமாணம் தெளிவாகும்.

மரவள்ளிக்கிழங்கின் விலையை சந்தை சக்திகளே தீர்மானிப்பதால் சந்தையின் ஏற்ற இறக்கத்திற்கேற்ப அதன் விலையும் இருக்கும்.

1996–97ல் ஒரு மூட்டை மரவள்ளிக்கிழங்கின் விலை ரூ.120/– ஆகவும் 97–98ல் ரூ. 150/–ஆகவும் இருந்தது. நடப்பு ஆண்டில் ரூ. 35/– என கடும் வீழ்ச்சியடைந்துவிட்டது.

மரவள்ளிக்கிழங்கை இருப்பில் வைத்துக்கொள்ள இயலாததால் (விரைவில் கெட்டுப்போய்விடும்) விலைகள் கீழிறங்கினாலும் விற்றுத் தள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தில் விவசாயிகள் உள்ளனர்.

தற்போதைய இந்த விலைவீழ்ச்சியானது, வழக்கமான சந்தை ஏற்ற இறக்கத்தினால் ஏற்படவில்லை. மாறாக, சர்வதேச பொருளியல் நெருக்கடியின் விளைவாக ஏற்பட்டுள்ளது. அதன் பின்னணியைச் சற்று பார்ப்போம்.

தாராளமயமாக்கலின் விளைவால், இந்தியப் பொருளியல் உலகப் பொருளியலோடு முழுமையாக பிணைக்கப்பட்டதன் பகுதியாக இந்திய ஜவுளித் தொழிலும் பிணைக்கப்பட்டதால் சர்வதேச பொருளியலில் ஏற்படும் மாற்றங்கள் இந்திய ஜவுளித் தொழிலையும் தாக்குகின்றன.

கடந்த 1997 ஜூலை – ஆகஸ்டில் தென்கிழக்காசிய பொருளியல் திவாலானதிலிருந்து மீள, தென்கிழக்காசிய நாடுகள் அனைத்தும் தங்களின் நாணய மதிப்பை குறைத்து அதன்மூலம் தங்களின் பொருட்களை சர்வதேசச் சந்தையில் விலை குறைவாக விற்கின்றன. இதனால், சர்வதேச ஜவுளிச் சந்தையில் இந்தியாவின் பங்கு குறைந்துவிட்டது. மேலும், அந்நாடுகள் இந்தியாவின் ஆயத்த ஆடைகளை அதிகமாக இறக்குமதி செய்துவந்தன. பொருளியல் திவாலானதால், இறக்குமதியை பெருமளவில் குறைத்துவிட்டது.

இவ்வாறு, இந்திய ஜவுளித் தொழிலின் சந்தை சுருங்கி விட்டதால், அதனைச் சார்ந்துள்ள ஸ்டார்ச்சின் சந்தையும் சுருங்கி விட்டது. விளைவாய், ஸ்டார்ச்சின் மூலப்பொருளான மரவள்ளிக் கிழங்கின் விலை சரிந்துவிட்டது.

'96–'97ல் 90 கிலோவைக் கொண்ட ஒரு மூட்டை ஸ்டார்ச் ரூ.711/– என்றும் ஒரு மூட்டை சேகோ ரூ. 1,005/– என்றும் விலை போயின. '97–'98ல் ஒரு மூட்டை ஸ்டார்ச் ரூ. 817/– ஆகவும் சேகோ ஒரு மூட்டை ரூ. 1, 181/– ஆகவும் விலை போயின. ஆனால் நடப்பாண்டில், ஒரு மூட்டை ஸ்டார்ச் ரூ. 550/– எனவும் சேகோ ரூ. 831/– என்றும் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

மேலும், ரூ.4.50 கோடி மதிப்பு வாய்ந்த 92,000 மூட்டைகள் ஸ்டார்ச் மற்றும் ரூ.6 கோடி மதிப்பு வாய்ந்த 84,000 மூட்டைகள் சேகோ விற்பனையாகாத நிலையில், இவ்வாண்டில் புதிதாக சந்தைக்கு வந்துள்ள மரவள்ளிக் கிழங்கிற்கு உற்பத்தி விலைகூட கிடைக்காமல் போகின்ற அவல நிலை ஏற்படுகிறது.

ஏக்கருக்கு ரூ. 7,000/–ஐ இழந்துள்ள மரவள்ளிக்கிழங்கு விவசாயிகள் அறுவடையை செய்யாமல் அப்படியே மீண்டும் உழுதுவிடுகின்றனர். அத்துடன், மரவள்ளிக்கிழங்கின் மாவை (ஸ்டார்ச்) அளத்தல் என்பது பார்த்த மாத்திரத்திலேயே அளவெடுத்தல் என்று இதுவரையிருந்த அனுபவ நடைமுறைக்கு மாறாக, இறக்குமதி செய்யப்பட்ட கருவியின் வாயிலாக அளப்பதாலும் விவசாயிகள் நட்டமடைகின்றனர்.

அக்கருவியில் மாவின் அளவை தவறாக காட்டுமாறு தில்லுமுல்லு செய்துவிட்டு, அதன்பின், மாவை அளக்கும் போது அது குறைவாக காட்டுகிறது. 'மாதிரி' (சாம்பிள்) மாவை அளந்தால் அதன் முடிவிற்கும் பின்னர், மொத்தமாக சந்தைக்கு வந்தபின், மாவை அளந்தால் அதன் முடிவிற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, சாதாரண ஒரு கல்லை வைத்தால் கூட அதற்கும் மாவுச்சத்து இருப்பதாக காட்டுகின்ற ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. சேகோ ஆலை முதலாளிகள் பெரும் பாலோர் வைத்திருக்கின்ற இக்கருவி அங்கீகரிக்கப் படவுமில்லை; தரமானதுமில்லை. ஆலை முதலாளிகளின் இம்மோசடியை அரசாங்கம் கண்டு கொள்வதுமில்லை. இச்சிக்கல் குறித்து நடைபெற்றுள்ள அரசாங்கம், முதலாளிகள் மற்றும் விவசாயசங்கங்கள் ஆகியவற்றின் முத்தரப்பு கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் எதையும் ஆலை முதலாளிகள் நடைமுறைப்படுத்துவதில்லை.

இவ்வாறு, ஜவுளிச் சந்தை நெருக்கடி, சேகோ ஆலை



படிப்பகம்

www.padippakam.com

## கள்ளச் சாராய ஒழிப்பு போராட்டம்

கள்ளச் சாராய வியாபாரிகளின் பணவெறி, சாராயத்தில் போதையை அதிகரிக்க எதை எதையோ கலந்து விசச்சாரயமாக்கி எண்ணற்ற உழைக்கும் மக்களின் உயிரைக் குடிக்கிறது. இதுபோன்ற ஒரு சம்பவம் சமீபத்தில் தருமபுரி ஒசூரில் நடந்தவுடன், கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு எதிராக உழைக்கும் மக்களின் போராட்டம் தருமபுரியின் பல பகுதிகளில் நடைபெற்றன. கள்ளச்சாராய கும்பலுடன் கூட்டு சேர்ந்து கொள்ளையடிக்கும் போலீஸ், சாராய ஒழிப்பு போர் வீரர்களாக திடீர் வேசம் போட்டு நாடகமாடினர். இதனால் பெரும்பாலான இடங்களில் கள்ளச்சாராய கடைகள் மூடப்பட, நாய்க்கன் கொட்டாய் அருகில் உள்ள நத்தம் கிராமத்திற்கு அருகே கள்ளச்சாராயம் ஆறாக ஓடியது. சுற்றிலும் உள்ள கிராமங்களிலிருந்து மட்டுமின்றி மற்ற பகுதிகளில் இருந்தும் சாராயம் குடிக்க பெரும் கூட்டம் வந்தது. இதனால் நத்தம், நாய்க்கன் கொட்டாய் பகுதி மக்கள் பெரும் துயருக்குள்ளாயினர். கள்ளச்சாராயத்தை ஒழித்துக்கட்ட பகுதி மக்கள் முடிவு செய்து உழவர் உழைப்பாளர் மாமன்றத்தின் கீழ் அணி திரண்டனர். பகுதி இளைஞர்கள் 40க்கு அதிகமானோர் முழக்கங்களை எழுப்பி, சாராய கேன்களையும், டியூப்களையும் பறிமுதல் செய்ததோடு, சுற்றியுள்ள பகுதிகளில் இருந்த சாராய ஊறல்களை அடித்து நொறுக்கினர். இந்த கள்ளச்சாராய எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு கொண்ட மக்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து கொண்டே சென்றது. பெண்களும் போராட்டத்தில் வந்து முழுமையாக பங்கேற்றனர். நாய்க்கன் கொட்டாய் முக்கிய சாலையின் மைய பகுதிக்கு வந்து சாராய கேன்களை எரித்து, ''கள்ளச்சாராயத்தை ஒழிப்போம்'', ''காவல் துறையின் கபட வேடத்தை முறியடிப்போம்'' ''உழைக்கும் மக்களின் ஒற்றுமை ஓங்குக'' என்ற முழக்கங்கள் விண்ணதிர உயர்ந்தன. 200க்கும் அதிகமான மக்கள் பங்கேற்ற இந்த சாராய ஒழிப்புப் போராட்டத்தின் வீச்சு சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த அனைத்து மக்களையும் ஈர்த்ததுடன், கள்ளச்சாராயத்தை எதிர்ப்பதற்கும், ஒழிப்பதற்கும் மக்களை எழுச்சியுறச் செய்தது. கள்ளச்சாராய வியாபாரி கும்பலை கதிகலங்கச் செய்தது. இதுவரை சாராயத்தை ஒழிக்கிறேன் என்று கள்ளச் சாராய வியாபாரிகளிடம் மாமூல் வாங்கி கொழுத்துக் கொண்டிருந்த காவல்துறையின் முகமூடியை கிழித்தெறிந்தது.

## ரவுடிக்கு தண்டனை

தருமபுரி நாய்க்கன் கொட்டாய் பகுதியில் செம்மாண்ட குப்பம் பேருந்து நிலையம் அருகே ஓட்டல் நடத்தி வரும் சின்ன குஞ்சு என்பவனும், இவனது மகனும் பகுதியில் உள்ள 50க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களை தாக்கியுள்ளனர். எந்த காரணமும் இன்றி தாக்கிக் கொண்டு, ரவுடித்தனத்தை காட்டிவரும் இவர்களை தட்டிக் கேட்க யாருமே இல்லை என்ற தலைக்கனம் ஏறிவிட்டதால் இது அராஜகமாக அதிகரித்தது.

சின்ன குஞ்சுவின் நாயை மற்றொரு நாய் கடித்து விட்டதற்காக ஒருவர் தாக்கப்பட்டார். குடித்துவிட்டு பாட்டு பாடியதற்காக ஒருவர் தாக்கப்பட்டார்... அப்பாவி பெண்மீது திருட்டு பழி சுமத்தி ஓட்டலில் வைத்து கொடுமையாக தாக்கப்பட்டார். இப்படி இது நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இறுதியாக குப்பூரை சேர்ந்த மாது என்பவரை வம்புக்கிழுத்து உதைத்தான். 'இந்த ரவுடித்தனத்திற்கு முடிவு கட்ட வேண்டும், இல்லாவிட்டால் இவன் அடங்கமாட்டான்' என்ற கருத்தை, இது பற்றிய பிரச்சாரத்தின் போது மக்கள் தெரிவித்தனர். அவனை எச்சரித்து மன்னிப்பு கேட்க வைப்பது என்ற நோக்கில் சின்னக் குஞ்சுவுக்கு 1998 அக்டோபர் 15அன்று அடி, உதை தண்டனை உழைக்கும் மக்களால் நமது தலைமையில் வழங்கப்பட்டது.

கிரர்மப்புறங்களில் சின்னஞ்சிறிய பிரச்சனைகளுக்கு எல்லாம், உழைக்கும் மக்களை உதைத்து தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டிவரும் சின்னக்குஞ்சு போன்ற கிராமப்புற ரவுடிகளுக்கு இது ஒரு பாடமாக அமைந்தது.

**உழவர் உழைப்பாளர் மாமன்றம், தருமபுரி**

முதலாளிகளின் இலாபவெறி மற்றும் மரவள்ளிக்கிழங்கு, சேகோ உற்பத்தியில் நேரடியாக எந்தப் பங்கும் வகிக்காத இடைத்தரகர்களின் கொள்ளை ஆகியவற்றினால் மரவள்ளிக் கிழங்கு விவசாயிகள் ஓட்டாண்டிகளாகின்றனர். ஏற்கனவே, கந்து வட்டிக்கு கடனை வாங்கி உற்பத்தியில் ஈடுபடுவதால், இருக்கும் பெயரளவிலான சிறிய நிலத்தையும் வட்டிக்காரர் களிடம் விவசாயிகள் இழந்து விடுகின்ற பரிதாபம் நிகழ்ந்து வருகின்றது.

அடுத்து, தமிழ்நாடு அரசாங்கத்தின் மாசு கட்டுப்பாடு, மைய மாநில அரசாங்கங்களின் வரிகள் (சேகோ தொழில் சிறு தொழில்துறையைச் சார்ந்தது) ஆகியவற்றினால் சேகோ தொழில் நசிவடைகின்றது. ஆட்சியாளர்களின் இச்செயற்பாடுகளின் சுமைகளை விவசாயிகள் மற்றும் தொழிலாளிகள் மீதே திணிக்கின்றனர் சேகோ ஆலை முதலாளிகள்.

அனைத்திற்கும் மேலாக, உள்ளூர் சேகோ ஆலைகளுக்கு வேட்டு வைக்கிறாற்போன்று, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் வெளிநாட்டு கூட்டுடன் தனியார் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மரவள்ளிக்கிழங்கு விவசாயிகள் இன்று எதிர் கொள்ளும், அவலங்கள் அனைத்திற்கும் அடிப்படை இந்திய ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தும் பொருளியல் கொள்கைகளே. தரகு பெரு முதலாளிகளுக்கும் அவர்களை ஆட்டுவிக்கும் ஏகாதிபத்திய முதலாளிகளுக்கும், உள்நாட்டு மக்களின் தேவைக்கு மாறாக, உணவுப் பயிர் உற்பத்தியை புறக்கணித்து ஏகாதிபத்தியவாதிகளின் இலாபவெறிக்கு தீனி போடவே பணப் பயிர் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. ஏற்றுமதி சார்ந்த உற்பத்தியாகவே விவசாயம் ஆக்கப்பட்டுவிட்டது.

விளைவாய், ஏகாதிபத்தியவாதிகளின் கொள்ளை இலாப வெறியால் ஏற்படும் பொருளியல் நெருக்கடி விவசாயிகளை நசுக்குகிறது.

இந்நிலையில், ஆட்சியாளர்கள், மரவள்ளிக்கிழங்கிற்கு ஆதரவு விலை, (அவர்கள் கேட்பதோ மூட்டைக்கு ரூ. 150/– மட்டுமே) உற்பத்திச் செலவை ஈடுகட்ட முடியாமல் போனவர்களுக்கு நட்டஈடு போன்ற அவர்களின் கோரிக்கை களுக்கு பாராமுகமாய் இருக்கின்றனர். இச்சிக்கல்களை எதிர்கொள்ளும் முகமாகவே, தங்களுக்கான கூட்டுறவுச் சங்கத்தை நீண்ட காலமாய் கேட்டு வருகின்றனர் விவசாயிகள்.


ஏகாதிபத்திய முதலாளிகளின் தாசர்களாய் உள்ள ஆட்சியாளர்களிடம் இவையெல்லாம் கிடைக்காது. அவர்களை நிர்ப்பந்திக்கும் வண்ணம் போர்க்குணமிக்க போராட்டங்களை தொடுப்பதே தீர்வு.

**–பாஸ்கர்**



படிப்பகம்

www.padippakam.com



# சூறாவளி

சாம்பல் மூடிய
தேகங்களுக்குள்
மூண்டெறிந்த
நெருப்பு கங்குகளா?
எரிமலைகளாக...
வெடித்துக் கிளம்பியது.

கறுத்துப்போன
வானத்துக்குள்
மறைந்திருந்த
மின்னல் கீற்றுகளா?
இடி முழக்கங்களாக...
செவிப்பறையை கிழித்தது.

புழுதி காற்றுக்குள்
சுற்றி வந்த
கரும் புகைகளா?
சூறாவளிகளாக...
அடித்துக் கிளம்பியது.

கட்டிப்போட்ட காலங்களை
ஓரணியில் பயணித்த
ஆயுதங்களா?
அறுத்தெறிந்தது.

இனியும் எடுபடாது
ஆதிக்க சாதிகளின்
கொட்டங்கள்.

—வெண்மணி பக்கிரி

பாலன்!
உன் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில்
அலை வீசுகின்றன!
உன்னைக் கொன்றவன்
ஒன்றை மறந்தான்
கனன்று தெறித்த
உன்
வர்க்க உணர்வுகள்
இதயமெனும் எங்கள்
இரும்புப் பெட்டகத்தில்
அடைகாக்கப் படுவதை
அறிய மாட்டான்

நீயோ
உலையில் எரிந்து
பேராசான் மார்க்சுக்குப்
பேரனானாய்!

நாங்களோ!
உனது சந்ததிகள்!
நமது பரம்பரை
வெல்லற்கரியது!

உன்
சொல்லாற்றலாலும்
செயல்திறனாலும்
தேக்கமடைந்த
இயக்கப் போக்கு
ஊக்கம் கொள்ள
ஓயா துழைத்தாய்!

அன்று
வீரன் பகத்சிங்கை
தூக்கிலே போட
நேரம் குறித்தான்
நேரம் வருமுன்
தூக்கிலே போட்டான்!
எங்கள் பாலனே!
இன்றைய அரசு
நேரமோ காலமோ,
கோர்ட்டோ, விசாரணையோ,
எதுவுமே இன்றி
உன்னைப் பிடித்து
உலையில் சுட்டது,
அக்கிரம அரசின்
வர்க்கத் தன்மையை



அப்பட்டமாக நீ
அம்பலப்படுத்தினாய்
அம்! பாலன்
நீ பகத்சிங் ஆனாய்!

செப்டம்பர் 12!
எங்கள் நெஞ்சங்களை
நீக்கமற கவ்வி நிற்கும்
நினைவு நாள்!
உனது உணர்வுகள்!
எங்கள் நரம்புகளை
ரத்த நாளங்களை
இயக்குகின்றன!

உன் உடல்
எங்களைப் பிரிந்து
ஆண்டுகள் பதினேழு
கடந்து விட்டது
பாரத மக்களின்
குருதிச் சேற்றில்
மூங்கிக் குளிக்கும்
மூதேவிகளை
விரட்டித் துரத்தி
வென்று நாட்டின்
விடுதலைக்குக்
கட்டியம் கூற
அன்று நாங்கள்
சபதமேற்றோம்
இன்றும் அதுவே
எங்கள் மூச்சு!

அப்புவும் சீராளனும்
நீயும் ஊன்றிய
வித்து
இதோ
முளை கட்டுகிறது
இனி அது
படர்ந்து கிளைக்கும்.

—புயலவன்


படிப்பகம்

# அஞ்சா நெஞ்சன் தோழர் வர்கீஸ் பாதையை பின்பற்றுவோம்!



"ஒரு மனிதன் தனக்காகவே உழைத்து தன்னல வழியில் நடப்பானாயின், அவன் ஒரு வேளை ஓங்கு புகழ் அறிஞனாகலாம், மாபெரும் ஞானியாகலாம், உன்னதக் கவிஞனாகலாம். என்றாலும் அவனால் ஒரு நாளும் செந்நிறைவு பெற்ற மனிதனாக முடியாது... வாழ்க்கையில் நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பாதை மனித குலத்திற்காக மிக அதிகமாய் உழைக்கும் வாய்ப்பைத் தருவதாக இருக்குமானால், எவ்வளவு கொடிய இன்னல் வரினும் நம்மைத் தலைவணங்கச் செய்திட முடியாது. ஏனெனில் அவை அனைவரின் நன்மைக்காகவும் செய்யப்படும் தியாகங்கள் ஆகும். அப்போது நாம் அடையும் மகிழ்ச்சி அற்பத்தனமான தாய், எல்லைக்குட்பட்டதாய், தன்னலம் சார்ந்ததாய் இருக்காது. மாறாக நாம் அடையும் மகிழ்ச்சி கோடிக் கணக்கானவர்களைச் சாரும். நமது செயல்கள் மௌனமாய் வாழ்ந்து கொண்டிருந் தாலும், நிரந்தரமாய் என்றென்றும் பயனளித்துக் கொண்டிருக்கும். நமது சாம்பலின் மீது உன்னதமானவர்களின் கண்ணீர்த் துளிகள் சூடாய் வந்து விழும்."

—காரல் மார்க்ஸ்

"அவர்கள் என்னைக் கொல்லப் போகிறார்கள். உங்களில் யாரேனும் ஒருவர் அதைச் செய்வீர்கள். எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய்யுங்கள். என்னைக் கொல் வதற்கு முன்னால் ஒரு சமிக்ஞை மட்டும் கொடுங்கள், நான் முழக்கமிட வேண்டும்."

—தோழர். வர்கீஸ்

"கொடிய இன்னல் வரினும் நம்மை தலைவணங்கச் செய்திட முடியாது" மார்க்சின் வார்த்தைகள் வாழ்க்கையாய் வந்து இதயங்களில் கனக்க வாழ்ந்தவர் தோழர் வர்கீஸ்.

இன்றைக்கு அவருடைய படுகொலைக்குப் பின்னால் இருந்த கேரள காவல் துறையின் சதிச் செயல்கள் அம்பலமாகி கேரள மாநிலமே கொதித்தெழுந்துள்ளது. தோழர் வர்கீஸை இருபத்தியெட்டு வருடங்களுக்கு முன்னால் கேரள-வயநாடு காட் டிற்குள் வைத்து 1970 பிப்ரவரி 18ல் துப்பாக்கியால் சுட்ட காவலர் ராமச்சந்திர நாய ரின் ஒப்புதல் வாக்குமூலம் கேரள காவல்துறையையே பீதிக்கு உள்ளாக்கியுள்ளது.

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் பிறந்த தோழர். வர்கீஸ் முதலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)ல் இணைந்து வேலை செய்தார். அச்சமயம் வய நாடு பகுதியிலிருந்த பழங்குடிகள் மத்தியில் போர்குணமிக்க வகையில் அமைப் பைக்கட்டி அம்மக்களின் பிரச்சினைகளுக்காக தீவிர போராட்டங்களை முன்னெடுத் தார். நக்சல்பாரி எழுச்சி ஏற்பட்டவுடன் நாடு முழுவதுமிருந்த புரட்சிகர சக்திகள் முழுவதும் பெரும் உற்சாகத்துடன் அதில் இணைந்தனர். தோழர் வர்கீஸ் தன் சக தோழர்களுடன் இயக்கத்தில் இணைந்து ஆயுதப் போராட்டத்தின் மூலமாக அரசைத்தூக்கியெறியும் புரட்சிகர நடைமுறைக்கு வந்தார். இளைஞர்கள் மத்தியில் தத்துவ வழிகாட்டியாய், செல்வாக்கு மிக்க தலைவராய் வளர்ந்தார்.

அப்பொழுது காவல் நிலையங்களை தாக்குவதிலும், கொடூரமான நிலப்பிரபுக்களை அழித்தொழிப்பதிலும் புரட்சியாளர்கள் ஈடுபட்டனர். வாசுதேவ அடிகா என்னும் நிலப்பிரபுவையும், காவல்துறை உளவாளி ஒருவனையும் கொன்ற வழக்கில் தேடப்பட்டதால் தோழர் வர்கீஸ் தன் சக

என்று நான் கூறினேன்". லட்சுமனா "காவலர் ஒருவரும் மோதலில் இறந்து போவார்" என்று கூறினார். எனக்குப் புரிந்தது. இவர் என்னைத்தான் எச்சரிக்கிறார் என்று. "எப்படியும் வர்கீஸ் இறக்கப்போகிறார். நான் இறந்தால் என் குடும்பம் அநாதையாகிவிடும் என்பதால், நானும் என் எதிர்ப்பை கைவிட்டு விட்டேன்."

"வர்கீஸ் இரண்டு பாறைகளுக்கு இடையே அமைதியாக ஆனால் விழிப்புடன் அமர்ந்திருந்தார். நடக்கப்போவதை யூகித்து காத்திருந்தார், ஆனால் ஏன் உடனடியாக நடக்கவில்லை என ஆச்சரியமாக இருந்தார். நான் அவருக்கு நேராகச்சென்று அவருடைய இடது மார்புக்கு நேராக துப்பாக்கியை குறி பார்த்தேன். அந்த நேரம் அவருடைய கோரிக்கை ஞாபகத்திற்கு வந்தது. நான் நாக்கால் அவருக்கு சத்தம் கொடுத்தேன். "புரட்சி ஓங்குக" என முழக்கமிட்டார். நான் துப்பாக்கி குதிரையை அழுத்தினேன். அவர் சாய்ந்தார்".

மற்றொரு காவலர் வேறொரு துப்பாக்கியை வானத்தை நோக்கி சுட்டு விட்டு இறந்து கிடக்கும் நக்சலைட் தலைவரின் கைகளில் சொருகினார். மோதல் படுகொலை முடிந்தது.

1967களில் துவங்கிய நக்சல்பாரி எழுச்சி 1972, 1973களில் முதல் கட்ட முடிவை நெருங்குவதற்குள் இதைப்போல நாடு முழுவதும் போலி மோதல்களில் கொல்லப்பட்ட தோழர்கள் எண்ணற்றோர். நக்சல்பாரி கட்சியை நிறுவிய தோழர் சாருமஜும்தார், தமிழகத்தின் தலைமைத் தோழர் அப்பு ஆகியோர் தொடங்கி எண்ணற்றோர் இப்படித்தான் கொல்லப்பட்டனர். இரண்டாவது கட்டத்தில் தோழர் பாலன் இப்படித்தான் கொல்லப்பட்டார். இன்றைக்கு ஆந்திரத்தில் நக்சல்பாரி போராளிகள் இந்தகைய முறையில் கொலை செய்யப்படுவது அன்றாட நிகழ்ச்சியாக நடந்து வருகிறது.

காங்கிரஸ் அரசாங்கத்தின் தலைமையில் செய்யப்பட்ட இப்படுகொலைக்கு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று அப்பொழுது எதிர்கட்சியாக இருந்த சி.பி.எம் நம்பூதிரிபாட் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றியது. இன்றைக்கோ ஆட்சியில் இருக்கும் அதே சி.பி.எம்.மும் அதன் அதிகாரிகளும் இப்பிரச்சினையை பூசிமொழுகி மூடி மறைக்க முயற்சிக்கிறார்கள்.

கேரள உயர்நீதிமன்றமோ அல்லது இந்திய உச்ச நீதிமன்றமோ இதற்கு தீர்ப்பு வழங்கிட முடியாது. வழங்க லாயக்கற்றவையுமாகும். அதிகபட்சம் போனால் சம்பந்தபட்ட காவலர்கள் மீது நடவடிக்கை, மற்றும் வர்கீஸ் உறவினர்க்கு நட்டஈடு வேண்டுமானால் அதனால் வழங்க முடியும். ஆனால் எண்ணற்ற புரட்சியாளர்கள் கொல்லப்பட்டதற்கும், கொல்லப்படுவதற்கும். ஏதோ ஒரு சில காவலர்களும், அவர்களின் சட்டம் மீறிய செயல்களும் அல்ல காரணம். இந்தச் சமூக அமைப்பும், ஆளும் வர்க்கங்களும், அரசும் காக்கப்பட வேண்டும் என்பதே இப்படுகொலை களின் நோக்கம். வர்க்கப் போராட்டத்தில் புரட்சியாளர்கள் மட்டுமல்ல ஆளும் வர்க்கமும் சட்டப் பூர்வமான வழிகள், சட்டப்புறம்பான வழிகள் என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. உண்மையில் இப்படுகொலைகளுக்கு நியாய மான தீர்ப்பு வழங்குவதென்றால் இந்தச் சமூக அமைப்பே தூக்கிலிடப்பட வேண் டும். இந்த நீதிமன்றங்களும் கூட தங்களைத் தங்களே தூக்கிலிட்டுக் கொள்ள வேண்டும். செய்வார்களா? இதை இவர்களால் செய்ய முடியாது. இன்றைக்கு தன்னு டைய படுபாதகச் செயலால் அம்பலமாகி நிற்கும் காவல்துறையின், அரசின் வர்க்க குணாம்சத்தை, உண்மை முகத்தை உழைக்கும் மக்கள் உணர்ந்து கொள்ள மட்டுமே இச்சம்பவம் பயன்படும். புரட்சியாளர்கள் மட்டுமே ரத்தக்கடனை ரத்தத்தால் தீர்ப்பார்கள் ●




www.padippakam.com
படிப்பகம்

இருந்தா். மாநில காவல்படை மற்றும் லயம் பாதுகாப்பு படை ஆகியவை தேடுதல் வேட்டையை காடு, மலை, கிராமம், நகரம்தோறும் பெரிய அளவில் நடத்திக் கொண்டிருந்தன. ஒரு காவல் துறை உளவாளி மூலம் தோழர் வர்கீஸ் திருநெல்லி காட்டில் ஒரு குடிசையில் இருப்பதை அறிந்து காவல்துறை சுற்றி வளைத்துப் பிடித்தது.

போலீஸ் துணை கண்காணிப்பாளர் லட்சுமனா மற்றும் டி.ஐ.ஜி.விஜயன் தலைமையிலான அந்தப்படை தோழர் வர்கீஸை காட்டிற்குள் வைத்துச் சுட்டுக் கொன்றது. அப்படையில் காவலராக இருந்த ராமச்சந்திர நாயர் தான் இன்றைக்கு அப்படுகொலை சம்பந்தமாக கேரள உயர்நீதி மன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

அவர் தன்னுடைய மனுவில் கூறியிருப்பது:

''நாங்கள் அந்த குடிசையை நெருங்கி ''உள்ளே யார்'' என்று சத்தம் கொடுத்தோம். வெளியே வந்த மனிதரிடம் ''இங்கே வர்கீஸ் இருக்கிறாரா?'' என்றோம். ''நான் தான் வர்கீஸ்'' என்றார். ''உன்னுடைய ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடை'' என்றோம். அவர் சிரித்துக் கொண்டே'' பயப்படாதீர்கள், என்னிடம் ஆயுதம் எதுவுமில்லை. நான் தனியாகத்தான் இருக்கிறேன்'' என்றார்.

நக்சலைட் தலைவரின் கைகளை பின்புறமாக வளைத்து துப்பாக்கியில் இருக்கும் பெல்டை கழற்றி கட்டி ஜீப்பில் தூக்கிப்போட்டுக் கொண்டு கிளம்பினோம். முப்பது நிமிட பயணத்தில் அருகிலுள்ள மனந்தவாடி சிற்றூரை கடந்தோம். எங்களுடன் சில காவல்துறை வண்டிகளும் இணைந்து கொண்டன.


அந்தச் சமயம் வர்கீஸ் என்னிடம் கூறினார். ''அவர்கள் என்னைக் கொல்லப் போகிறார்கள். உங்களில் யாரேனும் ஒருவர் அதைச் செய்வீர்கள். எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய்யுங்கள். என்னைக் கொல்வதற்கு முன்னால் ஒரு சமிக்ஞைமட்டும் கொடுங்கள், நான் முழக்கமிட வேண்டும்.'' அதைச் செல்லும் போது அவர் மிகவும் அமைதியாக இருந்தார்.

மதியம் 2 மணி சுமருக்கு காவலர்கள் அவருடைய கண்களை கட்டினர். அவரை உணவு உன்ன சொன்னார்கள். காவலர் நாயர் தன்னுடைய உணவை அவருடன் பங்கிட்டுக் கொண்டார். அவருக்கு ஒரு பீடி கொடுத்தார். மாலை 6.30 மணிக்கு போலீஸ் துணை கண்காணிப்பாளர் லட்சுமனா காவலர்களுக்கு ஆணையிட்டார்.

நாயர் அந்த சம்பவங்களை நினைவு கூர்கிறார்.

''லட்சுமனா எங்களிடம் ''வர்கீசை சுட்டுக் கொல்லப் போகிறோம்'' என்றார். அருகில் டி.ஐ.ஜி. விஜயன் நின்று கொண்டிருந்தார். ''யாருக்கு உங்களில் அவரை கொல்ல விருப்பம்'' என்று கேட்டார். ராப்பாய் மற்றும் ஸ்ரீதரன் கைகளை உயர்த்தினர். ஹனிபா முதலில் யோசித்தாலும் இறுதியில் உயர்த்தினார். நான் கை உயர்த்தவில்லை''.

''கைதி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்






www.padippakam.com

www.padippakam.com

# நான்கு மாநிலத் தேர்தல்கள்: மக்களாட்சி முறையும், மக்கள் நிலையும்

சென்ற ஆண்டின் இறுதியில் நான்கு மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்தன. இத்தேர்தல் முடிவுகள் பி.ஜே.பி.யின் மைய அரசாங்கத்திற்கெதிரான மக்களின் கோபத்தை வெளிப்படுத்துகின்றன. பி.ஜே.பி. மையத்தில் ஆட்சியைப் பிடித்து எட்டு மாதங்களுக்குள்ளாகவே, 2 மாநிலங்களில் தனது ஆட்சியை இழந்துள்ளது. ஆட்சியை இழந்தது மட்டுமின்றி, மிகவும் மோசமான படுதோல்வியைச் சந்தித்துள்ளது. இந்திய பாராளுமன்ற வரலாற்றிலேயே, ஒரு கட்சி மக்களின் வெறுப்பை இவ்வளவு வேகமாகச் சந்தித்திருப்பது, இதுதான் முதல் முறை என பல்வேறு முதலாளியப் பத்திரிக்கைகள் கூறுகின்றன.

இந்த நான்கு மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில், மத்தியப்பிரதேஷ், ராஜஸ்தான், டில்லி ஆகிய மூன்று மாநிலத் தேர்தல்களே முக்கியமாக எதிர்பார்க்கப்பட்டன. ஏனெனில், இம்மூன்று மாநிலங்களிலும் காங்கிரசுக்கும் பி.ஜே.பி.க்கும் இடையிலான நேரடிப் போட்டி நடைபெற்றது. ராஜஸ்தானிலும், டில்லியிலும் சென்ற தேர்தல்களின் போது, பி.ஜே.பி. அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. மத்தியப் பிரதேசத்திலோ காங்கிரஸ் கஷ்டப்பட்டு பெரும்பான்மை எண்ணிக்கையை எட்டியது. இம்மூன்று மாநிலத் தேர்தல்களில் இந்திய ஆளும் வர்க்கங்களின் பெருங்கட்சிகள் இரண்டில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது எதிர்கால அரசியலைத் தீர்மானிப்பதாகக் கருதப்பட்டது.


இத்தேர்தலுக்கு முன்பே, பி.ஜே.பி.யின் மாநில அரசாங்கங்கள் மீது மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர். இது, சென்ற பாராளுமன்றத் தேர்தலிலேயே வெளிப்பட்டது. குறிப்பாக, ராஜஸ்தானில் காங்கிரஸ் பெரும்பான்மையான தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. காங்கிரஸ் ஆண்ட மத்தியப் பிரதேசத்திலோ பி.ஜே.பி. அதிக தொகுதிகளில் வெற்றி பெற்றது. பொதுவாக இந்தத் தேர்தல் முடிவுகளும் அதே போலத்தான் இருக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், முடிவுகளோ பி.ஜே.பி.க்கு முற்றிலும் அதிர்ச்சி தரக்கூடியதாக, அதன் மைய அரசிற்கு முழுக்க எதிரானதாக அமைந்து விட்டது.

ராஜஸ்தானில், போன தேர்தலில் 99 சீட்டுக்களைப் பெற்று ஆட்சி அமைத்த பி.ஜே.பி, இந்த முறை வெறும் 33 சீட்டுக்களையே பெற்றது. அதன் முக்கிய தலைவர்கள் பலர் படுதோல்வி அடைந்தனர். ராஜஸ்தானின் துணை முதலமைச்சர் ஹரி சங்கர் பாத்ரா, இதர அமைச்சர்கள் லலித் கிஷோர் சதுர்வேதி, காலிச்சரன் ஷ்ராப், கன்ஸ்யாம் திவாரி, கிருஷ்ணன் சோனாகரா, உஜ்ஜலா அரோரா ஆகியோரும், சட்டப் பேரவைத்தலைவரும், துணைத்தலைவரும் ஆயிரக்கணக்கான ஓட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினார்கள். சென்ற பாராளுமன்றத் தேர்தல்களில் பெற்ற வாக்கு சதவீதத்தையும் விட மிகச்குறைவான வாக்குகளையே இம்முறை பி.ஜே.பி.யால் பெற முடிந்தது.

தலைநகர் டில்லியிலோ, சென்ற நாடாளுமன்றத் தேர்தல்களின் போது கூட பெரும்பான்மை இடங்களை வென்ற பி.ஜே.பி. இம்முறை படுதோல்வியடைந்துள்ளது. டில்லியின் முதல் சட்டசபை தேர்தலில், ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு இடங்களைப் பெற்றிருந்த பி.ஜே.பி, இம்முறை வெறும் 15 இடங்களையே பெற்றது. முன்பு 14 இடங்களையே பெற்றிருந்த காங்கிரஸ் இம்முறை மொத்த 69 இடங்களில் 51 இடங்களைக் கைப்பற்றி விட்டது.

இந்த இரண்டு இடங்களிலும் பி.ஜே.பி. தோல்வியடைந்தது பெரிய ஆச்சரியமல்ல. ஆனால், மத்தியப் பிரதேசத்தில் தோல்வி அடைந்திருக்கவேண்டிய திக்விஜய் சிங் தலைமையிலான காங்கிரஸ், மீண்டும் வெற்றி பெற்றது தான் பெரிய ஆச்சரியமாகும். இம்முறை மத்தியபிரதேசத்தில் எப்படியும் ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று கனவு கண்டது பி.ஜே.பி. ஆனால், காங்கிரஸ் முட்டி மோதி பெரும்பான்மை இடங்களை பெற்று விட்டதைக் கண்டு திகைத்து நிற்கிறது.

இந்த மூன்று வட மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் காட்டுவதென்ன? இம்மாநிலத் தேர்தல் முடிவுகளில், மாநில அரசுகளின் மீது மக்களுக்குள்ள வெறுப்பு ஓரளவு வெளிப்பட்டிருப்பினும் கூட, மைய பி.ஜே.பி. அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளின் விளைவுகளே ஆதிக்கம் செய்துள்ளன. தான் வித்தியாசமான கட்சி என்று கூறிக்கொண்டு பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தது. சுதேசியம்





படிப்பகம்

பேசிக்கொண்டு, மக்களின் அடிப்படை பிரச்சனைகளைத் தீர்ப்பேனென்று நாடகமாடியது. ஆனால், பி.ஜே.பி.யின் எட்டுமாத ஆட்சி அதன் உண்மை சொரூபத்தை மக்களுக்கு முழுமையாக வெளிப்படுத்தி விட்டது.


### பி.ஜே.பி. மைய அரசின் மக்கள் விரோத ஆட்சி

தன்னுடைய முதல் பட்ஜெட்டிலேயே, தான் பன்னாட்டு நிறுவனங்களின் கையாள்தான் என்பதையும், மக்களின் மீதான கொடூரமான வரிச்சுமைகளையும் கட்டண உயர்வுகளையும் திணிப்பதில் யாருக்கும் சளைத்தவனல்ல என்பதையும் தெளிவாகவே நிரூபித்தது. தொலைபேசித் துறையை தனியார் மயமாக்க நடவடிக்கைகள், அனைத்து மாநில மின்சாரத் துறைகளையும் விரைந்து தனியார் மயமாக்க வற்புறுத்தல், உர மான்ய வெட்டு என்று எடுத்த எடுப்பிலேயே, புதிய பொருளியல் கொள்கைகளை விரைந்து நடைமுறைப்படுத்த முயற்சித்தது. காப்பீட்டுத் துறையைத் தனியார் மயமாக்கும் சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற தொடர்ந்து முயன்று கொண்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு நாட்டை திறந்து விடுவதில், ராவ் அரசையும், ஐக்கிய முன்னணியையும் மிஞ்சி விட்டது பி.ஜே.பி. அரசு. தபால் கட்டணம், ரயில் கட்டணம், பெட்ரோல், டீசல் (உலக மார்க்கெட்டில் தொடர்ந்து விலை குறைந்து வரும்போதும்) விலையேற்றம் என மக்களின் மீதான பொருளியல் தாக்குதல்கள் அதிகரித்தன.

இந்தக் கொள்ளைக்காரக் கொள்கைகளின் இறுதி வெளிப்பாடாக, காய்கறிகள், அத்தியாவசியப் பொருள்களின் வரலாறு காணாத விலை உயர்வு வந்து சேர்ந்தது. சுதந்திர இந்தியாவில் விலைவாசி குறைந்ததாக வரலாறே இல்லை. ஆனாலும், பி.ஜே.பி. அரசின் மோசமான மக்கள் விரோதக் கொள்கைகள் காரணமாக, மக்கள் தங்கள் உணவுத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் தடுமாறுகிறார்கள். வெங்காயம் முதல் உப்பு வரை தங்கம் விலைக்கு விற்கப்பட்டது. பல பொருட்களுக்குத் திடீர் தட்டுப்பாடு தோன்றியது. பதுக்கல்காரர்கள் கோடி கோடியாய் அள்ளிக்குவித்தனர். சாதாரண மக்களோ உணவுக்கும் பிரச்சனையா? என தவித்தனர். இதுதான், பி.ஜே.பி. அரசின் மீதான மக்கள் கோபம் வெடித்தெழுவதற்கான இறுதிக் காரணமாக அமைந்தது. இந்திய மக்களை திசை திருப்பி தேசிய வெறியூட்ட பி.ஜே.பி வெடித்த அணுகுண்டும் கூட, வெங்காயத்தின் முன் சரணடைந்து விட்டது.

இவை தவிரவும், பி.ஜே.பி. அரசின் சிறுபான்மை விரோதக் கொள்கைகள், சிறுபான்மையினரை மேலும் அச்சுறுத்தியது. பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள், சரஸ்வதி வந்தனா பிரச்சனை, பஜ்ரங்தள், வி.ஹெச்.பி. யின் வெறியாட்டம் ஆகியவை பி.ஜே.பி.க்கு சிறுபான்மை மக்களின் முழுவெறுப்பைச் சம்பாதித்துத் தந்தனர். ராஜஸ்தானில் பெண்கள் மீதான தாக்குதல்களும், உ.பி. யில் தலித்கள் மீதான தாக்குதல்களும் பி.ஜே.பி.யின் இந்து பாசிச முகத்தை அம்பலப்படுத்தி விட்டன.

இந்தப் பின்னணியிலிருந்துதான், பி.ஜே.பி.யின் படுதோல்வியைப் பார்க்க வேண்டும். நாடு முழுக்க மக்கள் மத்தியில் தோன்றியுள்ள மைய அரசு மீதான வெறுப்பின் விளைவின் ஒரு பகுதிதான் இந்த படுதோல்வி. அதனால் தான், மத்தியப் பிரதேசத்தில் கூட, மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட திக்விஜய்சிங்கால் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடிந்துள்ளது. பி.ஜே.பி அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளின் காரணமாகத் தமது வாழ்வில் ஏற்பட்டு வரும் தீவிர பாதிப்புகள், பி.ஜே.பி.யின் (ஆர்.எஸ்.எஸ்.சின்) தீவிர இந்து பாசிச வெறியாட்டம் ஆகியவற்றின் விளைவாக, மக்களிடையே பி.ஜே.பி. ஆட்சி மீதான எதிர்ப்புணர்வு அதிகரித்துள்ளது. பி.ஜே.பி. மைய அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மேற்கொண்ட, கேவலமான சந்தர்ப்பவாத நடவடிக்கைகள், அதன் வித்தியாசமான கட்சி என்ற வேசத்தையும் கலைத்து விட்டன. ஜெயலலிதா போன்ற கடைந்தெடுத்த ஊழல் பெருச்சாளிகளைக் காப்பாற்ற அது மேற்கொள்ளும் செயல்பாடுகள், அதன் 'நேர்மையான கட்சி' என்ற வேசத்துக்கும் முடிவு கட்டி விட்டன. மொத்தத்தில் இன்று இந்திய மக்களின் முன் பி.ஜே.பி. முழுக்க அம்பலப்பட்டு நிற்கின்றது.





பி.ஜே.பி.யின் இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்ட பழைய பெருச்சாளியான காங்கிரஸ், தேர்தல்களில் பெரும் வெற்றி பெற்றது. "வெங்காயமே வெற்றி பெற்றது. சோனியா காந்தி அல்ல!" என்று பி.ஜே.பி.யின் கூற்றும் பொய்யல்ல. இந்தியாவை 40 வருடங்களுக்கும்மேல் ஆண்ட காங்கிரஸ் கட்சி, ஏற்கனவே இந்திய மக்களின் முன் முழுவதும் அம்பலப்பட்டுப் போயுள்ளது. அத்தோடு, இன்று தனித்து நின்று ஆட்சியைப் பிடிக்கும் திராணி கூட அதற்கு இல்லை. பி.ஜே.பி. இன்று நடைமுறைப்படுத்தும் மக்கள் விரோத புதிய பொருளாதார கொள்கைகளை ஆரம்பித்து வைத்ததே காங்கிரஸ்தான். நாட்டின் இன்றைய நிலைக்கு முக்கிய பொறுப்பாளி 40 வருடம் ஆட்சி புரிந்த காங்கிரசே!

நாட்டின் பல மாநிலங்களில் தனது கட்சியின் அடித்தளத்தையே இழந்துள்ளது. மிகவும் பலவீனமான நிலையில்தான்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




காங்கிரஸ் உள்ளது. உ.பி, பிஹார், மேற்கு வங்கம், தமிழ்நாடு போன்ற பல மாநிலங்களில், காங்கிரஸ் கட்சி பெயரளவுக்கான கட்சியாகவே உள்ளது. மக்களின் முன் முழுக்க அம்பலப் பட்டுப்போன, நம்பிக்கையிழந்த கிழட்டுப் பெருச்சாளிதான் காங்கிரஸ் கட்சி. எனவே, காங்கிரசின் வெற்றி எந்த வகையிலும், காங்கிரஸ் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளதை குறிக்கவில்லை. மாறாக பி.ஜே.பி. மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பைத்தான் காட்டுகிறது. மிசோராம் மிக முக்கியமான மாநிலம் இல்லை யெனிலும், 10 வருடங்களாக அங்கு ஆட்சி புரிந்து வந்த காங்கிரசின் படுதோல்வி, மக்களுக்கு காங்கிரஸ் மீதுள்ள 'நம்பிக்கையை' வெளிப்படுத்துகின்றது.

மொத்தத்தில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள், இந்திய ஆளும் வர்க்கங்களால் நடைமுறைப் படுத்தப்படும் ஏகாதிபத்திய ஆதரவு புதிய பொருளாதாரக் கொள்கைகளுக் கெதிரான தீர்ப்புதான். இன்றைய பொருளியல் நெருக்கடியின் விளைவாக வளர்ந்து வரும், இந்து மதவெறி பாசிசம், பெண்கள், தலித்கள் மீதான பிற்போக்கு தாக்குதலுக்கெதிரான அதிருப்தியின் வெளிப்பாடாகும். அதே சமயம், சமீப காலத்தில் நாடாளுமன்ற முறையின் மீது மக்களிடம் வளர்ந்து வரும் அவ நம்பிக்கையையும் இத்தேர்தல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இந்திய ஆளும் வர்க்கங்கள் தகர்ந்து வரும் தமது பாராளுமன்ற அமைப்பு முறையைப் பாதுகாக்கும் இறுதி முயற்சியாக, இந்து பாசிச பி.ஜே.பி.யை ஆட்சிக் கட்டிலில் ஏற்றிப் பார்த்தார்கள். ஆனால், இது வரை 'வாய்ப்பே கிடைக்காமலிருந்த' பி.ஜே.பி.யின் குட்டு, எட்டு மாதத்தில் வெளுத்து விட்டது. இனி, இந்திய மக்களின் நம்பிக்கையை பெற முயற்சி செய்ய, எந்த ஆளும் வர்க்கக் கட்சியும் மிஞ்சியிருக்கவில்லை என்பதைத்தான் இத்தேர்தல் முடிவுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

– சாருநேசன்

## புரட்சிகர வாழ்க்கை இணை ஏற்பு விழா

கடந்த 25.12.98 அன்று மதுரையில் முற்போக்கு இளைஞர் அணியின் தோழர் ராஜ மோகனுக்கும் தோழர் மெர்சிக்கும் புரட்சிகரமான முறையில் வாழ்க்கை இணை ஏற்பு விழா நடைபெற்றது. மு.இ.அ., தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம் மற்றும் மக்கள் பண்பாட்டு பேரவை ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்ச்சி, வெண்மணித் தியாகிகள் அரங்கத்தில் நடைபெற்றது. தோழர். பாக்கியம் (த.பெ.க.) இவ் விழாவிற்கு தலைமை தாங்கினார். தோழர்கள் முரளிதரன் (ம.ப.பே.), பாலன் (மு.மா.ச.) வாழ்த்துரை வழங்கினார்கள். வாழ்க்கை இணை ஏற்ற தோழர்கள் புரட்சிகர இயங்கங்களோடு உறுதியாக நின்று அதையொட்டிய பாதையில் வாழ்க்கை நடத்துவோம் என உறுதிமொழி வாசித்தனர். புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நிகழ்த்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

(2–ம் பக்கத் தொடர்ச்சி)

கொசாவா பல்லாண்டுகளுக்கு முன் செர்பியாவின் பகுதியாகவே இருந்தது. அல்பேனிய பழமைவாத திருச்சபையின் பிறப்பிடம் கொசாவாதான். கொசாவா பொலிஜிக் என்ற இடத்தில் தான் துருக்கியர்க்கெதிரான புகழ்வாய்ந்த போர் நடைபெற்றது. 14ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதி செர்பியர்களின் முக்கிய மையமாக இருந்தது. ஆனால், துருக்கியர்கள் 1389ல், செர்பிய கிறிஸ்தவர்களைப் போரில் தோற்கடித்து கைபற்றிக் கொண்டனர். இந்த நூற்றாண்டின் தொடக்க கட்டத்தில் தான், கொசாவா மீண்டும் செர்பியாவுடன் இணைக்கப் பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது, இப்பகுதி பாசிச இத்தாலியின் கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த பல நூற்றாண்டுகளில், கொசாவாவின் இன இயல்பில் பல்வேறு மாற்றங்கள் நடந்தன. 1970களில் கொசாவாவின் விடுதலைக்கான முழக்கம் தெற்கு யூகோஸ்லாவியா பகுதிகளில் எதிரொலித்தது.

மிலோசெவிக் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன், செர்பிய தேசியவாதம் வலுப்பெற்றது. 1989ல் அவர் ஆட்சிக்கு வந்தபின் எடுத்த முதல் நடவடிக்கை கொசாவியர்கள் அனுபவித்து வந்த வரையறைக்குட்பட்ட சுயாட்சியையும் ரத்து செய்தது தான். கொசாவா மாணவர்களுக்கு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமது சொந்த அல்பேனிய மொழியில் படிக்கும் உரிமையும் நீக்கப்பட்டது. செர்பிய மொழியையும் எழுத்து வடிவத்தையும் திணித்ததை எதிர்த்து மாணவர்கள் போராடிய போது, நூற்றுக்கணக்கானோர் கல்லூரிகளை விட்டு வெளியேற்றப்பட்டனர். பிரிஸ்ட்டினியாவில் உள்ள கொசாவா பல்கலைக் கழகத்தில் இப்போது செர்பிய மாணவர்கள் மட்டுமே உள்ளனர். பெரும்பான்மையான அல்பேனிய மாணவர்கள், மக்களின் வீடுகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களில் தற்காலிக பள்ளிகளை ஏற்படுத்திப் படிக்கின்றனர். 'அங்கீகரிக்கப்பட்ட' கல்வியைப் பெற முடியாதவர்களாக, ஒரு தலைமுறை மாணவர்கள் இருந்து வருகின்றனர். இதைவிடக் கொடுமை என்னவெனில், 1990ல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த போது ஒரே நாளில் அவர்கள் ஒட்டுமொத்தமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். ஏறத்தாழ ஒரு லட்சம். தொழிலாளர்கள் வேலை நீக்கம் (மக்கள் தொகையில் கால் பகுதியினருடன் தொடர்புடைய) செய்யப்பட்டனர். இன்றளவும், அவர்கள் வேலையில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இன்று 70% மக்கள் வேலையற்றவர்களாக உள்ளனர். பெரும்பான்மை வேலைகள் செர்பியர்களுக்கே தரப்பட்டுள்ளது.

இத்தகைய கொடூரமான தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்து போஸ்னியர்களும் குரோஷியர்களும் செய்ததைப் போல, தொடக்கத்திலேயே கொசாவிய மக்கள் ஆயுத எழுச்சியை மேற்கொள்ளவில்லை. ஆனால், 1992ல் இப்ராஹிம் ருகோவாவை அதிபராகக் கொண்ட, கொசாவா குடியரசை அறிவித்தனர். ஆனால், செர்பிய ஆட்சியாளர்களின் தலையீட்டால் 1992ல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த போட்டி அரசாங்கம் செயல்பட முடியவில்லை. 1995ல் டேய்ட்டன் அமைதி ஒப்பந்தத்தின் போது போஸ்னியா, குரோஷியா மட்டுமே அதில் இணைத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் கொசாவா கண்டு கொள்ளாமல் விடப்பட்டது. மேற்கு நாடுகளில் ஆதரிக்கப்பட்ட இந்த அமைதி வழி இயக்கத்திற்கு துரோகமிழைக்கப்பட்டது.

1996 வரையிலும் கூட இந்த இயக்கம் அமைதி வழியிலேயே சென்றது. டி.எல்.கே. வின் செயலற்ற தலைமையானது மேற்கு நாடுகளின் வழிகாட்டலின் கீழ், சுயாட்சிக்காகப் பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால், எதையும் சாதிக்க இயலவில்லை. '96 செப்டம்பர் 1ல், ருகோவா மற்றும் மிலோசெவிக் கையொப்பமிட்ட பிரிஸ்ட்டினியா பல்கலைக் கழக மாணவர்கள் குறித்த ஒப்பந்தம் நடை முறைப்படுத்தப் படவில்லை. இதற்குப் பிறகு, கொசாவா விடுதலைப்படை ருகோவாவை 'கொசாவா காந்தி' என்று பழித்துரைத்து, டி.எல்.கே.வின் செயலற்ற தலைமையை இழிவுபடுத்தியதில் ஆச்சரியமேதுமில்லை.

மேற்கத்திய நாடுகள் கடுமையாக வலியுறுத்திய போதும், கொசாவா மக்கள் யூகோஸ்லாவிய பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்களிக்கவில்லை. மேற்கத்திய நாடுகள் ரசிய ஆதரவு மிலோசெவிக்கைத் தூக்கி எறிய விரும்புகின்றன. அதற்காக கொசாவா மக்களை தேர்தலில் பங்கெடுக்க சொல்கின்றன. ருகோவாவையும், டி.எல்.கே.வையும் மேற்கத்திய நாடுகள் பலமாக ஆதரிக்கும் அதே வேலையில், அமெரிக்கா கே.எல்.ஏ. வை பயங்கரவாத அமைப்பு என வரையறுத்துள்ளது. ஈரான் கே.எல்.ஏ. வுக்கு உதவி செய்வதாகப் புரளிகளையும் பரப்புகிறது. ஐரோப்பிய யூனியனும் கூட கே.எல்.ஏ. வின் வன்முறையை கண்டனம் செய்துள்ளதுடன், மிதவாதத் தலைமையானது வன்முறைத் தாக்குதல்களையும், பயங்கரவாத நடவடிக்கைகளையும் தெளிவாகக் கண்டிக்க வேண்டும் என்று கோருமளவிற்குச் சென்றுள்ளது. மேற்கத்திய நாடுகள் பிரிவினையைக் கடுமையாக எதிர்க்கின்றன. சுயாட்சியையே ஆதரிக்கின்றன.

இன்று, டி.எல்.கே.வும் இதர அமைதிவழி அமைப்புகளும் கொசாவாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளில் வாழும் கொசாவியர்களிடமும் கூட மேலும் தனிமைப்பட்டு வருகின்றன. ருகோவா வெளிநாட்டில் இயங்கும் கொசாவாவின் அரசாங்கத்தின் மீதான கட்டுப்பாட்டையும் இழந்துள்ளார். பிரிஸ்ட்டினியா பல்கலைக்கழகத்தில் அல்பேனிய மாணவர்களை மீண்டும் சேர்க்கக் கோரும் மாணவர்களின் போர்க்குணமிக்க போராட்டங்கள் அவரது நிலையை மேலும் மோசமாக்கியுள்ளன. ஜெர்மனியிலும், ஸ்விட்சர்லாந்திலும் வசிக்கும் முற்போக்கு அல்பேனியர்களும், கே.எல்.ஏ. வைத்தான் ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது.

### *ஏகாதிபத்திய தலையீட்டை எதிர்ப்போம்*

கொசாவா இயக்கம் குறித்த மேற்கு நாடுகளின் கொள்கையானது முழுக்க முழுக்க, யூகோஸ்லாவியாவிற்காக ரஷ்யாவுடன் நடத்தும் போட்டியால்தான் தீர்மானிக்கப் படுகின்றது. அவர்கள் ரஷ்ய ஆதரவு மிலோசெவிக்கிற்கு அழுத்தம் தர அல்லது வெறியேற்றவே, மிதவாதிகளுக்கு ஆதரவு தந்தனர். மிலோசெவிக்குக்குப் பதில் மேற்கு ஆதரவு அடிவருடியை ஆட்சியலமர்த்த விரும்புகின்றனர். மாற்றாக, மாண்டேநெக்ரோவில் நடந்ததைப் போல தமது அடிவருடியால் அரசாளப்படும் சுயாட்சி பொருந்திய கொசாவாவைக் கோருகின்றனர். ஆனால், கே.எல்.ஏ. மற்றும் பிரிவினை பற்றிய சிக்கல்களில் மேற்கு நாடுகளும் ரசியாவும் ஒன்றுபட்டு நிற்கின்றன. ஒன்று கே.எல்.ஏ. வை ஒழித்துக் கட்டுவது அல்லது ராணுவ நடவடிக்கையின் மூலம் யூகோஸ்லாவிய கூட்டமைப்பிற்குள் ஒரு சுயாட்சியை ஏற்க வைப்பது என்றே இருவரும் விரும்புகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கு நாடுகளின் இரட்டை வேடமும், சதிகாரத் தன்மையும், அவர்கள் மே-ஜூனில் வைத்த நிலைபாட்டை, மாபெரும் செர்பிய தாக்குதலுக்குப் பிறகு மாற்றிக் கொண்ட போதே தெரிய வந்தது. ருகோவாவும் டி.எல்.கே.வும் கே.எல்.ஏ. மேலாதிக்கம் பெருகுவதைத் தடுக்கின்றன. நேட்டோ செர்பியர்களின் கொடுமையை எதிர்த்து பெருங் கூச்சல் போட்டது. ராணுவ நடவடிக்கை எடுக்கப் போவதாக தொடர்ந்து மிரட்டி வருகிறது. நேட்டோ படையின் யூகோஸ்லாவிய எல்லைப் புறத்தில் ராணுவப் பயிற்சிகளை நடத்தினர். செர்பியப் படை பின்வாங்கியது. ரசியா (நேட்டோ தாக்குதலைத் தவிர்க்க) மிலோசெவிக்கை உடன் சந்தித்தது.

இதுபோலவே, அமெரிக்காவின் பால்கன் பிரிதிநிதி ரிச்சர்ட் ஹால்புருக் ஜூன் மாதம் முழுவதும் பெல்கிரேடுக்கும் கொசாவாவுக்கும் பயணம் புரிந்தார். மிலோசெவிக்கிடம் சுயாட்சி பற்றி வலியிறுத்த முயற்சித்தார். அதே வேளையில், கே.எல்.ஏ. வையும் சுயாட்சியை அங்கீகரித்து டி.எல்.கே.வின் வாலாக மாறவும் வலியுறுத்த முயற்சித்தார். ஆனால், அவருடைய முயற்சிகள் முழுமையாகத் தோல்வியடைந்தன. இந்த முயற்சிகளின் தோல்வியுடன் நேட்டோவின், கொசாவா நிலைப்பாடும் திடீரென மாறியது.

மே-ஜூனில் தாக்குதல் தொடுப்போம் என்று தீவிரமாக அச்சுறுத்தி வந்ததிலிருந்தும், ஜூலையில் கொசாவாவில் தலையிடுவதிலிருந்தும் பின் வாங்கின. போர் நிறுத்த ஒப்பந்தத்தை மட்டுமே கோரினர். முந்தைய கோரிக்கையான செர்பியப் படைகள் கொசாவாவிலிருந்து வெளியேற வேண்டும் என்பதைக் கூட வலியுறுத்தவில்லை. இந்த அறிவிப்பானது, கே.எல்.ஏ. மீதான தனது தாக்குதலைத் தீவிரப்படுத்த, செர்பியப் படைகளுக்கு ஒரு சமிக்ஞையாக ஆனது. மேலும், உண்மையில் இதுதான் நடந்தது. கே.எல்.ஏ.வின் ஒரு முக்கிய மையமான லோட்ஜா, என்ற கிராமத்தை ஒட்டி செர்பிய படைகள் தீவிர குண்டு வீச்சுக்களை நடத்தினர். டாங்குகள், ஹெலிகாப்டர்கள், கவச வண்டிகள் கொண்டு ஒட்டு மொத்த தாக்குதல் தொடுத்தனர். கே.எல்.ஏ. வின் முக்கியத் தளமான மாலிசெவோ கொடூரத் தாக்குதலை சந்தித்தது. இரண்டு லட்சத்துக்கும் மேலான மக்கள் அகதிகளாயினர். இதன் தொடர்ச்சியாக தற்போது படுகொலைகளும், தீவிரத்தாக்குதலும் தொடர்கின்றன.

கடந்த ஓராண்டில் ஏறக்குறைய இரண்டாயிரம் கொசாவாவின் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இருந்த போதும் கே.எல்.ஏ. 25% பகுதியைக் கட்டுப் பாட்டில் வைத்துள்ளது. தலைநகரான பிரிஸ்டினியாவில் கூட முழு ஆதரவைப் பெற்றுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் கே.எல்.ஏ. போராளிகள் தமது சிவப்பு, கறுப்பு சீருடைகளை அணிந்து கொண்டு, வெளிப்படையாக சாலைத் தடைகளை அமைத் துள்ளனர். அடையாள அட்டைகளையும், கார்களையும், பரிசோதிக்கின்றனர். தற்போது கே.எல்.ஏ. ''மக்கள் அரசியல் வாதிகளை நம்ப வேண்டாம், ஆயுத எழுச்சியில் பங்கு கொள்ளுங்கள்'' எனக் கூறும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர். முழு சுதந்திரத்திற்கு குறைவான எதையும் ஆதரிக்கும் எந்த பேச்சுவார்த்தைக்குச் செல்லும் நபரையும் கொல்லப் போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

கே.எல்.ஏ. வை பேச்சுவார்த்தைக்கு வரச் செய்யவும் சுயாட்சியை ஏற்றுக் கொள்ளச் செய்யவும்தான் மேற்கு நாடுகள், செர்பிய தாக்குதலுக்கு செயல் உத்தி ரீதியான ஆதரவளித்தன என்பது தெளிவாகப் புரியும் விசயமாகும். செர்பியர்கள் தமது தாக்குதலை முடித்துக் கொண்டதாக அறிவித்தவுடன், யூகோஸ்லாவிய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த ஒரு குழுவை தயார் செய்து விட்டதாக, மேற்கு நாடுகள் அறிவித்தன. கே.எல்.ஏ. வை இந்த குழுவில் சேருமாறு அதிகார பூர்வமாக அறிவிப்பு விடப்பட்டது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், போரிடும் சக்திகளை ராணுவ நடவடிக்கை மூலம் ஒடுக்கி, மிதவாதிகளுடன் ஒரு ஒப்பந்தம் போடுவது. கே.எல்.ஏ. வை சரணடையச் செய்வது அல்லது பேச்சுவார்த்தையிலிருந்து தனிமைப் படுத்துவது-இதுதான் மேற்கு நாடுகளின் திட்டமாகும். மேற்கு நாடுகள் தேசிய இன விடுதலை இயக்கங்களை ஆதரிப்பதில் செய்யும் மோசடிகளுக்கும், துரோகத்துக்கும் இரட்டை வேடத்துக்கும் இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதே சமயத்தில் செர்பியர்கள் பெரும் தாக்குதலைத் தொடர்கின்றனர். ஆயிரக்கணக்கானோரைப் படுகொலை செய்கின்றனர். பலர் கொசாவாவின் மையப் பகுதியிலுள்ள காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். மேற்கத்திய நாடுகள் தமது போலித்தனமான அக்கறையைக் காட்டு வதுடன், மீண்டும் தாக்குதல் நடத்தப் போவதாக அச்சுறுத்தி யுள்ளன.

### *நேட்டோ படைகளே*
### *பால்கன் பகுதியை விட்டு வெளியேறு!*

கே.எல்.ஏ. வால் நடத்தப்படும் ஆயுதப் போராட்டத்துடன் கூட, சென்ற ஆண்டிலிருந்து துவக்கியுள்ள அல்பேனிய மக்களின் ஆயுத எழுச்சியும் பால்கன் பகுதியில் மேலும் ஒரு யுத்த களத்தை உருவாக்கியுள்ளது. பெருமளவிலான நேட்டோ படைகளை இறக்கி போஸ்னியாவை 'அமைதிப்'படுத்தி விட்ட பின்னர், மேற்கத்திய நாடுகள் அருகாமையிலுள்ள அல்பேனியப் பகுதிகளில் கண் வைத்துள்ளன. மே மாதத்தில் நேட்டோ கொசாவாவின் எல்லையிலுள்ள நாடுகளில் படைகளைக் குவிப்பது பற்றிய திட்டத்தை ஆமோதித்தது. அல்போனியாவில் 7000 பேர் கொண்ட படையை நிறுத்த தயாராகிக் கொண்டுள்ளது (இது மறைமுக ஆக்கிரமிப்பே) மாசிடோனியாவில் ஏற்கனவே உள்ள 800 எண்ணிக்கை யிலான படைகளைப் பலப் படுத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

ஏகாதிபத்திய சக்திகள் தமது படைகளை பால்கன் பகுதியில் நிறுத்த திட்டமிட்டுள்ள அதே வேளையில், அல்பேனிய மக்களும் அவர்களின் கொசாவா சகோதரர்களும் நீண்ட காலப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும். ஒரு காலத்தில் குருசேவியத் திரிபுவாதத்திற்கெதிராக, சீனாவுடன் இணைந்து நின்ற மாபெரும் சோசலிச நாடாக அல்பேனியா விளங்கியது. இன்று திரிபுவாதமும் முதலாளிய மீட்சியும் அதை வறுமையிலும் அராஜகத்திலும் தள்ளிவிட்டுள்ளது. அல்பேனிய மக்களும் அவர்களின் கொசாவா சகோதரர்களும் தமது மாபெரும் போராட்டப் பாரம்பரியத்தை தொடர்வார்கள் என நம்புவோம். அனைத்து கம்யூனிச மற்றும் முற்போக்கு சக்திகள் அனைவரும், கொசாவா மக்களின் தேசிய விடுதலையை ஆதரிப்பதுடன், பால்கன் பகுதியிலிருந்து நேட்டோ படைகளைத் துரத்தியடிக்கக் கோர வேண்டும்.

நன்றி – "The Vanguard"



படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிய–லெனினிய ஆய்வாளர் தோழர்.கோ.கேசவனுக்கு செவ்வஞ்சலி!

மார்க்சிய ஆய்வாளரும், புரட்சிகர இயக்கத்தின் ஆதரவாளருமான தோழர்.கோ.கேசவன் கடந்த செப்டம்பர் 16ம் தேதி மாரடைப்பால் மரணமடைந்தார். புரட்சிகர, முற்போக்கு சக்திகளுக்கு அவரை அறிமுகம் செய்யத் தேவையில்லை.



அவருடைய ஆய்வுகளும், எழுத்துக்களும் மிகப் பெரிய அளவில் வாசிப்புகளுக்கும், விவாதங்களுக்கும் உள்ளானவை. அவர் நக்சல்பாரி இயக்கத்திலிருந்து தோன்றிய மிகச் சிறந்த ஆய்வாளர்.

எழுபதுகளில் தமிழகத்தில் பீறிட்டுக் கிளம்பிய நக்சல்பாரி எரிமலைக் குளம்பிலிருந்து பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிவாளர்கள் வெளிவந்தனர். அவர்களில் குறிப்பிடத்தகுந்த மிக முக்கியமானவர் தோழர். கோ.கேசவன். பிறகு நக்சல்பாரி இயக்கத்திற்கு ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து பலரும் பிழைப்புவாதிகளாகவும், மார்க்சியத்திற்கு எதிரான முகாம்களுக்கும் சென்றனர். ஆனால் தோழர். கோ. கேசவன் நடைமுறையிலிருந்து விலகி நின்றாலும் கூட, தமிழக சூழல்களை, பிரச்சினைகளை குறித்த ஆழமான மிகமிக சிக்கலான ஆய்வுகளையெல்லாம் மார்க்சிய–லெனினிய–மாசேதுங் சிந்தனை வழி நின்று ஆய்வு செய்வதில் மிக்க பொறுப்புடனும், மிகுந்த கவனத்துடனும் அயராது உழைத்தார். எந்தச் சூழலிலும், எந்தப் பிரச்சினையிலும் மார்க்சிய–லெனினிய–மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிப்பதிலிருந்து அணு அளவும் விலகாதிருந்தார்.

தன் வாழ்நாளில் 30க்கும் மேற்பட்ட நூல்களும், பல கட்டுரைகளும், ஒரு மொழி பெயர்ப்பு நூலும் எழுதியுள்ளார். கலை, இலக்கியம், அரசியல், சமூகம் குறித்த பல்வேறு தளங்களிலும் அவர் அளித்துச் சென்றுள்ள படைப்புகள், மார்க்சிய கருவூலத்திற்கே அவர் அளித்த மிகச்சிறந்த பங்களிப்புகள் எனக் கூறலாம்.

ஆரம்ப கட்டத்தில் தமிழகத்தில் செயல்பட்டு கொண்டிருந்த 'புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில்' இணைந்து செயல்பட்ட தோழர். கோ. கேசவன், அவ்வியக்கம் தமிழகம் தழுவிய அளவில் கலை, இலக்கிய களத்தில் ஏற்படுத்திய மிகப்பெரிய தாக்கத்திற்கு அவரும் ஒரு காரணம். அவ்வியக்கத்தின் இதழான 'செந்தாரகையில்' அவர் எழுதிய பல சிறுகட்டுரைகளும், தொடர் கட்டுரைகளும் புதிய சக்திகளை வென்றெடுப்பதிலும், வளர்த்தெடுப்பதிலும் மிகப்பெரிய பங்காற்றின என்பது யாராலும் மறுக்க முடியாதது.

கடைசியாக திருச்சி கல்லூரி ஒன்றில் பேராசிரியராக பணியாற்றிய தோழர் கோ. கேசவன். ஆசிரியர் சங்கத்திலும் உறுதியாக செயல்பட்டவர். குறிப்பாக ஆசிரியர்–மாணவர் உறவு பற்றியும், மாணவர் பிரச்சினைகளில் ஆசிரியர் சங்கத்தின் கடமை பற்றியும் கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் தோழர். கோ.கேசவன் உயர்த்திப் பிடித்த புரட்சிகர கருத்துக்களும், நடைமுறைகளும் ஆசிரியர், மாணவர்களால் கூர்ந்து கற்று அறியப்பட வேண்டியவையாகும்.

நம்முடைய முற்போக்கு மாணவர் சங்கம், முற்போக்கு இளைஞர் அணி ஆகியவற்றின் வளர்ச்சியில் அக்கறை உடையவராகவும், பல ஆலோசனைகள் வழங்குபவராகவும் இருந்துள்ளார். கடைசியாக மு.இ.அ. நடத்திய அதன் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு வந்திருந்த தோழர் ஆற்றிய சிறப்புரை வந்திருந்தவர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும், ஆக்கப்பூர்வமான விவாதத்தையும் ஏற்படுத்தக்கூடிய அளவில் ஆழமானதாகவும், பொருட் செறிந்ததாகவும், நம்பிக்கையூட்டக் கூடியதாகவும் இருந்தது.

இறுதியாய் பார்க்கும் பொழுது புரட்சிகர இயக்கத்தை அடையாளம் காணுவதிலும், அதோடு தன்னை இணைத்துக் கொள்வதும் இல்லாமல் போனது, தனி நபராய் நின்றுகொண்டு சராசரி வாழ்க்கையையும் புரட்சிகர சிந்தனையும் இணைத்துச் செல்வதில் ஏற்படுகிற பிரச்சினைகள், புரட்சிகர இயக்கம் துவங்கி, தன்னார்வக்குழு, தலித் அமைப்புகள் வரை அனைத்து மேடைகளிலும் பேசியது ஆகியவை தோழர் மீதான சில முக்கியமான விமர்சனங்களாக இருந்த போதிலும், தனி நபராய் நின்றாலும் இறுதிவரை தத்துவத்திலிருந்து விலகாதிருந்தது, எந்த மேடையில் பேசினாலும் தனது நிலைப்பாடுகளில் உறுதியாக நின்றது ஆகியவை, அவருக்கு புரட்சிகர தத்துவத்தின்பால் இருந்த ஆழமான புரிதலையும், பற்றையும் பறை சாற்றுகிறது.

தோழரின் படைப்புகளும், பங்களிப்புகளும் புரட்சிகர போராட்டங்களின் ஊடாகவும், புரட்சிகர இயக்கம் மற்றும் வரலாற்றின் மூலமாகவும் பரிசீலிக்கப்படும், மதிப்பிடப்படும். எவை எப்படியாயினும், அவை புதிய சிந்தனைகளுக்கும், ஆய்வின் திசை வழிகளுக்கும், தத்துவார்த்த போராட்டங்களுக்கும் வழிகாட்டிய பெருமைக்குரியதாகவே இருக்கும்.

மார்க்சியத்தின் எதிரிகள் அவரை 'குசுவிட்டால் கூட கேசவன் வர்க்க குசுதான் விடுவார்' என்பார்கள். தோழர் மாசேதுங் கூறியது போல 'ஒவ்வொரு வார்த்தைக்கும் பின்னால் ஒரு வர்க்கம் இருக்கிறது' என வர்க்க கண்ணோட்டத்தில் உறுதியாக இருந்ததே அவருடைய பெருமையும், சிறப்பும் ஆகும்.

புரட்சிகர இயக்கங்களும், மார்க்சிய ஆர்வலர்களும், அறிவுஜீவிகளும், செயல்வீரர்களும் தோழர் கோ.கேசவனுக்கு மிக கடமைப்பட்டவர்கள். அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய மிக அவசியமான குணங்கள் பல உள்ளன.

வர்க்க கண்ணோட்டத்தில் இருந்து, மார்க்சிய–லெனினிய–மாசேதுங் சிந்தனை வழி நின்று ஆய்வு செய்வதிலிருந்து அணு அளவும் விலகாதிருத்தல், மிகுந்த பொறுப்புடனும், கவனத்துடனும் பிரச்சினைகளை கையாளுதல், அயராது உழைத்தல், சிந்தித்தல் ஆகியவற்றை நாம் அவரிடமிருந்து மரபுரிமையாய் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அவருடைய மறைவால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை நிரப்பியே ஆக வேண்டும். தத்துவார்த்த போராட்டத்தை கூர்மைபடுத்தலும், ஒரு தலைமையின் கீழ் இந்தியாவில் மாபெரும் புரட்சிகர இயக்கத்தை கட்டியெழுப்பி விடுதலையை நோக்கி வீறுகொண்டெழச் செய்வதுமே நாம் அவருடைய கனவுகளை நனவாக்குவதும், அவருக்கு செவ்வஞ்சலி செலுத்துவதுமாகும்.

**தோழர். கோ. கேசவன் கனவுகளை நனவாக்குவோம்!**



படிப்பகம்

www.padippakam.com

# வேலையின்மை — ஒரு உலகளாவிய நோய்

"தொழில்மயமான தேசங்களின் அழிவிற்கும் அல்லது தேசங்களின் தொழில்துறை வீழ்ச்சிக்கும் வரும் பத்தாண்டுகளின் உயர்ந்த பட்ச நிரந்தரமான 'அமைப்பியல்' சார்ந்த வேலையின்மைதான் காரணம் என்பதைக் கண்டு சோர்ந்துபோயுள்ளனர் அழிவைப் பற்றிச் சிந்திக்கின்ற பொருளாதார நிபுணர்கள். கடந்த தலைமுறையின் இத்தகைய காட்சிகள் அரசியல்வாதிகளை சுரத்தில் உளறும் நிலைக்குத் தள்ளியுள்ளன. தொழிலாளர் பற்றி புள்ளி விவரங்களை தரும் தேசிய துறைகள் அனைத்தும் ஏற்கனவே பயத்தின் அமைச்சகங்களாகி விட் டன". "வரலாறு தழுவிய நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாக ஐரோப்பா உணர்கிறது. அவசர காலத்தின் இது போன்ற பல உணர்வுகள் தான் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளையும் பற்றிக் கொண்டுள்ளன".

மேற்கண்டவைகள் ஏதோ இடதுசாரி பத்திரிக்கைகளில் வெளிவந்த மேற்கோள்கள் அல்ல. மாறாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதான அடையாளமான, 'தீ டைம்' பத்திரிக்கையில் வெளிவந்தது தான். இது நிலமையின் வீரிய முக்கியத்துவத்தை மட்டுமே உணர்த்துகிறது. உலகின் மொத்த உழைப்பாளர்களில் 30% அல்லது 820 மில்லியன் மக்கள் வேலையற்றோராக இருக்கிறார்கள். சர்வதேச அளவில் தொழிலாளர் அமைப்பின் குறைந்த பட்சம் 120 மில்லியன் பேர்கள் பதிவு செய்யப்பட்டு வேலையற்றோராகவும் மேலும் 700 மில்லியன் பேர்கள் தகுதிக்கேற்ற வேலை கிடைக்காதவர்களாகவும் உள்ளனர். மேலும், ஆண்டுதோறும் ஏறத்தாழ, 47 மில்லியன் வேலை தேடுபவர்கள் கூடுதலாக உழைப்புச் சந்தையில் நுழைகின்றனர் என்றும் அவர்களில் 38 மில்லியன் பேர்கள் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு கூறுகிறது. இப்பரந்த வேலையற்றோரின் கடல் வளர்ச்சியடையாத நாடுகளின் தனிச் சிறப்பான விசயமாக இனி எப்போதுமே இருக்கப் போவதில்லை. 1930இன் மாபெரும் வீழ்ச்சி முதல் முன்னெப்போதும் காணப்படாத அளவிற்கு இந்நோய் வளர்ச்சியடைந்த நாடுகளை பலமாகத் தாக்கியுள்ளது. 'தீ டைம்' பத்திரிக்கையின் வறட்டுப் பிடிவாதக்காரர்களை மேலும் பயத்தில் ஆழ்த்தியுள்ளது. என்னவெனில் இத்தகைய வேலையற்றோர் விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவதை எத்தகைய 'கடும் நடவடிக்கைகளினாலும் தடுத்து நிறுத்த முடியாதென்பதுதான். முதலில் இதை அவர்கள் ஏதோ ஒரு தற்காலிக நிகழ்வு என்று ஒதுக்கித் தள்ளினர். ஆனால், தற்போது இதை 'நிரந்தரமான அமைப்பியல் சார்ந்த வேலையின்மை' என்பதை ஒத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பகாசுர பன்னாட்டுக் கம்பெனிகளும், அரசுத் துறைகளும், வங்கிகளும் தங்களது நிறுவன- அலுவலர்கள் குறைப்பை தொடர்ந்து செய்து கொண்டும் தங்களது. அலுவலர்களின் எண்ணிக்கையை மேலும் பெருமளவில் குறைக்க தற்போது திட்டமிடுவதும், 21ஆம் நூற்றாண்டிற்குள் சரியாக நுழையவிருப்பதும், உலக மக்கள் எதிர்கொள்ள வேண்டிய மிகப்பயங்கரமான காட்சியாக நிற்கிறது. மேற்கத்திய கம்பெனிகள் தங்கள் நடவடிக்கைகளை சுருக்கிக் கொள்ளும் போது அல்லது உயர் மதிப்பு தகவமைப்பு செயல்பாடுகளுக்கு செல்லும் போது பல லட்சக்கணக்கான வேலைகள் மறைந்து விடும் என்றும் உடல் உழைப்பிற்கான கூலி இப்போதிருப்பதை விட பாதியாகவோ அல்லது அதற்கும் அதிகமாகவோ வீழ்ச்சியடையும். அப்போது லூடைட் (18ம் நூற்றாண்டில் தொழிலாளர்கள் இயந்திரங்களை அடித்து நொறுக்கியது) மாதிரியான எழுச்சி ஏழைகளிடமிருந்தும் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களிடமிருந்தும் உருவாகும் என ஹார்வார்டு பள்ளியைச் சேர்ந்த மைக்கேல் ஜென் செனை மேற்கோள் காட்டி நிதிமூலதனத்தின் லண்டன் மாநகரப் பொருளாளர் எழுதியுள்ளார்.

முதலாளித்துவத்தின் இருத்தலுக்கான முறைமைகளின் பேரழிவுக்கு வேறெதையும் விட இது நிச்சயமாக மிக முக்கிய காரணியாக இருக்கும். முதலாளித்துவ அமைப்பில் வேலை என்பது மனித இருத்தலுக்கு அடிப்படையானதாகும். முந்தைய சமூகங்களில் மனிதன் நிலத்தை சார்ந்து வாழ்ந்தான். ஆனால் முதலாளித்துவ அமைப்பில் வேலை அல்லது சுயவேலை வாய்ப்பு என்பது வாழ்விற்கான முன்நிபந்தனையாக உள்ளது. உலக யுத்தத்திற்குப் பிந்தைய கால கட்டத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் வழங்கப்பட்டு வந்த நலத் திட்டங்கள் மிகக் கொடுமையாக குறைக்கப்பட்டதால் லட்சக்கணக்கானோர் தங்களது வேலைகளிலிருந்து தூக்கி எறியப்பட்டு அவர்களின் எதிர்காலம் மிகவும் பயங்கரமாகத் தோன்றுகிறது. தனது மக்களில் பெரும்திரளினரின் வாழ்வுக்கான அடிப்படையை இந்த சமூக அமைப்பு வழங்க முடியாவிட்டால், அவ்வமைப்பு நிலைத்திருப்பதற்கு எந்த தார்மீக உரிமையும் நிச்சயமாக இல்லை.

இக்கட்டுரையில், நாம் நமது விவரங்களை குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளுடன் சுருக்கிக் கொள்வோம், ஏனெனில், இங்கு நிலவும் வேலையின்மையின் அளவு என்பது ஒரு புதியதாக அதிகரித்துக் கொண்டிருக்கும் நிகழ்வாகும். மாறாக, பின்தங்கிய நாடுகளில் இது எப்போதுமே நிலைத்து வந்த ஒன்றாகும்.

மேலும் இவ்விரண்டிற்குமிடையில் அளவு மற்றும் பண்பு ரீதியான வேறுபாடுகளும் உள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளில் அதிக அளவிலான வேலையின்மை முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியோடு தொடர்புடையதாக இருக்கும் போது, குறை வளர்ச்சியுள்ள நாடுகளில் மிகப்பரந்த கடல் போன்ற வேலையின்மையானது முதலாளித்துவ வளர்ச்சியின்மையின் விளைபொருளாகவே உள்ளது. இத்தகைய பின்தங்கிய நாடுகளில் அரைநிலப்பிரபுத்துவ அமைப்பு முறையின் விளைவாக லட்சக்கணக்கான விவசாயிகள், தங்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும் வகையிலான எந்தவித தொழில் வளர்ச்சியுமில்லாத நிலையில் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதனால் மிகப் பெருமளவிலான வேலையின்மையும் தகுதிக்கேற்ற வேலையின்மையையும் கிராமப்புறங்களில் உருவாகியுள்ளது. முதலாளித்துவ அமைப்பு முறையின் தற்போதைய நெருக்கடி அனைத்து நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு மூன்றாம் உலக



படிப்பகம்

www.padippakam.com

நாடுகளில் குறைந்தபட்ச வேலை வாய்ப்பையும் அழித்துள்ளது. ஆனால், இக்கட்டுரையில் வளர்ச்சியடைந்த நாடுகளில், இப்புதிய நோயின் தீவிரத்தைப் பற்றி காண்பதில் கவனத்தைக் குவிப்போம்.

## பகுதி I

### வரலாற்று ரீதியான கண்ணோட்டம்

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் முதலாளித்துவ உலகில் முழுமையான வேலை வாய்ப்புகள் இருந்தன. முதலாளித்துவத்தின் பொற்காலமென அழைக்கப்பட்ட இது தொழிலாளி வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து 40 மில்லியன் மக்களை படுகொலை செய்த பிறகு உருவானது. ஆனால் 1960களின் பிற்பகுதியில் இந்த உயர்ந்த வளர்ச்சி தொய்வடைந்து, வேலையின்மை பெருகியது. 1964-73 காலகட்டத்திலான வேலையின்மை குறியீடுகள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. பிறகு 1973ல் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடி வலுவிழந்த பொருளாதாரங்களை நெருக்கடிக்குள் தள்ளியது. வேலையின்மை தற்போது முன்பை விட அதிகரித்தது.

தொழிற்துறை உற்பத்தி தேக்கத்துடன் கூடிய பணவீக்கம் (Stagflation) 1980களில் தொடர்ந்து இருந்து வந்தது. அது 1979ஆம் ஆண்டின் இரண்டாவது எண்ணெய் நெருக்கடியினால் மேலும் தீவிரமடைந்தது. 1980களின் முற்பகுதியில்தான் சர்வதேச முதலாளிகள் தங்களது கட்டமைப்பு மறுசீரமைப்பு திட்டத்தை (SAP) மூன்றாம் உலக நாடுகளுக்கும், ரீகனாமிக்ஸ், தாட்சரிசம் போன்ற திட்டங்களை முதலாளித்துவ நாடுகளுக்கும் அறிமுகப்படுத்தினர். தங்களது நெருக்கடியிலிருந்து மீண்டு வர இவை இரண்டும் தொழிலாளி வர்க்கத்தையும் மக்களையும் மிகக் கடுமையாகத் தாக்கின.

இத்திட்டங்கள் உடனடி வீழ்ச்சியிலிருந்து பொருளாதாரத்தை மீட்டு, பணவீக்க விகிதத்தை கட்டுப்படுத்திய போதும் வேலையின்மையின் மாபெரும் அதிகரிப்புடன் வளர்ச்சி வீதம் தொடர்ந்து தாழ்ந்த நிலையில் இருந்தது. பின்வரும் அட்டவணை இவ்விரண்டு காலனிகளும் 1973க்கு முன்பும் 1980களிலும் ஜி.7 (மாபெரும் 7) நாடுகளின் நிலைமையை விளக்குகின்றன.

**G-7 நாடுகளில் வேலையின்மை உழைப்பாளர்களின் விகிதம்**

| | 1967–73 | 1983–92 |
|---|---|---|
| மேற்கு ஜெர்மனி | 0.8 | 6.0 |
| பிரான்சு | 2.2 | 9.7 |
| இத்தாலி | 5.5 | 10.1 |
| பிரிட்டன் | 2.9 | 9.8 |
| அமெரிக்கா | 4.5 | 6.7 |
| கனடா | 4.2 | 9.6 |
| ஜப்பான் | 1.2 | 2.7 |

1980களில் வேலைவாய்ப்பு வளர்ச்சி பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. பகுதிநேர தொழிலாளர்களில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை பெருகியது. மேலும் மொத்த உற்பத்தி மதிப்பில் ஊதிய விகிதம் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. மேலும் உற்பத்தித் துறையில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. உண்மை ஊதியம் வீழ்ந்ததுடன், ஏழை பணக்காரர்களுக்கிடையிலான இடைவெளியும் அதிகரித்தது. தொழிலாளி வர்க்கத்தின் மீதான மிகக் கடுமையான தாக்குதலால் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் நிலைமை மிகவும் மோசமாகியது.

கம்யூனிஸ்ட் இயக்கங்களில் ஏற்பட்ட பின்னடைவுகள் இத்தகைய உழைப்பிற்கெதிரான மூலதனத்தின் மூர்க்கத்தனமான கொள்கைகள் உருவாகிட ஒரு குறிப்பிட்ட அளவிற்கு காரணமாக இருந்துள்ளன. 1980களின் துவக்கத்தில் உலகப் புரட்சியின் மாபெரும் கோட்டையாக இருந்த சீனா, திரிபுவாதத்திற்கு மாறியது தெள்ளத் தெளிவாயிற்று. உலகம் முழுவதுமுள்ள கம்யூனிச சக்திகளிடம் இது ஓர் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் இருந்த வலதுசாரி போக்குகளை, திரிபுவாத நிலைக்குத்தள்ள ஓர் கிரியாஊக்கியாக செயல்பட்டது. சீனாவின் தகர்வும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பலவீனமும் பிற்போக்குவாதிகள் மற்றும் வலதுசாரி சக்திகளுக்கு மூலதனத்தின் நலனுக்காக உழைப்பிற்கெதிராக மூர்க்கத்தனமான தாக்குதலை தொடுப்பதற்கான இந்த சந்தர்ப்பத்தை அளித்தன.

1991 வாக்கில், கடந்த 50 ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட மூன்றாவது கடுமையான வீழ்ச்சியினால் (முந்தைய இரண்டு, 1973 மற்றும் 1982) உலக ஏகாதிபத்திய சக்திகள் உலக மக்களின் மீது நேரடியான தாக்குதலுக்குத் தயாராகி விட்டன. இது காலனிய சகாப்தத்திற்கு பின்னர் இதுவரையிலும் கண்டிராத அளவில் ஈவிரக்கமின்றி கட்டவிழ்த்து விடப்பட்டது. இது தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் போன்ற பதாகைகளின் கீழ் வெளி வந்தன. இது மூன்றாம் உலக நாடுகளை மட்டுமின்றி வளர்ச்சியடைந்த நாடுகளின் நடுத்தர வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தையும் தாக்கியது.

## பகுதி II

### வேலையின்மையும் பெரும்கவலை தரும் தகுதிக்கேற்ற வேலையின்மையும்

1990களின் முற்பகுதியில் மூன்றாம் உலக நாடுகளின் கடன் நெருக்கடிகள். அமெரிக்காவின் வரவு செலவு (பட்ஜெட்) மற்றும் வர்த்தகப் பற்றாக் குறைகள், பெருமளவிலான ஆட் குறைப்பு, சரக்குகளுக்கான தேவையின் வீழ்ச்சி, பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர், இராணுவச் செலவினங்களில் ஏற்பட்ட கடுமையான வெட்டிக் குறைப்பு ஆகிய அனைத்தும் 1991/92ல் மேலும் ஓர் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. 1980களிலேயே தனது வேர்களைக் கொண்டிருந்த இந்த உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் போன்ற கொள்கைகள் உலக அளவில் படுவேகத்தில் உந்தித்தள்ளப்பட்டதானது எல்லா மனித உணர்வுகளையும் ஒதுக்கித் தள்ளியது. இப்பகுதியில் நாம் உலக மயமாக்கலின் கொள்கைகளைப் பற்றிய விவரங்களுக்குள் விரிவாகச் செல்லாமல் (பின்னர் அதை விளக்குவோம்) உழைப்பாளர்களின் மீதான அதன் தாக்கத்தை மட்டும் பகுப்பாய்வு செய்வோம்.

#### 1. உலகந்தழுவிய வேலையின்மை

'குறைந்த வளர்ச்சியடைந்த நாட்டு மக்களில் சுமார் 1/3 பகுதியினர் அல்லது 1.3 மில்லியன் மக்கள் நாளொன்றிற்கு 1 டாலருக்கும் குறைவான பணத்தில் (80 சென்டுகள் அல்லது 29 ரூபாய்) வாழ்க்கை நடத்துகின்றனர். மேலும் 800 மில்லியன் பேர்களுக்கு அதிகமானோர் போதுமான உணவின்றி இருக்கின்றனர்' என்று சமீபத்திய மனித வளர்ச்சி அறிக்கை கூறுகிறது.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பைச் சேர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

(ஓ.இ.சி.டி.நாடுகள்) 24 நாடுகளில் அதிகாரபூர்வமாக 35 மில்லியன் பேர்கள் வேலையில்லாதவர்கள். இது 1970களின் முற்பகுதியிலிருந்ததைப் போன்று மூன்று மடங்காகும். வேலையற்றோரின் உண்மையான எண்ணிக்கையோ 60லிருந்து 70 மில்லியனுக்கும் இடைப்பட்டதாக உள்ளது. 1990-94 காலகட்டத்தில் மட்டும் இந்நாடுகளின் வேலையற்றோர் எண்ணிக்கை 10 மில்லியன் உயர்ந்துள்ளது. ஓ.இ.சி.டி நாடுகளில் உள்ள சில முக்கிய நாடுகளின் கடந்த 30 ஆண்டுகளின் வேலையின்மையின் பெருக்கம் பற்றி அட்டவணையில் மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1973 நெருக்கடிக்கு முன் மிகக்குறைந்த அளவில் இருந்ததையும் அதற்குப் பின் தொடர்ந்து நிலையாக அதிகரித்துள்ளதையும் காட்டுகிறது. இதில் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கைகள் மொத்த உழைப்பாளர்களில் வேலையற்றோரின் சராசரி விகிதாச்சாரமேயாகும். அதன் முதல் மூன்று அட்டவணைப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தின் சராசரி விகிதமாகவும், இறுதிப் பத்தியில் இன்றைய வேலையின்மையின் விகிதமும் தரப்பட்டுள்ளன.

அமெரிக்காவில், ஒப்பீட்டளவிலான குறைந்த வேலையின்மை விகிதமானது பகுதிநேர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் மிக உயர்ந்த அளவிலான விகிதத்தை திரையிட்டு மறைக்கிறது. உண்மையில், வறுமை பற்றிய புள்ளி விவரம் ஐரோப்பாவை விட மிக அதிகமாக இருக்கும். மேலும், தொழிலாளி வர்க்கத்தின் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்துக் கொண்டே மிகப் பெரும் பகுதியான சமூக நலத்திட்டங்களைத் தற்போது குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் ஐரோப்பாவை போன்று அமெரிக்க மற்றும் பிரிட்டன் அரசாங்கம் வெகு காலத்திற்கு முன்பே, சமூக நலத்திட்டங்களை வெகுவாக குறைத்துவிட்டது. இன்று அமெரிக்காவின் 8 மில்லியன் பேர்கள் வேலையற்றிருக்கிறார்கள். இதை (யு.ஏ.டபிள்யூ) இன் (அமெரிக்க மோட்டார் கார் தொழிற்சாலை யூனியன்) வெளியீடுகள் இரட்டிப்பாகக் குறிப்பிடுகின்றன. மேலும் 40 மில்லியன் அமெரிக்க குடிமக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். (ஆண்டிற்கு 15,000 டாலர்கள்). 10 மில்லியன் குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளற்று உள்ளனர். வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளை எதிர்கொள்ள 7.5 மில்லியன் அமெரிக்கர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேலைகளை செய்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் 15% பேருக்கு உடல்நலக் காப்பீடு கிடையாது. வறுமைக்கோட்டு அளவிற்கான கூலிக்காக வாரத்திற்கு 40 மணி நேரம் உழைக்கும் தொழிலாளர்கள் மொத்த உழைப்பாளர்களில் 18% பேர்களாக உள்ளனர். இரண்டாவது அறுவடை (Second Harvest) என்ற அமெரிக்காவின் மிகப்பெரிய உணவு வங்கி 10 அமெரிக்கர்களில் ஒருவர் அல்லது 26 மில்லியன் பேர்கள் நன்கொடை உணவையே (Charitable Food) நம்பியுள்ளனர் என கணக்கிட்டுள்ளது.

பிரிட்டனின் மொத்த உழைப்பாளர்களான 28 மில்லியன் பேர்களில் 3 மில்லியன் பேருக்கு அதிகமானோர் வேலையில்லாதவர்கள். பிரிட்டனில் கைவிடப்பட்டோரின் இதுபோன்ற பயங்கரமான நிலைமைகள் 1930களின் நினைவுகளை கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. தங்களது வீடுகளுக்கு வாடகை கொடுக்க இயலாததாலும், ஒத்தி கொடுக்க முடியாமலும் ஆயிரக்கணக்கானோர் வீடற்றவர்களாகி உள்ளனர்.

1998 பிப்ரவரியில் ஜெர்மனியில் வேலையற்றோர் விகிதம் யுத்தத்திற்கு பிந்தைய உயர்ந்த பட்சமான 12.6%தை எட்டியது. இன்று, ஜெர்மனியில் மொத்த தொழிலாளர்களில் 8 பேருக்கு ஒருவர் வீதம், 5 மில்லியன் பேர்கள் வேலையின்றி இருக்கின்றனர். இன்று ஜெர்மனியில் சுரங்கத் தொழில், உலோகம், கார் தொழிற்சாலை மற்றும் எஃகு தொழிற்சாலைகளில் வேலையிழக்கக் கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்கவில்லை. ஜெர்மனி உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார சக்தி மிக்க நாடாக இருப்பினும் இந்த வீழ்ச்சி இறுதியில் முடிவுற்ற பின்னரும், வேலையின்மை குறையுமென்பதற்கான அறிகுறிகளே இல்லை யென்று பொருளாதார நிபுணர்கள் வெளிப்படையாக கூறுகின்றனர்.

பிரான்சில் வேலையின்றி தெருவில் வீசி எறியப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை பயமுறுத்திக் கொண்டிருக்கின்றது. அதிகாரப்பூர்வமான வேலையற்றோர் எண்ணிக்கை மொத்த உழைப்பாளர்களில் 12.5% அல்லது 3.5 மில்லியன் பேர்கள் என்றிருப்பினும் உண்மையான எண்ணிக்கை குறைந்த பட்ச அரசு உதவி கிடைக்காத நிலையில் அதிகார பூர்வமான வேலையற்றோர் பதிவேட்டில் கூட இடம் பெற மாட்டார்கள். பிரான்சில் 1990இல் 9%மாக இருந்த வேலையற்றோர் விகிதம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

**சராசரி வேலையின்மை விகிதம்**

| | 1960–73 | 1974–79 | 1980 – 85 | 1996 – 97 |
|---|---|---|---|---|
| பெல்ஜியம் | 2.6 | 6.3 | 11.3 | 13.0 |
| டென்மார்க் | 1.8 | 5.5 | 9.3 | 11.0 |
| பிரான்சு | 2.0 | 1.9 | 8.3 | 12.5 |
| ஜெர்மனி | 0.8 | 3.2 | 6.0 | 12.6 |
| ஐயர்லாந்து | 5.2 | 7.6 | 12.6 | 17.0 |
| இத்தாலி | 3.9 | 4.6 | 6.4 | 12.0 |
| ஸ்பெயின் | 2.5 | 5.3 | 16.6 | 23.0 |
| இங்கிலாந்து | 2.9 | 5.1 | 10.5 | 10.7 |
| பின்லாந்து | 2.5 | 4.4 | 5.1 | 19.0 |
| ஸ்வீடன் | 1.5 | 1.5 | 2.4 | 14.0 |

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் மொத்த வேலையின்மை விகிதம் 11.3%மாக இருப்பினும், இளைஞர்களின் வேலையின்மை 20%மாக உள்ளது. பிரான்சில் இளைஞர்களின் வேலையின்மை 23%மாகவும் இத்தாலியில் 28%மாகவும், ஸ்பெயினில் 38%மாகவும் உள்ளது.

ஆற்றல்மிக்க பொருளாதார நாடு என்று தம்பட்டமடிக்கும் ஜப்பானில் வேலையின்மை குறைவாக இருப்பினும் பெரிய பல்கூட்டு நிறுவனங்கள் தங்களது தொழிலாளர்களில் ஏராளமானோரை சிறிய சகோதர கம்பெனிக


படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு அவர்கள் தேவைப்படாத போதிலும் மாற்றி வருகின்றனர். ஜப்பானின் உழைப்பாளர்களில் 4.6% வேலையற்றோராக அதிகரித்துள்ளனர். ஆனால் இது வேலையில் இல்லாதவர்களை சம்பளப்பட்டியலில் இடம் பெற்றிருக்கச் செய்வது என்று அழைக்கப்படும் 'உள்ளிருப்பு வேலையற்றோரை (in-house unemployment) மறைக்கிறது. இதன் விளைவாக வருங்காலத்தில் உயர்ந்த அளவு வேலையின்மையை ஜப்பான் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

முன்னாள் சோவியத் கூட்டமைப்பு நாடுகளை நோக்கும் போது நிலைமை மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. கிழக்கு ஐரேப்பா முன்னாள் சோவியத் யூனியன், சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறியதன் விளைவாக மொத்த மக்கள் தொகையில் 1/4 பங்கு மக்கள் அல்லது 120 மில்லியன் பேர்கள் (இது 1988ல் 4 மில்லியனாக இருந்தது) வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கிழக்கு ஐரோப்பாவில் வேலையின்மை விகிதம் 20%மாகவும், ருஷ்யாவில் மொத்த உழைப்பாளர்களில் 15.4% அல்லது ஏறத்தாழ 12 மில்லியன் பேர்களாகவும் உள்ளனர். தற்போது ருஷ்யாவில் மொத்த மக்கள் தொகையில் 40%தினர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர்.

சீனாவில் கூட, முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்டவுடன் லட்சக்கணக்கானோரை தேவைக்கு அதிகமானோர் என்றாக்கி, மாபெரும் மனித இழப்பின் அடிப்படையில் விரைவான பொருளாதார விரிவாக்கத்தை எட்டிப் பிடித்துள்ளனர். மாவோவின் சோசலிச காலகட்டத்தில் வேலையின்மையும் பணவீக்கமும் கேள்விப்படாத ஒன்றாயிருந்தது. உண்மையான நிலைபற்றி தெளிவான புள்ளி விவரம் கிடைக்காத போதும் நடப்பு ஆண்டில் மட்டும் 40 லட்சம் பணியிடங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. 1996 இறுதியில் ஏறத்தாழ 7.5 மில்லியன் ஊழியர்கள் அரசு நிறுவனங்களிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் நகர்ப்புற வேலையின்மையின் விகிதம் 3% என்று கூறப்படு கின்றது.

### 2. வேலை நாள் அதிகரித்தல்

உபரி மதிப்பு பற்றிய மார்க்சிய விதியை முதலாளிகள் ஒதுக்கித் தள்ளினாலும் குறைந்த கூலிக்கான பிராந்தியங்களை தேடி முதலாளிகள் அலைவதிலிருந்து அவ்விதியின் செல்வாக்கு நிரூபிக்கப்படுகிறது. இன்று முதலாளிகள் நிரந்தரம் செய்யபட்ட உழைப்பாளர்களை குறைந்த கூலியை ஏற்றுக் கொள்ளச் செய்யவும் இல்லையேல் வெளியேற்றவும் வெளிப்படையாகவே அச்சுறுத்துகின்றனர்.

உலகம் முழுவதும் தொழிலாளர்களை அதிக மணி நேரங்கள் உழைக்க கட்டாயப்படுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் லாபத்தில் அறுதி உபரி மதிப்பின் அளவை அதிகரிக்கச் செய்கின்றனர். அமெரிக்காவில், 1970களின் வாழ்க்கைத் தரத்தை மீண்டும் பெறுவதற்காக முதலாளிகள் அதிக மணிநேர உழைப்பை கோருகின்றனர். உழைப்பாளர்களில் 80%யைக் கொண்டிருக்கக் கூடிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மற்றும் மேற்பார்வையாளரல்லாத ஊழியர்களுக்கு இத்தகைய கோரிக்கைகள் முக்கியமானதாக உள்ளன. 1973ன் வாழ்க்கைத் தரத்தை எட்டிப் பிடிக்க அவர்கள் 245 மணி நேரம் அதிகம் உழைக்க வேண்டும். பொதுவாக, அமெரிக்காவில் பெரும்பாலான பிரிவுகளில் பணிபுரியும் மக்கள் தற்போது 20 வருடங்களுக்க முன்பிருந்ததை விட, சராசரியாக ஆண்டிற்கு 1 மாதம் அதிகம் உழைக்க வேண்டியுள்ளது.

பிரிட்டனின் சராசரி வாராந்திர வேலை நேரம் ஐரோப்பாவிலேயே மிக நீளமானது. அதாவது 43.4 மணி நேரம். இதை ஐரோப்பிய ஒன்றியத் துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அங்கு சராசரியாக 40.3 மணி நேரம், பிரிட்டனின் 25% ஆண் உடல் உழைப்பு தொழிலாளர்கள் சராசரியாக வாரத்திற்கு 48 மணிநேரத்திற்கும் அதிகமாக உழைக்கிறார்கள்.

ஜப்பானில் அதிசயம் என்று அழைக்கப்படுவது எப்படி சாதிக்கப்பட்டது எனில், ஜப்பானில் தொழிலாளர்கள் ரத்தம், வியர்வை, சதை என அனைத்தையும் கொடுத்து தேசத்தின் பெரும் மூலதனத்திற்காக உழைத்ததன் மூலமே ஜப்பானிய தொழிலாளர்களில் 17% பேர் நாள் ஒன்றிற்கு 13 மணி நேரம் உழைக்கின்றனர். 1987ல் அமெரிக்க தொழிலாளர்கள் ஆண்டிற்கு 1949 மணி நேரம் உழைத்ததை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்த ஆண்டில் ஜப்பானிய தொழிலாளர்கள் ஆண்டிற்கு 2168 மணி நேரம் உழைத்திருக்கிறார்கள். அதாவது ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ ஒரு மாத அதிக உழைப்பை உழைத்திருக்கிறார்கள்.

### 3. கூலி வெட்டுகள்

அதிக லாபத்தைப் பெறுவதற்காக தொழிலாளர்களின் கூலி விகிதங்களை நேரடியாகத் தாக்குவது அதாவது, ஒட்டு மொத்த கூடுதல் மதிப்பில் உழைப்பு சக்தியின் விலையைக் குறைப்பது என்பதே பிரதான குறியாக இருந்தது. அனைத்து முனைகளிலும் தாக்குதல் களைத் தொடுத்து பல்வேறு வழிகளில் இதை செயல்படுத்தினர். முதலாவதாக சட்டபூர்வமாக ஊதிய முடக்கம் செய்தல் அல்லது உண்மையில் கூலியை நேரடியாக குறைத்தனர். இரண்டாவதாக அனைத்து சமூக நலத்திட்டங்களையும் நிறுத்தி தொழிற்சங்க உரிமைகளைப் பறித்தனர். மூன்றாவதாக தொழிற்சாலைகளை குறைந்த கூலி பகுதிகளுக்கு மாற்றினர். நாலாவதாக, மிக முக்கியமானதாக, பகுதிநேர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களைக் கொண்டு நிரந்தர தொழிலாளர்களை வெளியேற்றினர். இறுதியாக, முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் பெருமளவிலான பணவீக்கத்தாலும் நேரடியான ஊழல் கொள்கையினாலும், தொழிலாளர்களுக்கு ஆறிலிருந்து எட்டு மாதங்கள் வரை ஊதியம் வழங்கப்படவில்லை. மேலும் மனச்சாட்சிக்கு விரோதமான பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு பொதுமக்களை கொள்ளையிட்டனர். குறிப்பிடத்தக்க, மிகக் கொடுமையான எங்கும் பரவிக் காணப்பட்ட செயல் என்னவெனில், வங்கிகளும், நிதிநிறுவனங்களும் தங்களை திவால்கள் என்றறிவித்துக் கொண்டு பொதுமக்களின் சேமிப்புகள் அனைத்தையும் விழுங்கிவிட்டன. இதற்கு மிக மோசமான உதாரணம் அல்பேனியா. அங்கு தேசத்தின் மொத்த சேமிப்பையும் ஒரு சில நிறுவனங்கள் விழுங்கிவிட்டனர். இது நாடு தழுவிய கிளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. சர்வதேச அளவில் பெரிய வங்கிகளும், நிதி நிறுவனங்களும் நொறுங்கிச் சிதறின. அவற்றில் பெரியவை (மீண்டும் மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு) அரசாங்கத்தால் மீட்கப்பட்டன. மற்றவை, பில்லியன் கணக்கான மக்களின் சேமிப்புகளை விழுங்கியபின் திவாலாகி விட்டன.



படிப்பகம்

www.padippakam.com

70 நாடுகளில் மக்களின் சராசரி வருமானம் 1980இல் இருந்ததை விட மிகக்குறைவாகவே இருந்தன. மேலும் 43 நாடுகளில் 1970க்கும் குறை வாகவே இருந்தன. 1990-93 ஆண்டு களில் 21 நாடுகளில் (பெரும்பாலும் கிழக்கு ஐரோப்பிய மற்றும் சி.ஐ.எஸ்., சராசரி வருமானம் 20% அல்லது சற்று அதிகமாக வீழ்ந்து விட்டன.

அமெரிக்காவில் உண்மை ஊதியம் குறைந்து கொண்டிருந்தது. உண்மை யான அளவீடுகளின் படி உற்பத்தி மற்றும் மேற்பார்வைப் பணி செய்யாத அலுவலர்களின் மணி நேர ஊதியம் 1973ல் 11.4 டாலராக இருந்ததி லிருந்து 1991இல் 10.3 டாலராக வீழ்ச்சியடைந்தது. அதே சமயம் வேலை செய்த சராசரி மணி நேரங்கள் ஆண்டுதோறும் கூடின. இவ்விரண்டின் இணைவு வேலை நேரத்தில் 6% உயர்வையும் 9% ஊதியக் குறைப்பை யும் ஏற்படுத்தியது. 1992இல் 18-24 வயதுக்குட்பட்ட முழுநேர வேலை செய்தவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர் களுக்கான கூலியை பெற்றனர். 1979லிருந்து 15 ஆண்டுகளில் குறைந்தபட்சக் கூலி தனது மதிப்பில் 23%ஐ இழந்தது.

ஜெர்மனியில், முதலாளிகளின் சங்கம் 20% கூலி வெட்டை கோரிக் கொண்டிருக்கிறது. ஜெர்மன் அரசோ 1997இல் மக்கள் நல்வாழ்வு மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கு செலவு செய்த 13 பில்லியன் டாலர்களில் வெட்டு கொண்டு வர திட்டமிட்டுள் ளது. மேலும், தனது அதிகார வர்க்கத் தின் எண்ணிக்கையை ஆண்டிற்கு 1.5% என்ற விகிதத்தில் குறைக்கவும் திட்டமிட்டுள்ளது. ஜப்பானிய முத லாளிகள் சமூக பாதுகாப்பு நலன்களை குறைக்கவும், பணி ஓய்வு பெறும் வயதை 60லிருந்து 65ஆக உயர்த்தவும் அரசாங்கத்தை நிர்பந்தித்துக் கொண்டி ருக்கின்றனர்.

ருஷ்யாவில் ரூபிளின் மதிப்பு மிக மோசமாகக் குறைந்து விட்டதால் வாய்க்கும் கைக்கும் எட்டும் வாழ்க்கை வாழ்வதற்கே மாதம் 10 லட்சம் ரூபிள்கள் தேவைப்படுகின்றது. (ஒரு பாட்டில் குடிநீருக்கு பல ஆயிரம் ரூபிள்கள் தர வேண்டியுள்ளது) ஒரு ருஷ்ய தொழிலாளி மற்றும் ஊழியரின் சராசரி மாத ஊதியம் 1995இல் 6 லட்சம் ரூபிளாக இருந்தது. அதையும் காலந்தாழ்த்தியே வழங்கினர். ருஷ்யா வின் பல்வேறு இடங்களில் சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஆறு மாத ஊதியம் கூட வழங்கப்படாத நிலை உள்ளது. அவர்கள் பட்டினிச் சாவின் விளிம் பிற்கே சென்று விட்டனர். பலரின் எடை 10, 15 கிலோ வரை குறைந்து விட்டது. ஒரு பகுதியில் தெருநாய் களைக் கொன்று தின்ற சிறுவர்கள் மிகக் கடுமையான விஷத்தால் தாக்கப் பட்டனர். 1977 மே மாதம் வரையிலான ஊதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைகள் மூன்று மடங்காகி, கடந்த ஆண்டி லிருந்து தலை சுற்றும் அளவிற்கு 70 மில்லியன் ரூபிள்களாக (12 மில்லியன் டாலர்கள்) உயர்ந்துள்ளது. 1994இல் ருஷ்யாவின் கூலி உழைப்பாளிகளின் உண்மையான வருமானம் 1991ல் இருந்த அதன் மதிப்பில் 70% ஆகும்.

கிழக்கு ஐரோப்பாவின் நிலைமை இன்னும் மோசமானது. உதாரணத் திற்கு, பல்கேரியாவின் ஆண்டு பண. வீக்க விகிதம் 310% மேலும் 12 வங்கிகள் மக்களின் லட்சக்கணக்கான சேமிப்பை விழுங்கி விட்டு திவாலாகி விட்டன. நாம் தற்போது கையாளும் மிக மோசமான அழிவு நடவடிக்கைகளைப் பற்றிப் பார்ப்போம்.

### 4. பகுதிநேர வேலைவாய்ப்பு

உலகம் முழுவதிலும் பகுதிநேர தொழிலாளர்களை பெருமளவில் அதி கரிப்பதையும் வேலைகளை ஒப்பந்தக் கூலிமயமாக்குவதையும் நாம் காண் கிறோம். இது இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகளில் மட்டுமின்றி வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரிய அளவில் நடைபெறுகிறது. முழுநேர தொழிலாளர்கள் பகுதிநேர மற்றும் ஒப்பந்தக் கூலிகளாலும், ஆண் தொழி லாளர்கள், பெண் தொழிலாளர்களாலும் அதிக அளவில் கழித்துக் கட்டப்படு கின்றனர். லாபத்தை உயர்ந்தபட்சமாக அதிகரிக்க முதலாளித்துவம் முழு நேர அலுவலர்களை உட்கருவாகக் கொண்டு, வெளிவட்டத்தில் பகுதிநேர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் நடைமுறையை அதிக அளவில் பின்பற்றி வருகிறது.

அமெரிக்காவில் 'வெளி ஆதாரம்' என்ற கொள்ளை நோயை பற்றி எக்கனாமிக்ஸ் பத்திரிக்கை கூறுகிறது. கம்பெனிகள் தங்களது வழக்கமான உணவு தயாரிப்பு, சுத்தம் செய்தல், கட்டிடப்பராமரிப்பு, பாதுகாப்பு, கம்ப் யூட்டர் அமைப்புகள் மற்றும் தபால் துறைகள் உட்பட அனைத்தையும் வெளி ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு தற்போது நடத்தி வருகின்றன. சிலர் இதையும் தாண்டிச் சென்றுள்ளனர். 'நைக்' என்ற கம்பெனி தான் ஓர் நூலைக் கூடத் தைக்காமல், விளை யாட்டு காலணிக்களை வடிவமைத்து வியாபாரம் செய்கிறது. இன்று அமெரிக் காவில் 34 மில்லியன் பேர்கள் பகுதிநேர தெழிலாளர்களாக உள்ளனர். 1992லிருந்து தற்காலிகப் பணிகள் 250% உயர்ந்துள்ளன. அமெரிக்காவில் 'மனித ஆற்றல் (Man Power)' என்ற ஓர் தற்காலிக உதவி நிறுவனம் ஆண்டுதோறும் 7,67,000 பதிலித் தொழிலாளர்களை வழங்கி வரும் தற்போதைய பெரிய தொழில் வழங்கு வோனாக உள்ளது. நைக்கில் 9000 தொழிலாளர்கள் உள்ளனர். ஆனால் பல்வேறு நாடுகளிலுள்ள அதன் சுதந்தி ரமான துணை ஒப்பந்தக்காரர்கள் 75000 பேர்களை வேலைக்கமர்த்தி உள்ளனர்.

பிரிட்டனில் மொத்த உழைப்பாளர் களில் 57%தினர் தான் முழுநேர பணி யாளர்களாக உள்ளனர். 1996 டிசம்பர் வரையிலான 6 மாத காலகட்டத்தில் பிரிட்டனில் புதிதாக உருவாக்கப்பட்ட முழுநேரப் பணிகள் 24000தான். அதே சமயம் 88,000 புதிய பகுதிநேரப் பணிகள் (பெரும்பாலும் பெண்களைக் கொண்டது) உருவாக்கப்பட்டுள்ளன. 1993 வரையில், 1979ல் இருந்ததை விட, 3 மில்லியன் முழுநேர தொழி லாளர்கள் உள்ளனர். அதே சமயம் பகுதி நேர வேலைவாய்ப்பு 0.5 மில்லி யனாகவும், சுயவேலை வாய்ப்பு 0.75 மில்லியனாகவும் உயர்ந்தது. பெண்கள் முழுநேர வேலைவாய்ப்பு மாறாமலி ருந்தது. ஆனால் பகுதிநேர வேலை வாய்ப்பு 1.2 மில்லியனாகவும் சுய வேலைவாய்ப்பு இரட்டிப்பாகவும் உயர்ந்தது. நெதர்லாந்தில் மொத்தத் தொழிலாளர்களில் சுமார் 50% பகுதி நேரத் தொழிலாளர்களாகவோ அல்லது தற்காலிக வேலையிலோ உள்ளனர்.

### 5. பெருமளவிலான கதவடைப்புகள்

பகுதி நேர வேலை, ஒப்பந்தக் கூலிகள், மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை கம்பெனிகளில்



படிப்பகம்

www.padippakam.com

பெருமளவிலான வேலை குறைப்பிற்கு இட்டுச் சென்றன. இது தொழிலாளர் களையும், அலுவலர்களையும் மிகக் கடுமையாகப் பாதித்ததோடு, இடை நிலை மேலாளர்களையும் பாதித்தது. உதாரணமாக 1991இல் அமெரிக் காவில் ஒட்டுமொத்த வேலையின்மை 15%மாக தாவியது. ஆனால் இடை நிலை மேலாளர்களின் வேலையின்மை 55%மாக உயர்ந்தது. டூபாண்ட் கம் பெனியில் பல்வேறு மட்டங்களி லிருந்த மேலாளர்கள் 7லிருந்து மூன் றாகக் குறைக்கப்பட்டபின், உயர் அதி காரிகள் நவீன கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நேரடி தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு பல்வேறு மட்டத்தில் மேலாளர்களை வெளியேற்றினர். இடைநிலை நிர்வாகி கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு, நிறுவனத்தின் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேற்பார்வை வேலைகள் தொழி லாளர்கள் தலையில் சுமத்தப்பட்டது. இத்தகைய 'சீர்திருத்தங்களில்' முன் னணியில் நிற்கும் அமெரிக்காவில் இது எவ்வாறுள்ளது என்பதை விரிவாகக் காண்போம்.

1989-1993க்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்கா 1.6 மில்லியன் உற்பத்தித்துறை வேலைகளை இழந் துள்ளது. இவ்விழப்புகள் மேலும் தொடர்ந்து அதிகரிக்கும். தானியங்கி மயமாக்கல், துணை ஒப்பந்தக்காரர்கள், விநியோகிஸ்தர்கள் மற்றும் தற்காலிக தொழிலாளர்களை பயன்படுத்துவது அதிகரித்ததாலும், (இவர்களில் பலர் வீட்டிலேயே வெட்டி, தைத்து, முத் திரை குத்தும் வேலையை செய்தனர்) ஒவ்வொரு தொழிலாளியும் அதிக அளவு உற்பத்திப் பொருட்களை தருவதற்காக வேலை செய்யுமிடத்தை மறுசீரமைப்பு செய்ததும், நல்ல ஊதியத்தோடு கூடிய நிரந்தர வேலை கிடைக்கும் என்ற நினைவை கனவாக்கி விட்டன. இது தொழிற்சாலைகளில் மட்டுமின்றி, வங்கிகள், கிடங்குகள், காப்பீடு (இன்சூரன்ஸ்), கம்பெனிகள், தரகு மண்டிகள், சட்ட நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் அனைத்து விதமான சேவை நிறுவனங்களிலும் யதார்த்தமாகி விட்டது. 1993ல் கார்ப்பொரேட் அமெரிக்கா 6 லட்சம் பணிகளை கதவடைப்பு செய்தது. 1995ல் மேலும் 4 லட்சம் பணிகளை கத வடைப்பு செய்தது. 1996 ஜூனுக்குள் 1003 அமெரிக்க பெருந்தொழில் நிறுவனங்கள் அவர்களது வேலையில் 30%ஐ குறைத்துவிட்டன என அமெரிக்கன் மேனேஜ்மெண்ட் கழகத் தின் அறிக்கை கூறுகிறது. இதில்தான் இந்த பகாசுர பன்னாட்டு நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன.

1987-95க்குள் ஐ.பி.எம். தனது பணியாட்களை 4,06,000லிருந்து 2,02,000மாகக் குறைத்துள்ளது. ஜென ரல் மோட்டார்ஸ் நிறுவனம் அதன் பணி யாட்களை 1979லிருந்த 8 லட்சத்தி லிருந்து 1990ல் 4.5 லட்சமாகக் குறைத் துள்ளது. ஹக் எலக்டிரானிக்ஸ் (ஜென ரல் எலக்டிரிக் நிறுவனத்தின் ஒரு பிரிவு) தனது பணியாளர்களில் 1/4 பங்கை குறைத்துவிட்டது. டூபாண்ட் 1990இல் 37000 வேலைகளை ஒழித்துக்கட்டியது.

அமெரிக்காவின் ஆயுதத் தொழிற் சாலைகள் தனது மொத்தப் பணி யாளர்களில் 6 லட்சம் பேர்களை அதாவது 40%தினரை 1990லிருந்து வெளியேற்றியுள்ளது. வங்கிகளில் மொத்த வேலைவாய்ப்பு 1990இல் 2.3 மில்லியனிலிருந்து 1995இல் 2.1 மில்லியனாகக் குறைத்துள்ளது. 2000வது ஆண்டில் வங்கித் தொழிலில் 30% வேலை வாய்ப்புகள் வெட்டப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த பத்து ஆண்டுகளில் அதன் மொத்த தொழிலாளர்கள் மேலும் பாதியாக குறைக்கப்படுவார்கள். பிரிட்டிஷ் வங்கிகளில் 1989லிருந்து 1996 வரை ஒரு இலட்சம் பணிகள் வெட்டப்பட்டுள்ளன. இந்த நூற்றாண் டின் துவக்கத்தில் மற்றும் ஒரு இலட்சம் பணி இடங்கள் தொடர்ந்து ஓயாது அலை போல வெட்டப்படும்.

இதே நிலைதான் ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் உள்ளது. உதாரணமாக ஜப்பானிலுள்ள நிப்பான் எஃகு தொழிற் சாலை (உலகிலேயே மிகப் பெரிய தனி யார் எஃகுத் தொழிற்சாலை) கடந்த ஆண்டு 501 பில்லியன் டாலர்கள் நட்டமடைந்துள்ளதால் ஒரு 'வீணழிவு தடுப்புத்' திட்டத்தை அறிவித்துள்ளது. அதாவது அக்கம்பெனியின் மொத்த நிர்வாக ஊழியர்களில் 10,000 பேர்க ளில் 40% தினரையும் தொழிலாளர் களில் 15%தினரையும் வெளியேற்றி மூன்றாண்டுகளுக்குள் அதன் நடை முறைச் செலவுகளில் 3 பில்லியன் டாலர்களை குறைக்க திட்டமிட் டுள்ளது.

இவ்வாறாக, 1980லிருந்து 1993க்குள், 500 பகாசுர தொழிற்துறை கூட்டு நிறுவனங்கள் 4.4 மில்லியன் பணிகளை அழித்து விட்டுள்ளன. இது அவற்றின் மொத்த உழைப்பாளர்களில் 1/4 பங்காகும். அதே கால கட்டத்தில் அக்கம்பெனிகளில் விற்பனை 1.4 மடங்கும், அவற்றின் சொத்துக்கள் 2.3 மடங்கும் அதிகரித்துள்ளன.

### *6. குறைந்த கூலி பகுதிகளை நாடிச் செல்லுதல்*

பொருளாதாரம் 'உலகமயமாதலை' ஒட்டி தொழிற்துறை உற்பத்திகளை குறைந்த கூலி பகுதிகளுக்கு மாற்றும் ஒரு உறுதியான போக்கு இருந்து வரு கிறது. இந்நடைமுறைக்கு புவியியல் நெருக்கம் உதவி செய்கிறது. ஆகை யால் அமெரிக்க தொழிற்சாலைகள் மெக்சிகோவிற்கும் மேற்கு ஐரோப்பாவி லிருந்து கிழக்கு ஐரோப்பிய நாடு களுக்கும், ஜப்பானிலிருந்து *சீனா* மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடு களுக்கும் மாற்றப்படுகின்றன. மேலும் உலகச் சந்தையை கைப்பற்றும் அதே வேளையில் வளர்ச்சியடைந்த நாடு களில் அதிக செலவில் ஏற்றுமதிப் பொருட்களை தயாரிப்பதை விட, சந்தைகளை வளர்த்தெடுக்க வேண்டிய குறைந்த கூலி நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் தொழிற்சாலைகளை நிறுவுகின்றன. அந்நிய நேரடி முதலீடு என்ற வடிவில் மூலதன ஏற்றுமதி எல்லை கடந்து மிக வேகமாக வளர் கிறது. பன்னாட்டு நிறுவனங்கள் துணை நிறுவனங்களையும் கூட்டு நிறுவனங்களையும் உலகம் முழுவதும் நிறுவுகின்றன. அதன்படி அவர்கள் இரட்டை லாபம் அடைகின்றனர். அதா வது புதிய சந்தைகளைப் பிடிப்பதுடன், அந்நாடுகளின் பல்வேறு உழைப்புச் சந்தைகள் குறைந்த கூலி உழைப் பையும் பயன்படுத்திக் கொள்கின் றனர்.

இந்த அதிக வித்தியாசமான கூலி விகிதங்கள் பன்னாட்டு நிறுவனங்க ளின் ஆதாயங்களைப் பற்றி விரிவான விளக்கங்களைத் தருகின்றன. ஒரு மணி நேர உழைப்பிற்கான சராசரி கூலி ஜெர் மனியில் 31.9 டாலர்கள், ஜப்பானில் 23.7 டாலர்கள், அமெரிக்காவில் 17.2 டாலர்கள், பிரிட்டனில் 13.8 டாலர்கள், செக்குடியரசில் 2 டாலர்கள், மெக்சி கோவில் 1.5 டாலர்கள், *சீனாவிலும்* இந்தியாவிலும் 25 சென்டுகள்.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க நிறுவனங்களின் வெளி நாட்டு உற்பத்தி 1968இல் 200 பில்லியன் டாலர்களாக இருந்து 1988இல் 950 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. இது 1999இல் 2000 பில்லியன் டாலர்களை எட்டிவிடும் நோக்கில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பெரும் பகுதி மூன்றாம் உலக நாடுகளில் இருக்கிறது.

ஜெர்மன் நிறுவனங்கள் 1995இல் வெளி நாடுகளில் 30 பில்லியன் டாலர்களை முதலீடு செய்தன. அது வெளிநாட்டவர் ஜெர்மனியில் செய்த முதலீட்டை விட 10 மடங்கு அதிகம். உலகிலேயே அதிக கூலி தரவேண்டிய நாடாக ஜெர்மனி இருப்பதால் பல நிறுவனங்கள் ஜெர்மனியில் முதலீடு செய்ய ஈர்க்கப்படவில்லை. லத்தீன் அமெரிக்கா, ஆசியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து போட்டியாளர்கள் அடிமாட்டு விலையில் போட்டியிடுவதால் ஜெர்மனியின் எஃகு உற்பத்தி நீண்ட நாட்களாக மரணப் படுக்கையில் கிடக்கிறது.

ஜப்பானின் மொத்த மின்னணு உதிரிப்பாகங்களில் மூன்றில் ஒரு பகுதி வெளிநாடுகளில் தயாரிக்கப்படுகின்றன. அதேபோன்று 31% ஜப்பானிய மோட்டார் வாகனங்களும், 39% புகைப்பட கருவிகளும், வெளிநாடுகளில் தயாரிக்கப்படுகின்றன. டயோட்டா, நிஸான், ஹோன்டா போன்ற நிறுவனங்கள் தங்களது பெரும்பகுதி மூலதனத்தை கடல் கடந்த நாடுகளில் செலவிடுவதில் குறியாக உள்ளன. ஆசியாவில் 1989இல் 12%மாக இருந்த வருடாந்திர ஜப்பானிய நேரடி முதலீடு தற்போது 18%மாக உயர்ந்துள்ளது. 1996இல் ஜப்பானின் மொத்த உற்பத்தியில் 21% கடல் கடந்த நாடுகளில் தயாரிக்கப்பட்டன. உற்பத்தி துறையில் வேலைவாய்ப்பு விரைவாக குறைந்து வருகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் வேலையின்மை அதிகரித்து வருகையில் மூன்றும் உலக நாடுகளில் தொழிற்சாலைகளை அமைப்பதால், பின்தங்கிய நாடுகளில் வேலைவாய்ப்பு பெருகும் என்பதற்கு வழியில்லை.

அன்னியநேரடி முதலீட்டின் பெரும் பகுதி நிலவிக்கொண்டிருந்த தொழில்களை கையகப்படுத்துதல் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மூலம் தற்போதைய சந்தையை இந்தியாவில் பிடித்தது போல பிடிக்கிறது. அதுமட்டுமின்றி, ஒரு உயர்ந்த தொழில்நுட்பம் கொண்ட பன்னாட்டு நிறுவனம் ஆயிரக்கணக்கான சிறு தொழிற்சாலைகளை துடைத்தெறிவதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் வேலையின்மை சிக்கலை அதிகப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி, அவர்கள் வரும் போதே பல நிபந்தனைகளுடனேயே வருவதால் அது தொழிற்சங்க உரிமைகளை நசுக்குகிறது, வாழ்வின் அத்தியாவசிய பொருட்களுக்கான செலவில் மேட்டுக்குடி நுகர்வுப் பொருள் உற்பத்தியை ஊக்குவிப்பதால் பெரும் வறுமையை உருவாக்குகிறது. ஏழை மற்றும் பணக்காரர்களிடையே உள்ள இடைவெளியை மேலும் அதிகப்படுத்தி மக்கள் தொகையில் பெரும் பகுதியினரை வாழ்வின் விளிம்பிற்கு தள்ளிவிடுவதும்... அடிப்படையான நலத்திட்ட நடவடிக்கைகளுக்கான மாபெரும் செலவை வெட்டிக் குறைத்து, அவை அனைத்தையும் மானியமாகவும், வரிச்சலுகைகளாகவும் அரசாங்கத்தின் மூலம் சுருட்டிக் கொள்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் நுழைவு வேலையின்மையை மட்டும் அதிகப் படுத்தவில்லை, மாறாக மக்களில் பெரும்திரளினரின் வாழ்க்கை தரத்தை வீழ்ச்சியுறச் செய்கிறது.

### *உற்பத்தியிலிருந்து சேவைத்துறைக்கான மாற்றம்*

உலகம் முழுவதும், உற்பத்தி துறை வேலைகளின் எண்ணிக்கை மிக, மிக குறைவாகி வருவதும், அதே வேளையில் சேவைத்துறையில் அதிகரித்தும் வருகிறது. அமெரிக்காவில் உற்பத்தியானது அதன் பொருளாதாரத்தில் வெறும் 20 முதல் 25% தான் உள்ளது. பிரிட்டனில் 1979க்கும் 1992க்கும் இடையே உற்பத்திதுறை தொழிலாளர்களில் மூன்றில் ஒருவர் தங்களது வேலையை இழந்தனர். ஐரோப்பாவில், சுரங்கம், உலோகம், மோட்டார் தொழில் போன்ற துறைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வெட்டிக்குறைக்கப்பட்டனர். ஜப்பானில் உற்பத்தி சார்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை, ஏற்கனவே சேவைத்துறையினரை விட குறைவாகவே உள்ளது. 14.5 மில்லியன் பேர் உற்பத்திதுறையிலும் 15.5 மில்லியன் பேர் சேவைத் துறையிலும் உள்ளனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் சேவைத் துறையில் பெருமளவிலான புதிய முதலீடுகள் உருவாக்கப்பட்டு வருகையில், உழைப்பாளர்களை பெண்கள் மயமாக்குவதை நோக்கிய போக்கும் காணப்படுகிறது. சேவை துறையிலுள்ள வேலைவாய்ப்பில் பெரும் பகுதி குறிப்பாக தற்காலிக வேலைகள் பெண்களுக்குச் செல்லுகின்றன.

இவ்வாறு இப்புவி முழுவதும் உழைக்கும் மக்கள் மீதான வேகமான தாக்குதலைக் காண்கிறோம். இதில் மிகவும் மோசமாக பாதிக்கப்படுவது. சமூகப் படி நிலையில் உள்ள கீழ்மட்டத்தினர் தான், மேலே செல்லச் செல்ல பாதிப்பின் தீவிரம் படிப்படியாக குறைகிறது. இன்று மொத்த மக்கள் தொகையில் 80% எதோ ஒரு வழியில், ஒரு அளவிற்கு இந்த தாக்குதலால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆதாயம் என்பது மேல்மட்ட 20% பேருக்கு அதுவும் குறிப்பாக மேல்மட்ட 1% பேருக்குச் செல்லுகிறது. உலகளாவிய வகையில், ஏழை மற்றும் பணக்காரர்களுக்கு இடையிலான இடைவெளி நம்பமுடியாத எல்லைகளை எட்டுவதுடன் நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே செல்லுகிறது.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் நிறைவு பெறும்.)

---

(31-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியுமா?'' என்று வெட்கமற்று, கண் முன்னால் நிற்கும் பிரம்மாண்டமான உண்மைகளின் பால் துளியும் பயமற்று கூறுகிறார். அன்றைய பசுமைப் புரட்சி இந்தியாவில் ஏற்படுத்திய மிக பயங்கரமான விளைவுகளின் தொடர்ச்சிதான் இன்றைக்கும் நாடும் முழுவதும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலையை நோக்கி போவது.

ஏகாதிபத்தியங்களின் சர்வதேச சதி வலைப்பின்னலின் ஒரு பகுதியாகத்தான் இந்திய விவசாயத்தின் மீதான இத்தகைய தாக்குதல்களை பார்க்க வேண்டியுள்ளது. ஆந்திர விவசாயிகள், கர்நாடக விவசாயிகள் பன்னாட்டு நிறுவனங்களின் பேராசைக் கனவுகளுக்கு தீமூட்டும் பணியை துவங்கி விட்டார்கள். இந்த தீ இனி வெகு சீக்கிரத்தில் அணையப்போவதில்லை.

–கணேசன்



படிப்பகம்

www.padippakam.com

சமீபத்தில் 'கர்நாடகா ராஜ்ய ரைத்ய சங்கா, (KRRS) என்ற விவசாய அமைப்பைச் சேர்ந்த செயல்வீரர்கள் மற்றும் விவசாயிகள் 'மோன்சான்டோ' என்னும் பன்னாட்டு நிறுவனம் கர்நாடகாவில் விதை ஆராய்ச்சி நடத்தி வந்த பண்ணைகளில் புகுந்து பயிர்களை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். மேலும் ஆந்திரத்தில் விவசாயிகளின் கடும் எதிர்ப்பின் காரணமாக மாநில அரசு 'டெர்மினேட்டர் ஜீனை (ஒருமுறை மட்டுமே பயன்படும் விதைகளை உண்டாக்கக்கூடிய 'அழியும் மரமணு') டிரான்ஸ்ஜீனிக் (பூச்சி எதிர்ப்பு தன்மை கொண்ட) போன்ற எந்த வடிவங்களிலும் அனுமதிக்கக் கூடாது என்று மத்திய அரசை நிர்பந்திக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இந்த மோன்சான்டோ நிறுவனம் மரபணு தொழில்நுட்ப முறையில் பருத்தி விதைகள் தயாரிப்பதற்கான ஆராய்ச்சி பண்ணைகளை இந்தியாவின் எட்டு மாநிலங்களில் 40 இடங்களில் நிறுவியுள்ளது. இந்த ஆராய்ச்சிகளின் நோக்கம் விவசாயிகள் அடுத்தமுறை விவசாயத்திற்காக இம்முறை சாகுப்படியிலிருந்து விதை எடுத்து சேமித்து வைத்தலை முழுமையாக ஒழிக்கும் விதத்தில், பயிர்கள் மீண்டும் விதையாய் பயன்படுவதற்கு உரிய தன்மையை அதன் மரபணுக்களில் கண்டறிந்து, அப்பகுதியை அகற்றி விட்டு, பயிர்மீண்டும் விதையாக முடியா நிலையை உருவாக்குவதே' அப்படிச் செய்து விட்டால் விவசாயத்தையே ஒரு சில இது போன்ற பன்னாட்டு கம்பெனிகளின் வழி ஏகாதிபத்தியங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட முடியும். பருத்தி தவிர சோயாபீன்ஸ், தக்காளி, காலிபிளவர், கடுகு போன்ற பல்வேறு காய்கறிகள், தானியங்களிலும் இப்படிப்பட்ட விதைகளை உருவாக்கும் ஆராய்ச்சிகளில் பன்னாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானவை மோன் சான்டோ, நோவார்திஸ் மற்றும் சன்டோஸ் ஆகும். இந்த ஏகாதி பத்திய பன்னாட்டு நிறுவனங்களுடன் இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சில், இந்திய விஞ்ஞான நிறுவனம், மத்திய பூச்சியியல் அமைப்பு (CIB), இந்திய விவசாயத்துறை போன்றவை கூட்டுச் சதியில் ஈடுபட்டுள்ளன.

## ஏகாதிபத்திய விவசாய முறைக்கு எதிராக கர்நாடகா விவசாயிகள்

கே.ஆர்.ஆர்.எஸ். போன்ற விவசாய அமைப்புகள் இது இந்திய விவசாயிகளின் உரிமை மீதான ஏகாதிபத்தியங்களின் தாக்குதல். விதை சேமித்தல், பயன்படுத்தல் ஆகியவற்றை அபகரிப்பது ஒட்டு மொத்த இந்திய விவசாயத்தையே அபகரிப்பதுதான் எனக்கூறுகின்றனர். மேலும் முதல் கட்ட மாக, ஒரு வகை புழுக்கள் எதிர்ப்பு தன்மை கொண்ட பருத்தி விதைகளாகிய பி.டி. பருத்தி, விற்பனைக்குள் நுழைபவர்கள் படிப்படியாக மீண்டும் பயன்படுத்தமுடியா விதைகள் விற்பனைக்கும் வந்துவிடுவார்கள். அதற்கான ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்கள் என நிரூபித்துள்ளனர்.

பூச்சிகளிட மிருந்து விவசாயத்தை பாதுகாக்க வேண்டியது ஒரு முக்கிய பிரச்சினைதான். மேலும் இன்றைக்கு பயன் படுத்தப்படும் பூச்சி மருந்துகள் பயன்தரத்தக்கனவாக இல்லை. மறுபுறத்தில் அவை மனிதர்களுக்கு பெரும் தீங்கு விளைவிப்பனவாக உள்ளன. ஒவ்வொரு வருடமும் 40,000 பேர் பூச்சி மருந்து விஷத்தால் பாதிக்கப்படுகின்றனர், அவர்களில் ஒரு சதவீதத்தினர் அதனால் இறந்தும் விடுகின் றனர். என்றாலும், அதற்கு மாற்று டிரான்ஜினிக் விதைகளோ, டெர்மினேட்டர் ஜீன்களோ அல்ல. இவற்றை பயன் படுத்துவதன் மூலம் 20% முதல் 25% அதிக உற்பத்தியை கொடுக்கலாம் என்று ஆர்வம் ஊட்டி இந்திய விவசாயத்தையே ஒட்டு மொத்தமாக கபளீகரம் செய்யும் முயற்சிதான் இது.

மேலும் இத்தகைய மரபணுக்களில் செயற்கையாக மாற்றம் ஏற்படுத்துவதால் ஏற்படும் விபரீத மாற்றங்கள் பற்றி விஞ்ஞானிகள் கடுமையாக உலகெங்கும் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். இவ்விதைகள் உலக இயற்கை முறை மீதே கடும் தாக்குதல் தொடுக்ககூடியதாகவும், மண் வளத்தை முற்றிலும் அழித்தொழித்து விடுவதாகவும், அமையும் என்று அஞ்சப்படுகிறது.

சில பன்னாட்டு நிறுவனங்கள் இவ்விதைகளை காப்புரிமை பெற்றுக்கொண்டு படிப்படியாக உலகத்தையே தங்கள் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்து விடும் அபாயமும் உள்ளது.

இந்தியா வருடத்திற்கு 80,000 டன் பூச்சி மருந்தை பயன்படுத்து கிறது. இதில் சரிபாதி பருத்திக்காக பயன் படுத்தப்படுகிறது என்று கூறும் இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சிலின் துணை மேலாளர் மங்கல்ராய் அதற்கு பதிலாக டிரான்ஸ்ஜீனிக் பயிர்களை பயன் படுத்தினால் ஒரு வருடத்தில் உலகம் முழுவதும் பயன்படுத்தப் படும் பூச்சி மருந்திற்கான 8.5 மில்லியன் டாலர் பணம் 2.1 மில்லியன் டாலராக குறையும் என்கிறார். ஆனால் இறுதியில் விவசாயம் யாரின் கையில் இருக்கும்? என்பதே இங்கு தொக்கி நிற்கும் கேள்வி. இந்த ஆராய்ச்சி கவுன்சில் தான் மோன்சான் டோவுடன் கூட்டுச் சேர்ந்து இத்தகைய ஆராய்ச்சிகளில் ஈடுபடும் 'மைகோ உயிர் தொழில்நுட்ப தனியார் நிறுவனத்திடம்' இருந்து வீரிய நெல்விதை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்துக்கு என்ற பெயரில் மூவாயிரம் கோடி பணம் பெற்றுள்ளது.

தன்னுடைய ஆராய்ச்சி மற்றும் விற்பனைக்கு இந்திய விவசாயிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பிய வுடன், மோன்சான்டோ வின் இந்திய விற்பனை பிரிவு மேலாளர் மார்க் வெல்ஸ் "நாங்கள் எத்தகைய உயிர் தொழில் நுட்ப ஆராய்ச்சியிலும் ஈடு படவில்லை. பூச்சிகளிடமிருந்து தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் திறன்வாய்ந்த விதைகளை உற்பத்தி செய்யும் வேலையில் மட்டுமே ஈடுபடுகிறோம். நாங்கள் உலகின் எந்த நாட்டிலும் மரபணு பாதுகாப்பு தொழில்நுட்பம் சம்பந்தப்பட டெர்மினேட்டர் ஜீன்கள் ஆராய்ச்சியை எந்த நிலங்களிலும் நடத்தவில்லை" என்று கூறுகிறார்.

ஆனால் பிரிட்டனில், மோன்சான்டோ நிறுவனத்திற்கு எதிராக கீரின்பீஸ் என்னும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்பு கடும் யுத்தத்தை தொடுத்துள்ளது. 1998ல் மட்டும் மோன்சான்டோவின் 350 ஆராய்ச்சி பண்ணைகளில் 35 பண்ணைகள் உள்ளூர் விவசாயிகள் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு அமைப்பினரால் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளது. அதே போல் பிரான்ஸ் மரபணு மாற்று ஆராய்ச்சியியலில் நிபுணரான டாக்டர் பேட்ரிக் கோர்வேலினின் (Patrick Courvalin) கடும் எதிர்ப்பு இயக்கத்திற்கு பிறகு ஆரோக்கிய கேடு விளைவிக்கும் அபாயமுள்ள இத்தகைய உணவு பயிர்களை தடை செய்துள்ளது. கிரீன்பீஸ் இயக்கத்தைச் சேர்ந்த ஜிம் தாமஸ் 'திவீக்' என்ற ஆங்கில ஏட்டிற்கு அளித்த பேட்டியில் "75 சதவீத பிரிட்டிஷ் மக்கள் இத்தகைய பயிர்களை எதிர்க்கிறார்கள், இயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட உணவினையே விரும்புகிறார்கள்" எனக்கூறியுள்ளார். அதே போல் இந்தியாவில் 'டெக்கான் டெவலப்மண்ட் சொசைட்டி' என்னும் தன்னார்வ அமைப்பைச் சேர்ந்த ருக்மணிராய்' இந்த உணவை உட்கொண்ட பல குழந்தைகள் வாந்தி பேதி மற்றும் அலர்ஜிக்கு ஆளானார்கள் என்று கூறுகிறார்.

முன்னாள் உலக வங்கியின் ஆலோசகர் சரத் ஜோஷி: "70களில் கொண்டு வரப்பட்ட பசுமை புரட்சியின் போதும் சில ஏகபோக நிறுவனங்கள் சந்தையை ஆக்கிரமித்துவிடும் என்று கூறப்பட்டது. ஆனால் அந்த புரட்சியின் விளைவுகளை யாரேனும் மறுக்க

(30-ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com



# அனைத்திந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் செயலர் தோழர் ஜனார்தனுக்கு செவ்வணக்கம்!

## நீ இந்திய மக்களின் பொக்கிசமாய், புரட்சிகர மாணவர் இயக்க்த்தின் பெருமையாய் விளங்கினாய்.



இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், 1975 ஜுலை 2ந்தேதி, ஆந்திரப்பிர தேசத்தின் மேதக் மாவட்ட சிராய் பள்ளி காட்டுப் பகுதிகளில் விவசாயிகள் இடையே பணிபுரிந்து கொண்டிருந்த, வாராங்கல் வட்டார பொறியியல் கல்லூரி மாணவனைப் போலீசார் போலி மோதலில் கொன்று போட்டனர். அவசர நிலை கோலோச்சிய அந்த இருண்டகாலத்தில் தியாகியான தோழர். சுரபனேனி ஜனார்தனின் மகத்தான பாரம்பரியத்தை முன்கொண்டு செல்லும் ஆந்திரப் பிரதேசத்தின் புரட்சிகர மாணவர் இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்களிடம் ஒன்று கலந்து, புதிய சனநாயகப் புரட்சியைக் முன்கொண்டு வருவதற்காக, நூற்றுக்கணக் கான ஜனார்தன்களை உருவாக்கி உள்ளது. தோழர் பல்லே அசோக், அத்தியாகிகளின் பாதையில் செல்லத் துணிந்தவர்களில் ஒருவராவார். அவர் சிராய்பள்ளி தியாகியின் பெயரைத் தனதாக வைத்துக் கொண்டார் அவரின் தகுதிவாய்ந்த வாரிசுதான் என்பதையும் நிரூபித்துள்ளார்.

சரியாக 25 வருடங்கள் கழித்து, 'சுதந்திர' இந்தியாவின் 50ஆவது ஆண்டில், 1998 ஜுலை 24ம் நாள், AIRSF மற்றும் ஆந்திரப்பிரதேசம் முற்போக்கு மாணவர் சங்கம் (APRSU) ஆகியவற்றின் செயலாளரான தோழர் அசோக்கும் (ஜனார்தன்), மேலும் இரண்டு தோழர்களும் போலி மோதலில் கொல்லப்பட்டனர். தோழர் ரமணையா மற்றும்தோழர் ரமேஷ் ஆகிய அந்த மற்ற இருவரும் கூடி ஹைதராபாத் நகரத்தில் புரட்சிகர மாணவர் இயக்கத்தைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர். போலீசார் இந்த மூன்று தோழர்களையும், அதற்கு முதல் நாள் ஹைதராபாத் நகரில் உள்ள ஓர் அறையிலிருந்து கைது செய்து, அவர்களைக் கொடூரமாகச் சித்ரவதை செய்து, பிறகு சுட்டுக் கொன்றனர். பிறகு, உடல்களை வாராங்கல் காட்டுப் பகுதியில் வீசியதுடன்தமது கேவலமான செயலை முடித்துக் கொண்டனர். வழக்கம் போல செய்தித்தாள்கள் இச்செய்தியை மோதல் என்று பிரசுரித்தன.

தோழர் அசோக் 1990ல் ஒஸ்மானியா பல்கலைக் கழகத்தில், தனது வணிகவியல் பட்ட மேற்படிப்பை முடித்தவுடன், புதிய சனநாயக இந்தியாவைப் படைக்கும் புரட்சிகர நோக்கத்துக்கு சேவை செய்யும் பாதையை உணர்வுபூர்வமாகத் தேர்ந்தெடுத்தார். தோழர் ரமணையா ஒரு பி.டெக் பட்டதாரி ஆவார். அவர் மாணவர் அரங்கில் முழுநேரப் புரட்சியாளராக பணியாற்றி வந்தார்.

தோழர் அசோக், 1992ல் ஆந்திர, அரசாங்கம் புரட்சிகர இயக்கத்தின் மீது கொடூர ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்ட நெருக்கடியான காலகட்டத்தில், ஆந்திரப்பிரதேச மு.மா.ச.வின் செயலாளரானார். ஆந்திரப் பிரதேச மு.மா.சவும், AIRSF வும். அம்மாநிலத்தில் தடை செய்யப்பட்டிருந்த கால்த்தில், அவருடைய வீரமிக்க தலைமையானது ஆ.பி.மு.மா.ச.வை மாணவர்களிடையே கொண்டு செல்வதில் வெற்றி கண்டது, தனது செயல் உத்திகளை மாற்றிக் கொண்டு, ஆக்கபூர்வமாக மாணவர்களை அணிதிரட்டியதன் மூலம் அடக்குமுறையின் கீழும், ஆ.பி.மு.மா.ச. தனது இருப்பை உணர்த்தியது. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, 1992இல் நன்கொடைக் கட்டணத்தை எதிர்த்த போராட்டமாகும். அதில் ஆ.பி.மு.மா.ச. மற்றும் ஜனார்தனின் பங்கு முக்கியமானதாகும். இதன் விளைவாக அன்றைய முதலமைச்சர் ஜனார்தன் ரெட்டி பதவி விலக நேர்ந்தது.

ஆந்திராவின் ஒவ்வொரு பல்கலைக் கழகத்தையும் அரசு ஒரு போலீஸ் முகாமாக மாற்றி விட்டிருந்ததால் ஹைதராபாத் வாராங்கல்லின் ஒவ்வொரு மாணவரும் பிணம் தின்னும் சிறப்புக் காவல்படையின் நேரடிப் பார்வையின் கீழ் வைக்கப்பட்டிருந்தனர். இந்து பாசிச ஏ.பி.வி.பி. கருங்காலிகளோ, போலீஸ் உளவாளிகளாக செயல்பட்டு வந்தனர். இத்தகைய சூழலில், ஆ.பி.மு.மா.ச. மாணவர்களைத் திரட்ட புதிய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆ.பி.மு.மா.ச ஆரம்பப் பள்ளிகளிலும் பணி புரிய ஆரம்பித்தது. அடிப்படைப் பிரச்சனைகளுக்காகவும், அவற்றை புறக்கணிக்கும் நிர்வாகம் மற்றும் அரசுக்கெதிராகவும் மாணவர்களை அணிதிரட்டியது.

சமீப காலமாக தோழர் அசோக் ஏழை மாணவர்களின் நியாயமான உரிமையான சமூக நல விடுதிகளை மூடத்திட்டமிட்டிருந்த சந்திரபாபு நாயுடுவின் முடிவுக்கெதிராக. போராட்டங்களை முன்னெடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டுவதில்தான் மும்மரமாயிருந்தார்.

போலி மோதலுக்குப் பின் போலீசார், உடல்களை பிணக்கிடங்கிலோ அல்லது மருத்துவமனையிலோ வைக்கவில்லை மருத்துவர்களை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து, வேக வேகமாக பிரேத பரிசோதனையை முடிப்பதற்காக போலீஸ் நிலையத்தில் வைத்திருந்தனர். புதிய புதிய சட்டங்களைப் போட்டு தன்னை சட்டபூர்வமாகக் காட்டிக் கொள்ளும் இந்த போலீசும்/அரசும், தமது செயல்பாடுகளில் எப்போதும் நேர்மையாக இருந்ததில்லை.

அந்நிய மூலதனத்துக்கு ஆந்திராவை விற்கத் துடிக்கும் சந்திரபாபு நாயுடுவின் கீழான இத்தகைய அரசு, (அதுவும் கிரிமினல் மத பாசிஸ்டான அத்வானி உள்துறை அமைச்சராக உள்ள வேளையில்) தடாவை விட மோசமான பொடாவைக் கொண்டு வரத் துடிப்பதில் வியப்பேதுமில்லை, அனைத்து ஒடுக்குமுறைச் சட்டங்களையும், போலீஸ் காவலையும் மீறி, தங்களது அன்புக்குரிய தோழருக்கு இறுதி மரியாதை செலுத்த, வாராங்கல் மாவட்டத்தில் உள்ள அவரது கிராமத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டனர்.

ஆளும் வர்க்கமானது மாணவர்கள் இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களோடு இணைந்து விடக்கூடிய அபாயத்தை உணர்ந்திருக்கிறது. இதைத்தான் அவர்கள் எப்படியாவது தடுக்க விரும்புகின்றனர். ஆனால், தங்களது கொள்ளை மற்றும் சுரண்டல் ஆட்சியை ஆயுத வலிமையால் எத்தனை காலம் பாதுகாக்க முடியும்?

கலகத்தின் செங்கொடியை அவர்கள் அஞ்சி நடுங்கும் உயரத்துக்கு உயர்த்திப் பிடித்ததால், இன்று அவர்கள் அசோக்கைக் கொலை செய்துள்ளனர். ஆனால், அவர்கள் அந்தக் குரலை நிறுத்திய அதே சமயம், அவர்களின் அந்த கோழைத்தனமான கொடூரச் செயல், செங்கொடியின் பெருமையையும் நம்பிக்கையிழந்தவர்களின் நம்பிக்கையும் மீட்டெடுக்கும் ஆயிரமாயிரம் அசோக்குகளை பிறப்பெடுக்கச் செய்கிறது.

**ஆந்திரப் பிரதேசத்தின் புரட்சிகர, மாணவர் இயக்கம் மீதான ஒடுக்குமுறையை உடனே நிறுத்து!**

**ஆந்திர பிரதேச முற்போக்கு மாணவர் சங்கம், AIRSF மீதான தடையை நீக்கு!**

**நமது அன்புக்குரிய தியாகிகளின் கனவை நனவாக்க சபதமேற்போம்!**

**தொழிலாளர், விவசாயி மாணவர் மற்றும் அறிவு ஜீவிகளின் ஒற்றுமை நீடூழி வாழ்க!**

படிப்பகம்